Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 24 ரூபா 20.00

දිනමුරසු වාරමලර්

பெப். 23 - மார்ச். 01, 2006

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 651

## அரசு - புலிகள் பொறுப்பற்ற தன்மைகள்

பக்கம் ~ 4

## கடை விரிக்கும் தேர்தல் வியாபாரிகள்

பக்கம் ~ 5




# ஆன்மீகம்

## பூசத்தின் பெருமை

**பூசம்** நட்சத்திரத்தில் பிறந்தால் நாசம் என சிலர் தவறாகச் சொல்கின்றனர். இதை புஷ்யம் என்றே சொல்ல வேண்டும். இதில் பிறந்தவர்கள் சிரமப்பட்டு மேல்நிலைக்குச் செல்கின்றனர். எப்பேர்ப்பட்ட கஷ்டத்தையும் தாங்கும் சக்தி இவர்களுக்கு உண்டு. இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் பெற்றோர் மீதும், பெற்றோர்கள் குழந்தைகள் மீதும் பாசத்தைச் செலுத்துவர். பெற்றோரின் ஆசி பெற்ற இவர்கள் நீடூழி வாழ்வார்கள்.

பூச நட்சத்திரத்தன்று சிவாலயங்கள் அதிகாலையிலேயே திறக்கப்பட வேண்டும். முதல் நாளே கோயிலை சுத்தம் செய்ய வேண்டும். பூசத்தன்று சுவாமியும் அம்பாளும் கோயில் முழுவதும் ஆனந்த தாண்டவமாடுவதாக ஐதீகம். அவர்கள் நடனமாடி வரும் பாதை மிகவும் சுத்தமாக இருக்க வேண்டும். அப்படியானால் தான் அவர்களது அருள் நமக்கு கிடைக்கும்.

எஸ்.மணி, ஊர்காவற்றுறை



## கர்த்தருக்கு மறைக்காதே!

"நீ உன் தேவனுடைய வேதத்தை மறந்தாய். ஆகையினால் நானும் உன் பிள்ளைகளை மறந்து விடுவேன்."

-ஓசியா 4:6.

இது கர்த்தர் நமக்குக் கொடுக்கும் எச்சரிக்கை. எமது பிள்ளைகள் எமக்கு அடங்காமல் இருக்கின்றார்களா? கெட்ட வழியில் நடக்க முயற்சி செய்கின்றார்களா? எம்மை ஏமாற்றப் பார்க்கின்றார்களா? சகோதர, சகோதரிகளே! அப்படி நடந்தால் அது பிள்ளைகளின் குற்றமல்ல. நாம் தேவனுக்கு முன்னால் முழங்கால் படியிட்டு ஜெபிக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது என்று அர்த்தம். எமது வாழ்க்கையில் தேவனுக்கு விரோதமான காரியம் எங்கோ ஒளிந்திருக்கின்றது. நாமே குற்றவாளிகள். தேவனுக்கு முன்னால் எமக்குள் மறைந்திருக்கும் அந்தரங்கமான பாவங்களை அறிக்கையிட்டு சீர்ப்படுத்துவோம். அப்போது கர்த்தர் குடும்பத்திலே கணவன், மனைவி, பிள்ளைகளிடையே ஒருமைப்பாடு, சமாதானம், சந்தோஷம் ஆகியவற்றைக் கட்டளையிடுவார்.

உலகம் கொடுக்காத சமாதானத்தை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கொடுப்பார்.

ஆமென்.

-கிறிஸ்டி நேசன், ஹட்டன்.

## அல்லாஹ்வின் அருள்

**இன்று** எம்மில் பலர் தம்மைவிட மற்றவர்கள் செல்வத்திலும் ஆரோக்கியத்திலும் தாழ்ந்தே இருக்க வேண்டுமென எண்ணுகின்றனர். தம்மைவிட மற்றவர்கள் வேகமாக முன்னேறுவதைக் கண்டால் எப்படியாவது அந்த முன்னேற்றத்திலிருந்து அவர்களை தடுத்து நிறுத்த வேண்டுமெனச் சதித் திட்டம் தீட்டுகின்றனர்.

நம் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தியா அவர்கள் முன்னேறுகிறார்கள்? எமக்கு மூளையுண்டு; சிந்தனா சக்தியுண்டு. அதனை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும். அப்போதுதான் அந்தச் சிந்தனையின் உதயத்தில் ஒளி பிறந்து நம் உயர்வுக்கு ஓர் பாதை தெரியும்.

மாறாக, மனதில் ஒரு விதமாகவும், வெளியில் வேறு விதமாகவும் நாம் வாழக்கூடாது. அல்லாஹ் அகிலத்தில் வெளிப்படையாக நடக்கும் செயல்களைப் பார்ப்பதுபோல் எமது மனதில் ஏற்படும் எண்ணங்களையும் அறிந்தவனாக இருக்கின்றான்.

நாம் மற்றவர்களின் முன்னேற்றத்தைக் கண்டு பொறாமைப் படக் கூடாது. எமது பொறாமையின் காரணமாக எமக்கு அல்லாஹ் அருள வேண்டியதை அருளாமல் விட்டுவிடுவான்.

-எம்.சி.கலீல், கல்முனை - 05.

## கவிதைப் போட்டி இல.648



பரிசுக்குரிய கவிதை

### எதுக்காக..?

கத்திக் கதறி
கையேந்துவது
சாப்பாட்டுக்கா..?
இல்லை,
சாகக் கிடக்கும்
சமாதானத்துக்கா...?

–சங்கம ஹிஷாம், திருகோணமலை.

## கவிதைப் போட்டி இல.651



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி 01.03.2006.

கவிதைப் போட்டி இல.651
தினமுரசு வாரமலர், த.பெ. இல–1772, கொழும்பு.

### சமாதி

இங்கில்லை என்பதாலா?
எங்கெல்லாமோ தேடுறார் சமாதானம்!
அதனால் அவர்கள் சம(த்)து ஆனார்!
ஆனால் நாமோ சமாதி ஆகிறோம்?
எனக்குப் புரிவது!
உனக்குப் புரியலையா?

–ஏ.எம்.அஷ்ரப், கொழும்பு – 05.

### ஏக்கம்

இறைவா!
பெற்றெடுத்த தாயுமில்லை
தத்தெடுக்க யாருமில்லை
துணையற்ற எனை
துஷ்பிரயோகம்
துரத்துகிறது
துணைபுரி தூயோனே.

–ரி.எல்.எம்.அனீஸ், ஏறாவூர் – 01.

### அருட்கரம்

அபயக்
கரத்தில்
அள்ளிவைக்கும்
ஆண்டவனின்
அருட்கரங்கள்.

–காமீம் செய்னுலாப்தீன், கிண்ணியா – 05.

### கிடைக்குமா?

குழந்தை நிற்கிறது!
சாப்பாட்டுக்கு
கை ஏந்தி...
குடிமக்கள்
நிற்கிறோம்!
சமாதானத்துக்கு
கை ஏந்தி!

–ஏ.எல்.பர்ஸாத், ஏறாவூர் – 02.

### ஓடிவிடு!

இன்னும் சிறிது நேரம்
இங்கிருந்து
கையேந்தினால்
உன் கையிலும்
ஆயுதமளித்துப்
போராளியாக்கி
விடுவர் சிலர்.
உடனே எழுந்து
ஓடிவிடு.

–ஜிப்ரி பஸ்னா, வாழைச்சேனை.

### என் தலைவர்களே!

பொறுமையின்
எல்லையில் என்ற
வீரப் பேச்சும்
வருவதை சந்திக்க
தயார் என்ற
வாய் வீச்சும்
அரை வயிற்று
கஞ்சிக்கு கையேந்தும்
- எம்
தேசத்துக்கு
உரித்துடையதல்ல!

–சீனிராசா எடிசன், கொழும்பு – 13.




### சம(ர)தான வேண்டுகோள்!

நீ - அழுது;
வேண்டுகிறாய்...
பால் பானம் -
கிடைப்பதற்காய்!
நாம் - அழுது
வேண்டுகிறோம்...
சம(ர)தானம் -
கிடைப்பதற்காய்!

–ஏ.வாஹிட் ஏ.குத்துஸ், பதுளை.

### உயிர் தாங்குமா?...

அமுதப் பால்
ஊட்டிய
அம்மா போய்(6) மாதம்
புட்டிப்பால்
ஊட்டிய
அப்பாபோய்(6) நாட்கள்
இறைவா?
உறவுப் பால்
ஊட்ட
ஊரார் வருவதற்குள்
உயிர் தாங்குமா?...

–ஏ.எம்.அப்துல்றகுமான், தம்பலகாமம்.

### தெளிவு

சமாதானம் மட்டுமே
தொலைக்கப்பட்டதாய்
எண்ணியிருந்தோம்
மனிதம் கூட
மரித்துவிட்டதென்று
இக்காட்சி
கண்டுதான்
அறிந்திருக்கிறோம்!

-ஏ.ஆர்.எம்.நதார், திருகோணமலை.

### பிறப்புரிமை

மரணங்கள் மலிந்து - தினம்
குருதி கசியும் இப்பூமியில்
பிறந்து விட்டாய் - இனி
இறுதி வரை கதறியழுவதே
உன் பிறப்புரிமை!

–அ.சந்தியாகோ, கண்டி.

# வாசகர் சாலை

### அனைத்தும் பொக்கிஷங்கள்!

அன்பின் முரசே!
வாரம் ஒரு முறை
சிறப்பாய் வெளிவருகின்றாய்.

வாசக நெஞ்சங்களை மகிழ்விக்க
புதுப் புது விடயங்களை
அள்ள அள்ளக் குறையாமல்
திகட்டாமல் தரும்
என் இதயத்திற்குள் இடம் பிடித்த
இனிய முரசு நீ.

உன் பக்கங்கள் ஒவ்வொன்றும்
ஆக்கங்கள் அல்ல;
அவை பொக்கிஷங்கள்.
எனவே பத்திரமாய்
சேமித்து வைக்கின்றேன்.

–பே.சித்ரா, நெடுந்தீவு.

### சேவை தொடரட்டும்

யாசிக்கிறேன் முரசே!
வாரந்தோறும் காத்திருந்து உனை வாசிக்கும் ஒரு வாசகன். எப்போதும் உனை விரும்பியே படிக்கிறேன். உனது ஒவ்வொரு ஆக்கமும் எனக்குப் பயனுள்ளதாக உள்ளது. தொடர்ந்தும் உன் வீர சேவை தொடர வேண்டும். எனது மனமார்ந்த பாராட்டுக்கள்.

-ஏ.எம்.அகிலா, இராஜகிரிய.

### பிரியமான வாழ்த்துக்கள்!

என் இதயத்தைக் கொள்ளை கொண்ட
என் பிரியமான தினமுரசுக்கு
நீ சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் சூப்பர்.
அதிலும் கவிதைகள், சிறுகதைகள், தொடர்கதைகள்
தேன் கிண்ணம், சிந்தியா பதில்கள்
உட்பட அனைத்து அம்சங்களும்
என்னைக் கவர்ந்த பகுதிகளாகும்.
உன் சேவை தொடர்ந்தும்
இவ்வையகம் முழுவதும் பிரகாசிக்க
என் பிரியமான வாழ்த்துக்கள்.

–கிருஷ்ணவேணி, கொட்டகல.

### ஒலிக்கட்டும் முரசு!

தமிழ் மக்களின் உள்ளங்களைக்
கொள்ளை கொண்ட முரசே,
யாருக்கும் அஞ்சாமல் ஒளிவு மறைவு
இன்றி - பக்கச் சார்பின்றி
உண்மைகளை வெளிக்காட்டும் திறன்
உனக்கு மட்டுமே உண்டு. வாழ்க
உன் பணி. தொடர்ந்து ஒலிக்கட்டும்
உன் முரசம்.

–ஜீ சஜீவா, இராஜகிரிய.

### சுவை சொட்டுகிறது!

இதய முரசுக்கு
இனிய காதலர் தின
வாழ்த்துக்களுடன்
நீ சுமந்து வந்த 649ஆவது
முரசு
சுவைபட இருந்தது.
அதில் தாமரைமகனின்
காதல் பற்றிய செய்தி மிக
அருமை.
தேன்கிண்ணம்
கொண்டுவந்த
கவிதைகள், சிறுகதைகள்
பிரமாதமாக இருந்தன.
பாராட்டுக்கள்.

–நூர்ஸா பீபி, கிண்ணியா – 03.

# உங்கள் பக்கம்

## தெருவிளக்குகள் இன்றி கல்முனை மாநகர மக்கள் கடும் சிரமம்


**கல்**முனை மாநகரத்திற்குட்பட்ட கல்முனை - சாய்ந்தமருது கடற்கரை வீதிகளில் கடந்த வருடம் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின் பின் இன்று வரைக்கும் வீதி மின் விளக்குகள் பொருத்தப்படாமை குறித்து ஊர் மக்கள் கவலையடைகின்றனர்.

கடந்த 26.12.2004 வரை இவ்வீதி மிகவும் கவர்ச்சியாகவும், பிரகாசமாகவும் இருந்தது. சுனாமி அனர்த்தத்தின் பின் இம் மின் விளக்குகள் அனைத்தும் முற்றாக சேதமடைந்ததனால் இவ்வீதி மயானம் போன்று தற்போது காட்சியளிக்கிறது. இரவானதும் இப்பகுதி இருள் சூழ்ந்த வண்ணம் காணப்படுகிறது. இதனால் இப்பகுதி ஏழை மீனவக் குடும்பங்கள் பெரிதும் சிரமங்களுக்குள்ளாகின்றனர். இரவு நேர தொழுகையைப் பூர்த்தி செய்வதில் பெரும் சிரம்ப்படுகின்றனர். பிரயாணத்தை மேற்கொள்ளவும் அப்பகுதியில் அஞ்சுகின்றனர்.

எனவே, இப்பகுதி மக்களின் உடனடித் தேவையான இத் தெரு விளக்குகளை உடனடியாகப் பொருத்தி இம் மக்களின் கஷ்டங்களைப் போக்குமாறு பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளை இப்பகுதி மக்கள் தினமுரசினூடாகக் கேட்டுக்கொள்கின்றனர்.

-எஸ்.எச்.எம்.ரம்சாத், கல்முனை - 07.


மடல்கள் மற்றும் ஆக்கங்கள்– உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):–011 4-513266
ஈ–மெயில்: (E-mail):–
murasu@sltnet.lk



ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அவர்கள், வன்னி மாவட்ட உள்ளூராட்சி சபைத் தேர்தல்களுக்கான நியமனப் பத்திரங்களை, வவுனியா செயலகத்தில் தாக்கல் செய்த பின்னர் ஊடகவியலாளர்களுடன் கலந்துரையாடுகையில் எடுக்கப்பட்ட படம்.

*"1994களில் தேர்தலில் போட்டியிடுபவர்கள் துரோகிகளெனக் கணித்துச் சுட்டுக் கொல்லப்படுவார்களென்று புலிகள் எச்சரிக்கை விடுத்தபோதும் நாம் துணிந்து நின்று போட்டியிட்டோம். பின்னர் புலிகளே தமது நிலைப்பாட்டை மாற்றி தமது முகவர்களை, தமிழ் தேசியக் கூட்டமைப்பினரை போட்டியிட வைத்தார்கள். இன்று நாம் அரச கட்டுப்பாட்டிலில்லாத பகுதிகளிலும் போட்டியிட முன் வந்துள்ளோம். இப் பகுதி மக்களுக்கும் எமக்கும் நீண்டகாலத் தொடர்புகள் உண்டு. நான் இந்து சமய அமைச்சராகப் பணிபுரிந்தபோது முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள 119 இந்து ஆலயங்களுக்கு உதவிகள் வழங்கியுள்ளேன். எமது சமூக, சமய, அரசியல், பொருளாதாரப் பணிகள் தொடரும்" என்றும் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.*

# இலங்கை அரசு இரட்டை வேடம் போடுகிறது

## -ஜெனீவாவில் தமிழ்ச்செல்வன் கண்டனம்

"சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு எமது இயக்கத்தை அழைப்பதற்குப் பகீரத முயற்சிகளை மேற்கொண்டுவரும் இலங்கை அரசாங்கம், சர்வதேச அரங்கில் எமக்கெதிரான நடவடிக்கைகளைத் தீவிரமாக முடுக்கி விட்டுள்ளது. நாம் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும், மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவதாகவும் சர்வதேச அரங்குகளில் தீவிர பிரசாரம் செய்து வருகிறது. இதனால் நாம் பெரும் சிக்கலை எதிர்நோக்கியுள்ளோம். இலங்கை அரசின் இந்த இரட்டை வேடத்தை முறியடிப்பதற்குப் புலம்பெயர்ந்து வாழும் மக்கள் மத்தியில் இயங்கும் எமது அமைப்புகள் கவனமாகவும் தீவிரமாகவும் செயற்பட வேண்டும்" என்று புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் ஜெனீவாவில் தெரிவித்தார்.

கடந்த இருபதாம் திகதி ஜெனீவாவிலுள்ள சர்வதேச தமிழர் சம்மேளனக் காரியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையிலேயே தமிழ்ச்செல்வன் இவ்வாறு கூறினார். மேற்படி சம்மேளனத்தின் இணைப்புச் செயலாளர் அன்ரன் பொன்ராஜா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில், பாரிஸ் புலிகளின் சார்பில் கிருபா கரன் கலந்து கொண்டார். "இலங்கை அரசு தெரிவித்த குற்றச்சாட்டுகளையடுத்தே பிரிட்டனில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சொத்துகள் முடக்கப்பட்டதோடு, அது தடை செய்யப்பட்டது. கனடாவிலும், அமெரிக்காவிலும் கிடைத்த நிதியைக் கொண்டு நாம் ஆயுதங்களை வாங்கி யதாக பிரிட்டிஷ் நன்கொடை ஆணைக்குழு எம்மீது குற்றஞ்சாட்டியுள்ளது. தற்போது எமது மற்றொரு அமைப்பான 'வெண்புறா' தொண்டு நிறுவனத்தின் செயற்பாடுகள், நிதி கணக்கு வழக்குகள் பற்றியும் பிரிட்டிஷ் அரசு விசாரணை நடத்தி வருகிறது. கனடாவில் கன்சர்வேட்டிவ் கட்சி பதவிக்கு வந்ததையடுத்து எமது நிதி சேகரிப்பு நடவடிக்கைகள் பெரும் நெருக்கடிக் குள்ளாகியுள்ளன. கனடாவில் எமக்காகச் செயற்பட்ட 47 தமிழ் இளைஞர்கள் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

அவுஸ்திரேலிய அரசும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அலுவலகத்தினைச் சோதனையிட்டு பல ஆவணங்களைக் கைப்பற்றியுள்ளது. அங்கும் நாம் நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. எம் மீது தெரிவிக்கப்பட்ட மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளை அடுத்தே பயணத் தடை விதிக்கப்பட்டது. அது மட்டுமல்ல, ஐரோப்பிய நாடுகளில் எமக்கெதிரான சக்திகள் ஸ்தாபனமயப்பட்டு செயற்பட ஆரம்பித்துள்ளன. இப் புதிய நிலைமைக்கு இலங்கை அரசும், துரோக சக்திகளுமே காரணமாகும். எனவே உங்கள் செயற்பாடுகளில் இரகசியம் பேணப்பட வேண்டும். புதிய வழிமுறைகள் கையாளப்பட வேண்டும்" என்று கூறினார் தமிழ்ச்செல்வன்.

கேள்வியொன்றுக்குப் பதிலளித்த தமிழ்ச்செல்வன், "யுத்த நிறுத்த காலத்தில் எமது இயக்கம் 3467 அத்துமீறல்களில் ஈடுபட்டதாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு விடுத்திருக்கும் அறிக்கை தவறானது. நாம்தான் இந்த அத்துமீறல்களில் ஈடுபட்டோமென்று கூற முடியாது. படையினரே அத்துமீறல்களில் ஈடுபட்டுவிட்டு எம் மீது பழியைப் போட்டுள்ளனர்" என்று கூறினார். அப்படியானால் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு அரசுக்குச் சார்பாகச் செயற்படுகின்றதென்று கூறுகிறீர்களா? என்று கேட்டபோது, "அப்படியல்ல. எப்படியோ தவறு நிகழ்ந்திருக்கிறது" என்று பதிலளித்தார் எஸ்.பி.

கூட்டத்தில் கேள்விகள் கேட்க முனைந்த சிலருக்கு, 'நேரம் போதாமையினால் பதிலளிக்க முடியவில்லை' என்று பதில் கூறப்பட்டது.

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு முல்லைத்தீவிலிருந்து வாழ்த்துக்கள்

புதுக்குடியிருப்புப் பிரதேச சபைக்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தெரிவு செய்யப்பட்டதையடுத்து முல்லை மாவட்டத்திலிருந்து ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவுக்கு வாழ்த்துச் செய்திகள் குவிந்த வண்ணமிருக்கின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள, புதுக்குடியிருப்புப் பிரதேச சபைக்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டிருக்கிறது. புலிகள் ஆதிக்கம் செலுத்தும் முல்லைத்தீவு மாவட்டத்திலேயே மிகப் பாரிய பரப்பளவைக் கொண்ட பிரதேச சபை புதுக்குடியிருப்புப் பிரதேச சபையாகும். புலிகளின் முக்கியத்துவமிக்க பகுதிகளிலொன்றாகவும் இது கருதப்படுகிறது. ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள், புதுக்குடியிருப்புப் பகுதிக்குச் செல்வதற்கு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வழித்துணையைக் கோருவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது. அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்து போவதற்குப் புலிகள் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வழித்துணையைக் கேட்பது போல, புலிப் பகுதிக்குச் செல்ல ஈ.பி.டி.பி. வழித்துணை கேட்கத் தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகிறது.

யுத்தத்தின் கோர வடுக்களைத் தாங்கி நிற்கும் புதுக்குடியிருப்பு வாழ் மக்கள் அன்றாட ஜீவனோபாயத்திற்குப் பெரிதும் கஷ்டப்படுகின்றனர். தொழில் வாய்ப்பு, கல்வி, சுகாதாரம், குடியிருப்புப் போன்ற பல அன்றாடப் பிரச்சினைகளுக்கு அவர்கள் முகங்கொடுத்து வருகின்றனர். இந்த நிலையில் எதிர்கால நடவடிக்கைகள் தமக்குப் பயன்மிக்கதாக அமையுமென்று அம் மக்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

## லண்டனில் ஆர்ப்பாட்டம்

இலங்கையில் சமாதானம் பேணப்பட வேண்டுமென்றும், மனித உரிமை மீறல்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்து, 'சமாதானத்துக்கான தமிழர் அமைப்பு' என்ற இயக்கம் லண்டனிலுள்ள ட்ரா ல்ஸ்கர் சதுக்கத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தியது. கடந்த 19ஆம் திகதி நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி உட்பட ஏழு தமிழ், முஸ்லிம் அமைப்புகள் பங்குபற்றின. புலிகளின் ஆயுதங்கள் களையப்பட வேண்டு மென்றும் இங்கு கோஷங்கள் எழுப்பப்பட்டன.

## நோர்வேயில் தமிழ் இளைஞருக்கு கொலை அச்சுறுத்தல்

நோர்வேயில் இயங்கிவரும் தாராளவாத ஜனநாயகத் தமிழ் அமைப்பின் தலைவரான ராஜன் சிவராஜாவுக்குக் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதென்று ஒஸ்லோவிலிருந்து வெளிவரும் 'நை ரிட்' என்ற பத்திரிகையில் செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது. இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இடம்பெற்று வரும் அரசியல் படுகொலைகள், ஆட்கடத்தல்கள் கப்பம் மற்றும் வரி வசூலித்தல், வயது குறைந்த பிள்ளைகளைப் படையணிகளில் சேர்த்தல் போன்ற புலிகளின் நடவடிக்கைகளுக்கு எதிராகக் குரல் கொடுத்து வருபவர் ராஜன் சிவராஜா. நோர்வேயின் புரூஸ்ற் பகுதியிலுள்ள இவரது வீட்டுக்குச் சென்ற துப்பாக்கிதாரியொருவர், அவரை வெளியே அழைத்து மரண அச்சுறுத்தல் விடுத்தாரென்று செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஒருவர் துப்பாக்கி சகிதம் தனது வீட்டுக்கு அண்மையிலுள்ள பற்றைக்குள் மறைந்திருக்க மற்றவர், பிஸ்டலை எடுத்துத் தனது தலைக்கு நேரே குறிவைத்து 'இனிமேல் புலி எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடாதே. இதுவே உனக்கு இரண்டாவதும் கடைசியுமான எச்சரிக்கையாகும்' என்று மிரட்டினாரென்று ராஜன் தெரிவித்திருக்கிறார். கடந்த வருடம் ஏப்ரல் மாதம் முதல் தடவையாகத் தனக்குக் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதென்றும் அவர் சொன்னார். கடந்த வருடம் இலங்கையில் சமாதானத்துக்கான உலகக் கூட்டணி" நோர்வேயின் தலைநகரான ஒஸ்லோவில் நடத்திய கருத்தரங்கில் ராஜன் சிவராஜாவும் புளொட் அமைப்பைச் சேர்ந்த ஜெகநாதனும் பங்குபற்றினர். தமிழீழக் கோரிக்கை சாத்தியமற்றதென்றும், வடக்கு - கிழக்கு வாழ் மக்களின் அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படுகின்றனவென்றும் இவ்விருவரும் அங்கு கருத்துக்கள் தெரிவித்திருந்தனர்.

## சூரிச் இரவு விருந்தியில் நிதி சேகரிக்க நடன நிகழ்ச்சி

சுவிற்சர்லாந்தின் சூரிச் நகரிலுள்ள மடஸ்ரர் என்ற இடத்திலுள்ள தமிழினி இரவு விடுதியில் புலிகள் இயக்கத்தின் நிதி சேகரிப்பு வைபவமொன்று 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற ஏற்பாடாகியிருக்கிறது. தமிழ் டெலிவிசன் நெற்வேர்க், இன்டர் நேசனல் புறோட்காஸ்ரிங் கோர்ப்பரேசன், ஈழமுரசு தமிழ் பத்திரிகை ஆகிய புலிகளின் முகவரமைப்புகள் இதற்கென இரவு விருந்தொன்றினையும் நடன நிகழ்ச்சியையும் ஏற்பாடு செய்துள்ளன. ஆடிப் பாடிக் கும்மாளமிடும் இக்களியாட்ட நிகழ்ச்சிக்கு தமிழ் வர்த்தகர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். தமிழ்ச்செல்வன், நடேசன், ஜெயம் ஆகியோர் இந்த நிகழ்ச்சியில் பங்குபற்றுவார்களென்றும், தமிழ் வர்த்தகர்கள் கலந்துகொண்டு தாராளமாக நிதி வழங்க வேண்டுமென்றும் அழைப்பிதழில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அழைப்பிதழ் கடந்த 15ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. பல தமிழ் வர்த்தக நிலையங்களுக்கு நேரடியாகவே சென்று இந்த அழைப்பிதழ்களைப் புலி முகவர்கள் வழங்கியுள்ளனர். ஏற்கனவே மாதாந்த அடிப்படையில் செலுத்திவரும் நிதிக்குப் புறம்பாக மேலதிகமாக உதவு தொகைகளை வழங்குமாறு வர்த்தகர்கள் கேட்கப்பட்டிருக்கிறார்கள். இதைப் போன்று நிதி சேகரிப்பதற்கெனப் பல நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாகவும் தமிழ் வார்த்தகர்கள் அங்கலாய்த்திருக்கின்றனர். இதேவேளை புலிகள் இயக்கத் தூதுகோஷ்டி ஜெனீவா வந்து சேர்வதற்கு முன்னதாகவே பல ஐரோப்பிய நாடுகளிலிருந்து அழைக்கப்பட்டிருந்த புலி இயக்க முகவர்களுடன் நிதி சேகரிப்புத் தொடர்பாகப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

## திருச்சபை கண்டனம்

வடக்கு - கிழக்கில் யுத்த நிறுத்த ஒப்பந் தத்தை மீறி வன்செயல்களிலும் அத்து மீறல்களிலும் ஈடுபட்டு வரும் புலிகள் இயக் கத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அவ்வாறு சமாதானச் செயற்பாடு களுக்கு அவர்கள் ஒத்துப் போக மறுத்தால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று இலங்கை திருச்சபையின் தலைவர் போதகர் டுலீப் டீ சிகேரா விடுத்த அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார். ஆயுத சக்திகளை நிராயுதபாணிகளாக்க வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

## யாழ்., மட்டக்களப்பில் 19 சமூகப் பராமரிப்பு நிலையங்கள்

யாழ்ப்பாணத்தில் 10 சமூக பராமரிப்பு மத்திய நிலையங்களும் மட்டக்களப்பில் 9 சமூக பராமரிப்பு மத்திய நிலையங்களும் அமைக்கப்படவுள்ளன. இதற்கான காணிகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பான நடவடிக்கைகளை அமைச் சர் டக்ளஸ் தேவானந்தா மேற் கொண்டுள்ளார். முல்லைத்தீவு, கிளிநொச்சி, அம்பாறை மாவட்டங் களிலும் சமூகப் பராமரிப்பு நிலை யங்கள் அமைக்கப்படவுள்ளன. நாடளாவிய ரீதியில் 322 சமூகப் பராமரிப்பு மத்திய நிலையங்களை அமைக்கும் திட்டத்தின் முதற் கட்டமாக 60 நிலையங்களை அமைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டப் பணிகளின் முன்னேற்றம் பற்றிய ஆய்வுகள் கடந்த 13ஆம் திகதி சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் தலைமையில் அமைச்சில் இடம்பெற்றன. சமூகத்தில் பல்வேறு பாதிப்புகளுக்கு உள்ளாக்கப்படுகின்ற மக்களைப் பராமரித்து அவர்களை உரிய துறைகளின்பால் செலுத்தும் முகமாக ஆரம்பிக்கப்படவுள்ள மேற்படி வேலைத்திட்டத்தின் மாதிரி சமூகப் பராமரிப்பு மத்திய நிலையம் தற்போது பாணந்துறை பகுதியில் நிர்மாணிக்கப்பட்டு வருவதுடன் அதன் பின்னர் பேருவளை மற்றும் பெந்தோட்டைப் பகுதிகளிலும் அமைக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. யுனிசெப் மற்றும், 'சேவ் த சில்ரன் ஒப் ஸ்ரீ லங்கா' போன்ற நிறுவனங்களின் மூலம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மேற்கொள்ளப்படுகின்ற இத் திட்டத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளில் ஐக்கிய நாடுகளின் திட்டமிடல் சேவைகள் அலுவலகம் ஈடுபட்டுள்ளது.

## வடக்கு – கிழக்கிலும் பறவைக் காய்ச்சல்

இலங்கையின் வடக்கு, கிழக்கில் பறவைக் காய்ச்சல் நோய் பரவக்கூடிய அபாயம் இருப்பதாகக் கால்நடை நோய் கட்டுப்பாட்டு அமைப்பின் தலைவரான டாக்டர் ஆர்.அமரசேகரா எச்சரிக்கை விடுத்துள்ளார். வெளிநாடுகளிலிருந்து பறவைகள் வடக்கு / கிழக்குக்கு வந்து சேர்வதாகவும் தமிழகத்திலிருந்து சட்டவிரோதமாக மன்னார் போன்ற பகுதிகளுக்கு வள்ளங்கள் வந்து செல்வதும் இதற்குக் காரணமென்றும் அவர் சொன்னார். அரச கட்டுப்பாட்டிலில்லாத பகுதிகளிலே இந்த அபாயம் அதிகமிருப்பதாகவும் அதனால் தம்மால் உரிய நடவடிக்கை எடுக்க முடியவில்லையென்றும் அவர் சொன்னார்.

## தமிழரசுக்கட்சியிடம் ஒரு கேள்வி

"யாழ்ப்பாண மக்களை வன்னிக்கு இடம்பெயருமாறு புலிகள் விரட்டிய போதும், மிரட்டிய போதும் வாய்மூடி மௌனிகளாக அமைதி காத்த தமிழரசுக் கட்சியினர் இன்று எந்த முகத்தோடு அந்த மக்களுக்கு முகங் கொடுக்கப் போகின்றனர்" என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் சில்வெஸ்திரி அல்ட்ரின் உதயன் கேள்வி யெழுப்பினார். யாழ். மாநகர சபைத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்த பின்னர் கட்சிப் பணிமனையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

## தொண்டர் ஆசிரியர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம்

நாடெங்கிலுமுள்ள அரசாங்கப் பாடசாலைகளில் பணிபுரியும் தொண்டர் ஆசிரியர்களை நிரந்தர சேவையில் சேர்க்கும் வேலைத்திட்டத்தைத் துரிதப்படுத்த கல்வியமைச்சு முன்வந்துள்ளது.

இது தொடர்பான விண்ணப்பங்களை இம் மாதம் 28ஆம் திகதிக்கு முன்னர் மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது. வடக்கு - கிழக்கில் ஆறாயிரம் தொண்டர் ஆசிரியர்கள் பணிபுரிகின்றனரென்று, இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்த புள்ளிவிபரங்கள் பிழையானதென மாகாணக் கல்விப் பணியகத்தைச் சேர்ந்த பேச்சாளரொருவர் தெரிவித்தார். நியமனம் வழங்குவதில் அநாவசியமான வெளியார் தலையீடுகள் இருப்பதாகவும் மிரட்டிக் காரியங்களைச் சாதிக்கும் நபர்களுக்கு தம்மால் முகங்கொடுக்க முடியாதென்றும் அவர் மேலும் சொன்னார்.

தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk


# முரசம்

## வெற்றியைத் தராத வெட்டிப் பேச்சுக்கள்

***அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.***

**ஜெனீவா** பேச்சுக்கள் தோல்வியில் முடியுமாக இருந்தால் நாட்டில் மோசமான நிலை ஏற்படும் என்று போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு சொல்லித்தான் தெரிய வேண்டியதில்லை. அவ்வாறானதொரு நிலையை ஏற்படாமல் தடுப்பதும், இருதரப்பையும் சமரசத்துக்குக் கொண்டு வருவதுமே இன்றையத் தேவையாக உள்ளது. இலங்கையின் விவகாரத்தில் நோர்வேயின் தலையீடு சர்வதேசத்தின் அனுசரணையோடு நடப்பதால் இரு தரப்புப் பேச்சுவார்த்தைகள் அவ்வளவு சீக்கிரத்தில் முறிந்துபோகும் என எண்ணுவதற்கில்லை என்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் இன்னும் எஞ்சியிருக்கிறது.

ஜெனீவாப் பேச்சுக்களை சுமுகமாக நடத்தி நிரந்தர சமாதானப் பேச்சுக்கும் வழி வகுப்பதே தமது நோக்கமென அரசு கூறி வருகிறது. இதற்கு எதிர்மாறாகப் புலிகள் ஜெனீவா பேச்சுக்களின் போது எவ்வித விட்டுக்கொடுப்புக்கும் இடமேயில்லையென்றும், இது எந்த வகையிலும் நிரந்தர அமைதிப் பேச்சுக்கான வாசலைத் திறக்காது என்றும் கூறி வருவதானது மக்களுக்கு இருக்கும் சமாதானம் மீதான நம்பிக்கையைக் குழி தோண்டிப் புதைப்பதாகவே உள்ளது.

போர் நிறுத்த ஒப்பந்தத்தின் முறையான அமுலாக்கத்தை வலியுறுத்திய பேச்சுவார்த்தையே ஜெனீவாவில் இடம்பெறும் எனக் கூறும் புலிகள், தமது பக்கத் தவறுகளை ஏற்றுக்கொள்ளவும் - திருத்திக் கொள்ளவும் மறுக்கின்றனர். போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கு முற்றிலும் விரோதமான ஆயுதக் கடத்தல், சிறுவர்களைப் படைக்குச் சேர்த்தல், மனித உரிமைகளை மீறுதல் போன்ற ஒப்பந்த மீறல்கள் தாராளமாகவே இடம்பெற்று வருகின்றன. மீன்பிடிப் படகுகள், பஸ் வண்டிகள் மூலம் வெடிகுண்டுகளையும், ஆயுதங்களையும் கடத்துவதும், வெடிப் பொருட்களை தாக்குதல் நோக்கத்தோடு மறைத்து வைப்பதும் இன்னும் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன.

இவற்றை ஒரு முடிவுக்குக் கொண்டு வராமல், படுகொலைகள் இடம் பெறாது என்ற உத்தரவாதத்தை வழங்கத் தயாரில்லாத எவரும் சமரசம் பேசுவதும், சமாதான பரப்புரை செய்வதும் கபடத்தனமானதும், மக்களையும், சர்வதேச சமூகத்தையும் அப்பட்டமாக ஏமாற்றுவதுமாகவுமே இருக்கும். மக்களின் நிம்மதியானதும் நலன் சேர்ந்ததுமான செயற்பாடுகளுக்காகவும், உண்மையான சமாதானத்துக்கு அர்ப்பணிப்புடனான உழைப்புக்காகவும், மனித உரிமைகளையும், உயிர்களையும் மதித்து நடக்கவும் உளப்பூர்வமாகப் பாடுபடாத, மக்கள் மீதான நேசிப்பற்ற போராட்டமும் சரி, சமாதான முயற்சியும் சரி ஒரு காலமும் வெற்றியளிக்கப் போவதில்லை. அவ்வாறானதொரு வரலாறும் இதுவரையும் இல்லை. இவ்வாறான அமைதிச் சூழலைத் தோற்றுவிக்கும் காரணிகளை உதறித் தள்ளிவிட்டு தாய்லாந்து, ஒஸ்லோ, டோக்கியோ, ஜெனீவா என்று வெறுமனே தேசங்கள் திரிந்து பேசுவதில் அர்த்தமில்லை என்பதை இன்றைய யதார்த்தம் தெளிவாக உணர்த்தியுள்ளது. ஆகவே உண்மையான சமாதான அவாவும், விட்டுக்கொடுப்பும், அர்ப்பணிப்பும் இல்லாமல் சந்திர மண்டலத்துக்குப் போனாலும் சாத்தியப்படப் போவதில்லை. புற்றுநோயை அதிகரிக்க விட்டுவிட்டு காய்ச்சலுக்கு மாத்திரை போட்டுக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. இப்போது நடக்கின்ற பேச்சுவார்த்தையையும், சமரசர முயற்சிகளையும் பார்க்கின்றபோது புற்றுநோய்க்கான அறுவைச் சிகிச்சை செய்யாமல் தலையிடி, காய்ச்சலுக்கு மாத்திரை சாப்பிடுவதுபோல்தான் உள்ளது.

எனவே சாக்குப் போக்குக்காக நடத்தப்படும் இவ்வாறான கபடத்தனமான பேச்சுக்களை விட்டு, நிரந்தர சமாதானத்துக்காக பேச்சுக்களை ஆரம்பிப்பதும், அதற்காக சம்பந்தப்பட்ட தரப்புகள் கொண்டிருக்கும் தீர்வுத் திட்டங்களை முன் வைப்பதுமே இந்த நாட்டில் நிரந்தர அமைதிக்கு வழிவகுக்கும்.

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

---

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

# அரசு - புலிகள் பொறுப்பற்ற தன்மைகள்

நரன்

**இலங்கை** அரசாங்கத்துக்கும் புலிகளுக்குமிடையிலான யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு சரியாக நான்கு வருடங்களின் பின்னர் அந்த ஒப்பந்தத்தை வலுப்படுத்தி, அத்துமீறல்களைத் தடுப்பது பற்றிய பேச்சுவார்த்தை ஜெனீவாவில் ஆரம்பமாகவிருக்கும் கடைசித் தருணத்தில் இக் கட்டுரை எழுதப்படுகிறது. எந்த விதமான விட்டுக் கொடுப்புக்கும் இடமில்லையென்று ஜெனீவாவில் வந்திறங்கிய மறுகணமே தமிழ்ச்செல்வன் தெரிவித்திருந்தார். ஆனால் இலங்கையின் வடக்கு - கிழக்கில் நிலவும் ஸ்திரமற்ற நிலைமையை இல்லாமல் செய்வதற்காக நெகிழ்ச்சித்தன்மையுடனும் காத்திரமான முறையிலும் முயற்சிகளை மேற்கொள்வோமென்று இலங்கைத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

தமிழ் தாயகக் கோட்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் ஒற்றையாட்சியின் கீழேயே தீர்வு காணப்படுமென்றும் ஜெனீவா பேச்சுகள் ஆரம்பிப்பதற்குச் சில தினங்கள் முன்னதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்திருந்தார். சர்வதேச செய்தி நிறுவனமான 'ராய்ட்டர்'க்கு அளித்த பேட்டியிலேயே ஜனாதிபதி அவ்வாறு தெரிவித்தாரென்று செய்திகள் வெளிவந்தன. ஆனால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இது குறித்து, ஜனாதிபதியிடம் ஆட்சேபனை தெரிவித்ததையடுத்து, ஜனாதிபதி அவ்வாறு கூறவில்லையென்று ஜனாதிபதி செயலகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

லௌகீக விடயங்களைத் துறந்துவிட்டதாகக் கூறிக் கொண்டாலும் அரசியலைத் துறக்க விரும்பாத பௌத்த துறவிகளின் கட்சியான 'ஜாதிக ஹெல உறுமய' இந்த நாட்டில் இனப் பிரச்சினையே இல்லையென்ற வேடிக்கையான கருத்தைக் கூறுவதற்குச் சில தினங்கள் முன்னதாக ஜனாதிபதி மேற்கண்ட கருத்தைக் கூறியிருந்தார். வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரை அவர்களின் பாரம்பரிய வாழ்விடம் அல்லது தாயகம் அதுதான் என்பதை யாரும் மறுத்துவிட முடியாது. தமிழினம் தனித்துவ அடையாளங்களைக் கொண்ட ஒரு தேசிய இனமென்பதையும் யாரும் மறுத்துவிட முடியாது. இதேபோன்று தமிழையே தமது சொந்த மொழியாகக் கொண்டிருந்தாலும் வடக்கு - கிழக்கு வாழ் முஸ்லிம்களும் தனித்துவமான மத-கலாசார அடையாளங்களைக் கொண்ட தேசிய இனமென்பதை யாரும் மறுத்து விடமுடியாது. வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களின் நிலத் தொடர்புகளைத் துண்டிப்பதன் மூலம் தமிழ் மக்கள் உரிமைப் போராட்டத்தை நசுக்குவதற்காகச் சிங்களப் பேரினவாத அரசுகள், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத் திட்டங்களை மேற்கொண்டன என்பதும் இங்கு கவனத்தில் கொள்ளத் தக்கது.

எனவே ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகளின் நெருக்குதல்கள் இருந்தாலும் ஜனாதிபதி, பிரச்சினைகளைக் கிளப்பக்கூடிய வார்த்தைப் பிரயோகங்களைத் தவிர்ப்பதே இராஜதந்திரமாகும். தென்னிலங்கைக் கட்சிகளின் பொது இணக்கப்பாட்டோடு புலிகளுடன் பேச ஜனாதிபதி எடுத்திருக்கும் முயற்சி பாராட்டத்தக்கது. புலிகளைப் போன்ற 'தனிநபர் வழிபாடு', கருத்து அடக்குமுறை, ஆயுத அடக்குமுறை உள்ள ஸ்தாபனங்களில் மட்டுமே நூற்றுக்கு நூறு சதவீத கருத்தொருமைப்பாடு இருக்கும். ஜனநாயக அமைப்பில் முரண்பாடுகள் இருக்கும். முரண்பாடுகளுக்கு உடன்பாடு கண்டு, பொது இணக்கப்பாடு காணப்பட வேண்டியது முக்கிய முன் தேவையாகும்.

ஜெனீவாவில் யுத்த நிறுத்தம் பற்றி மட்டுமே பேச்சுவார்த்தை நடத்துவதற்கென வன்னிக் காட்டிலிருந்து புலிகள் கடந்த 17ஆம் திகதி புறப்பட்டனர். நோர்வேயின் தலைநகரான ஒஸ்லோவில்தான் முதல் சுற்றுப் பேச்சுகள் நடத்தப்பட வேண்டுமென்று அடம்பிடித்த புலிகள் 27ஆம் திகதி ஒஸ்லோ வந்திறங்குகின்றனர். ஒஸ்லோவில் பேச்சுகள் வேண்டாமென்று இறுக்கிப் பிடித்தது அரசாங்கம். பேச்சவார்த்தைக்கென இல்லாவிட்டாலும் ஒரு பேச்சுக்காவது ஒஸ்லோ செல்லப் புலிகளுக்குக் கிடைத்த வாய்ப்பு, புலிகளுக்குக் கிடைத்த முதல் சுற்று வெற்றியென்று சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர். நான்கு மாதங்களுக்கு முன்னர்தான் ஐரோப்பிய யூனியன் புலிகளுக்குப் பயணத் தடை விதித்திருந்தது. சில ஐரோப்பிய நாடுகளுக்கும் புலிகள் விஜயம் செய்வார்களென்று இப்போது வெளிவரும் செய்திகள், இரண்டாவது சுற்றிலும் புலிகளுக்கு வெற்றிதான் என்றே சொல்லத் தோன்றுகிறது.

வன்னியிலிருந்து புறப்படுவதற்கு முன்னர் தமிழ்ச்செல்வன் ஊடகவியலாளர்களுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்த ஒரு விடயம், மூன்றாவது சுற்றிலும் புலிகள் 'பனால்டி' அடித்து வெற்றிபெறுவார்களா என்ற கேள்வியை எழுப்புகிறது. உதை பந்தாட்டத்தில் ஒரு தரப்புத் தவறிழைத்தால் மறுதரப்புக்குப் 'பனால்டி கிக்' கொடுக்கப்படுவதுண்டு. இங்கே தவறிழைத்த தரப்புக்கே அந்த வாய்ப்பு வழங்கப்படுகிறது. அதாவது "வடக்கு - கிழக்கிலுள்ள எமது தமிழ் மக்கள் இராணுவ அடக்குமுறைக்கும் கொடூரங்களுக்கும் உள்ளாக்கப்படுகிறார்கள். இராணுவத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து எமது மக்களைப் பாதுகாப்பதற்காகவே ஜெனீவா செல்கிறோம்" என்று தமிழ்ச்செல்வன் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார். தமிழ் மக்களை யாரும் அடக்கியொடுக்கக் கூடாதென்பதிலும் யாரும் அவர்கள் மீது காட்டுமிராண்டித்தனங்களைக் கட்டவிழ்த்து விடக் கூடாதென்பதிலும் எந்தவொரு தமிழனுக்குமே மாற்றுக் கருத்து இருக்க முடியாது. தமிழ் மக்கள் மீது அக்கிரமங்களைக் கட்டவிழ்த்து விடுபவர்கள் படையினராக இருந்தாலென்ன, புலிகளாக இருந்தாலென்ன அவற்றைப் பொறுத்துக் கொள்ள முடியாதென்பதே சரியான நிலைப்பாடு. ஆனால், இராணுவ அடாவடித்தனங்களிலிருந்து தமிழ் மக்களைப் பாதுகாப்பது பற்றிப் பேச வன்னியிலிருந்து புறப்பட்ட புலிக் கோஷ்டிக்கு, பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் ஐந்து நட்சத்திர இராணுவ அதிரடிப் படை வீரர்களின் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்ததை தொலைக்



ஜெனீவாவுக்குப் புறப்படுவதற்கு முன்னர் கட்டுநாயாக்கா விமான நிலையத்தில் இலங்கை தூதுக் கோஷ்டியினர்

காட்சிகளில் பார்த்தவர்கள் மூக்கின் மேல் விரலை வைத்திருப்பார்களென்பதில் ஐயமில்லை. கடந்த ஜனவரி மாதத்தில் மட்டும் 120 தமிழர்கள் இராணுவத்தினரால் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்றும் 37 தமிழர்கள் காணாமல் போய் விட்டார்களென்றும் புலித்தேவன் கூறியிருப்பது இங்கு கவனத்தில் கொள்ளத் தக்கது. வடக்கு - கிழக்கில் படையினர் இவ்வளவு தமிழர்களைக் கொன்றதாகவோ கடத்திச் சென்றதாகவோ எவ்விதத் தகவல்களும் இதுவரை வெளிவரவில்லை. மாறாக நூற்றுக்கு மேற்பட்ட சிப்பாய்களையும் அதே எண்ணிக்கையான மக்களையும் புலிகள் கொன்றனரென்ற தகவல்களே வெளிவந்திருந்தன. பொங்கு தமிழ் படையும் மக்கள் படையும், பொங்கியெழுந்து படையினரையும் புலனாய்வாளர்களையும் (மாற்றுக் கருத்துக் கொண்டவர்களையும் சேர்த்துக் கொள்ளுங்கள்) கொன்றனரென்றே உரிமை கோரப்பட்டது. புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப்., ரெலோ போன்ற தமிழ் ஆயுதக் குழுக்களை வேரோடும் வேரடி மண்ணோடும் அழித்தொழித்த புலிகள் இயக்கத்துக்குத் தெரியாமல் வேறு ஆயுதக் குழுக்கள் வடக்கு - கிழக்கில் செயற்பட முடியுமாவென்று தமிழ் மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆக, வடக்கு - கிழக்கில் இடம்பெற்ற அண்மைக் காலப் படுகொலைகள், வன்செயல்களுக்கு ஜவாப்தாரிகள் புலிகளே என்பது மறுக்க முடியாத உண்மை. வேண்டுமானால் இரண்டொரு கொலைகளுக்கான பழியை வேறு யார் மீதாவது போட்டுவிடலாம்.

ஜெனீவாப் பேச்சுக்களில் புலிகள் மரணப் பிடிவாத நிலைப்பாட்டினையும் அரசு மெத்தனப் போக்கையும் தான் கடைப்பிடிக்கின்றன. எப்படியாவது பேச்சுவார்த்தை வலயத்துக்குள் புலிகளைக் கொண்டுவந்து விட வேண்டுமென்பதே சர்வதேச சமூகத்தினதும் இலங்கை அரசினதும் நிலைப்பாடாகும். இதைச் சரிவரப் புரிந்து வைத்திருக்கும் புலிகள், உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினை, இராணுவத்தைப் பிரதான முகாம்களுக்குள் முடங்கச் செய்தல், துணைப் படை என்று கூறப்படும் பிரச்சினை ஆகியவற்றையே முன்வைக்கப் போகிறார்கள். ரணிலின் அரசாங்கமும் புலிகளும் செய்து கொண்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன. இக் குறைபாடுகளுக்குத் தீர்வு காணாமல் புலிகளின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட முடியாத நிலையே நீடிக்கும். அதுமட்டுல்ல, யுத்தம் நிறுத்தப்பட்டு, சமாதான சூழல் ஏற்பட்டால் மட்டுமே இக் கோரிக்கைகள் நிறைவேறும். கிழக்கில் கருணா தரப்புப் புலிகள், பிரபா அணிப் புலிகளுக்குப் பெருந் தலையிடியாக அமைந்திருப்பதனால் துணைப் படையென்று கூறப்படும் விவகாரத்தை நிச்சயமாகப் புலிகள் கிளப்புவார்கள். துணைப் படைகளென்று கூறப்படும் எவையும் அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. எனவே துணைப் படைகளென்று புலிகளால் கூறப்படுபவைகளைக் கண்டுபிடிப்பது கஷ்டமான காரியம். "துணைப்படைகளின் ஆயுதங்களைக் களைந்து, அவர்களை அரசாங்கப் படைகளில் சேர்த்து வடக்கு - கிழக்குக்கு வெளியே அனுப்ப வேண்டும்" என்றே யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் 1.8ஆவது பிரிவு கூறுகிறது. கருணா அணியைப் பொறுத்தவரை புலி இயக்கத்தில் நீண்ட காலமாகக் குமுறிக் கொண்டிருந்த ஓர் எரிமலை வெடித்துச் சிதறியது என்றே கூறவேண்டும். அது அவர்களின் உள் வீட்டுப் பிரச்சினையென்று அரசு கையை விரிக்கலாம். அல்லது பிரபா அணிப் புலிகளின் அக்கிரமங்களைக் கட்டுப்படுத்த முயற்சியெடுக்காமல் கருணாவை மட்டந் தட்டுவது சாத்தியமாக அமையாது.

இந்தோனேசியாவின் ஆச்சே மாநிலப் பிரச்சினை, ஒற்றையாட்சி அமைப்புக்குள்தான் தீர்வு காணப்பட்டிருக்கிறது. அங்கே சுதந்திர ஆச்சே முன்னணி சுயநிர்ணய உரிமை கோரித்தான் போராடி வந்தது. 1976இல் அங்கு தனிநாட்டுப் போராட்டம் ஆரம்பமாகியது. இன்று மத்திய அரசின் படைகள் அங்கிருந்து வாபஸ் பெறப்பட்டிருக்கின்றன. ஆச்சே முன்னணியும் தனது படையணிகளைக் கலைத்துவிட்டது. பின்லாந்தின் முயற்சிகளுக்கூடாக மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகள் வெற்றியளித்தமைக்கு யுத்தத்தில் சம்பந்தப்பட்ட இரு தரப்புகளும் தீர்வு முயற்சிகளில் விசுவாசமாக ஈடுபட்டதே முக்கிய காரணம். இலங்கையின் ஒற்றையாட்சியின் கீழ் தீர்வு காணப்பட முடியாதென்பது வேறு விடயம். ஆனால் இரு தரப்புகளுமே பரஸ்பர நம்பிக்கையுடனும் நெகிழ்ச்சித் தன்மையுடனும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுமானால் தீர்வு என்றுமே எட்டாக்கனியாக இருக்கப் போவதில்லை.

இலங்கையில் பெரும்பான்மையின் கொடுங்கோண்மைக்குத் தமிழர்கள் உட்படுத்தப்பட்டது போன்று, வடக்கு - கிழக்கில் பெரும்பான்மையினரின் கொடுங்கோண்மைக்கு முஸ்லிம்களும் உட்படுத்தப்பட்டிருக்கின்றனர். அவர்களைச் சுயாதீனமாக, தனித்தரப்பாகப் பேச்சுவார்த்தைகளில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கை நியாயமானது. நவம்பர் 16ஆம் திகதி முதல் இன்று வரை 24 முஸ்லிம்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனரென்று முஸ்லிம் சமாதான செயலகம் தெரிவித்திருக்கிறது. அக்கரைப்பற்றுப் பள்ளி வாசலில் வைத்தே நான்கு முஸ்லிம்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். எனவே முஸ்லிம்களையும் எதிர்காலத்தில் ஒரு தரப்பாகப் பேச்சுவார்த்தைகளில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்ற கோகிக்கை நியாயமானது. ■

---

# ஊரிலிருந்து....



வெளி உலகத்திற்கு தெரியாமல் முக்கிய விஷயம் ஒன்று யாழ்ப்பாண வாசி ஒருவருக்கு அடிச்சிருக்குது. கொழும்பில அரசாங்கத்தால நடாத்தப்படுகிற லொத்தர் அதுதான் சுவீப் டிக்கட் முதலாம் பரிசு யாழ். மகன் ஒருத்தர் வெண்டிருக்கிறார் உண்மையாய் சந்தோசப்பட வேண்டிய விஷயம். ஆனால் ஏகப்பிரதிநிதிகள் கேள்விப்பட்டால் மொத்தமாய் அல்லோ அள்ளிப் போடுவினம். பாத்திச்சினம் வீட்டாக்கள் காதும் காதும் வைச்சமாதிரி கொழும்பிற்குப் போய் சட்டத்தரணி சத்தியக்கடதாசி எல்லாம் குடுத்து பெயரை வெளியில் விடவேண்டாம் எண்டு கெஞ்சிக்கூத்தாடி மாற்று ஏற்பாடு செய்து செக்கை வேண்டிப் போட்டினம். "காசை என்ன செய்தியள்?" எண்டு கேட்டன். இப்போதைக்கு என்ன செய்தாலும் அவைக்கு மூக்கில வேர்க்கும். அதுதான் யாழ்ப்பாணத்தில கிளை இல்லாத கொழும்பு வங்கி ஒண்டில இப்போதைக்கு காசைப் போட்டிருக்கினமாம். கள்ளர், கொள்ளைக்காரருக்கு பயப்பிட்டது ஒரு காலம். இப்ப....?

# கடை விரிக்கும் தேர்தல் வியாபாரிகள்

அலசுவது
- மதியூகி -

**எதிர்வரும்** மார்ச் மாதம் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் முன்னைய தேர்தல்களைப் போன்று பாரிய ஆரவாரத்தைக் கொண்டிருப்பதாகத் தோன்றவில்லை. ஆண்டாண்டு காலமாகத் தமது கோட்டையாக சில இடங்களை ஆண்டு வந்த கட்சிகளின் வேட்பு மனுக்கள் தற்போதைய தேர்தலில் நிராகரிக்கப்பட்டுள்ளதும் நீதிமன்றத் தடைகளும் இதற்குப் பிரதான காரணமாக அமைந்துள்ளன.

குறிப்பாக, கொழும்பு மாநகர சபை ஐ.தே.கட்சியின் கோட்டையாகவே இருந்து வந்தது. கொழும்பைப் பொறுத்த வரை ஐ.தே.கட்சியே அதிக வாக்கு வங்கியையும் கொண்டிருக்கிறது. ஆனால் இம்முறை ஐ.தே.கட்சியின் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டு வழக்குத் தாக்கலுக்கு உட்பட்டு இருப்பதால் இலங்கையின் வரலாற்றில் முதல் தடவையாக கொழும்பு மாநகர சபை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வசம் கைமாறக்கூடும் என்று பரவலாகக் கருதப்படுகிறது. இதே போல் முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கும் இந்த உள்ளூராட்சித் தேர்தலில் நேரடியாகப் போட்டியிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதற்குக் காரணம் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளும், கடைசித் தினங்களில் வழக்கு முடிவுகள் வெளியானதுமாகும். இது முஸ்லிம் காங்கிரஸுக்கு இக்கட்டான நிலைமையைத் தோற்றுவித்துள்ளது. இந்த நிலைமையைச் சமாளிப்பதற்காக வேறு பிரதான கட்சிகளோடு கூட்டாகவும், சில இடங்களில் சுயேச்சைக் குழுவாகவும் போட்டியிடும் நிலை உருவாகியுள்ளது.

இவ்வாறு சில கட்சிகளின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்ட நிகழ்வுகளால் பல கட்சிகள் திக்குமுக்காடிப் போயுள்ளன. இதற்கிடையே போட்டியின்றியே இதுவரை இரண்டு பிரதேச சபைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. திருகோணமலையில் அரச கட்டுப்பாடற்ற பகுதியான வெருகல் பிரதேச சபை புலிகளின் பிரமுகர்கள் வசம் போய்ச் சேர்ந்துள்ளது. மற்றையது, முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பெரு நிலப்பரப்புப் பகுதியான புதுக்குடியிருப்புப் பிரதேச சபை போட்டியின்றி ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வசம் வந்துள்ளது.

இச்சபைக்கு புலிகளின் பிரமுகர்கள் சுயேச்சைக் குழுவாகப் போட்டியிட்ட போதும் அந்த மனு நிராகரிக்கப்பட்டதால் எதிர்ப்பு இன்றி ஈ.பி.டி.பி. கைப்பற்றியுள்ளது.

புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் புலிகளின் புலனாய்வுப் பொறுப்பாளர் பொட்டு அம்மான் உட்பட புலிகளின் முக்கியஸ்தர்கள் பலரும் புதுக்குடியிருப்பிலேயே இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. தவிரவும், புலிகளின் முகாம்கள் பரவலாக அமையப்பெற்ற இடமும் புதுக்குடியிருப்பாகும். புதுக்குடியிருப்பில் சில பகுதிகளை புலிகள், பொதுமக்களின் நடமாட்டத்துக்கு கடுமையான தடை விதித்து அதியுயர் பாதுகாப்பு வலயமாகவும் அறிவித்துள்ளனர்.

இதைத் தவிர, யுத்தம் ஆரம்பமான இத்தனை காலப்பகுதியிலும் இப்பகுதியில் எவ்வித அபிவிருத்தியும் ஏற்படவில்லை. இதற்கிடையே சுனாமித் தாக்கிய போது கடுமையாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் முல்லைத்தீவும் முக்கிய இடமாகும். இவ்வாறு யுத்தத்தாலும் சுனாமியாலும் பாதிக்கப்பட்ட பகுதியை மீளக்கட்டியெழுப்புவதும், புனரமைப்பதும் முல்லைத்தீவைப் பொறுத்தவரை பாரிய பொறுப்பாக உள்ளது. அந்தப் பகுதி மக்கள் இலங்கையின் ஏனைய பகுதி மக்களை விடவும் பாரிய வறுமைக்கு உட்பட்டவர்களாகவும், அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்பட்டவர்களாகவும் வாழ்ந்து வருகின்றனர் என்பது உலகமறிந்த உண்மையாகும். இன்னும் கூட சில பகுதிகளுக்கு அரச சார்பற்ற நிறுவனத்தின் பிரதிநிதிகளோ, சர்வதேசப் பிரதிநிதிகளோ போக முடியாத நிலைமை உள்ளது என்பது வேதனைக்குரியதாகும்.

இந்த நிலையில் ஈ.பி.டி.பி.யின் வசத்துக்கு புதுக்குடியிருப்பு பிரதேச சபை தெரிவாகியுள்ளதானது அந்தப் பகுதி மக்களின் வாழ்வில் புதிய மாற்றத்துக்கு வழிவகுக்கும் என்று அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர்.

இதுவரை காலமும் அந்த மக்கள் அனுபவித்து வரும் துன்பமான வாழ்க்கையில் நல்ல மாற்றங்கள் ஏற்பட ஈ.பி.டி.பி. கடுமையாக உழைக்கும் என்று அக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். அந்த மக்களுக்கு சேவை செய்வதற்கும், அழிந்த தேசத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். புலிகள் ஜனநாயகச் செயற்பாடுகளை மதிப்பதோடு, இடையூறுகளை ஏற்படுத்தாமல் மக்களுக்கு நன்மைகள் கிடைக்க ஒத்தாசை வழங்க வேண்டும் என்று புதுக்குடியிருப்பைச் சேர்ந்த புத்தி ஜீவிகள் சிலர் வெளிப்படையாகக் கருத்துத் தெரிவித்து வருவதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆகவே நடக்கப்போகும் உள்ளூராட்சித் தேர்தல் யாருக்கு நன்மையோ, யாருக்குத் தீமையோ தெரியாது. ஆனால் நிச்சயமாக புதுக்குடியிருப்பு மக்களுக்கு ஒரு புதிய அத்தியாயத்தைப் படைக்கும் என்பது மட்டும் நிச்சயம். இந்த இன்ப அதிர்ச்சி புலிகளின் வரலாற்றைப் பொறுத்தவரை ஜீரணிக்கமுடியாமல் இருந்தாலும் ஏற்றுக்கொண்டேயாக வேண்டியதாகிவிட்டுள்ளது. இந்த எதிர்பார்ப்பைப் புரிந்து கொண்டு ஈ.பி.டி.பி.யும் தன்னால் இயன்ற வரையில் புதுக்குடியிருப்பு மக்களுக்கு சேவை செய்ய வேண்டும். உள்ளூராட்சி அதிகாரத்தினூடாக அவ்வப்பகுதி மக்களுக்கு உச்சக்கட்டச் சேவையை எப்படி வழங்கமுடியும் என்பதை, ஈ.பி.டி.பி. புதுக்குடியிருப்புக்குச் செய்யும்போது அது ஏனைய பிரதேச சபைகளுக்கு ஒரு பாடமாகவும், முன்னோடியாகவும் நிச்சயமாக அமையும் என்று பலமான நம்பிக்கைகளும் தற்சமயம் வலுப்பெற ஆரம்பித்துள்ளன.

வடக்கு - கிழக்கில் தற்போதை நிலையில் உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படுவது பொருத்தமாக இருக்காது என்ற நிலைப்பாடு இன்னும் மாற்றம் பெறவில்லை. ஒருவேளை வடக்கு - கிழக்கிற்கான தேர்தல் ஒத்தி வைக்கப்படலாம் என்ற சந்தேகமும் இருக்கத்தான் செய்கிறது.

சில வேளை அரசு வேறு அரசியல் காரணங்களுக்காக தேர்தலை நடத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனெனில் நியாயமானதும் நேர்மையானதுமான தேர்தல் வடக்கு - கிழக்கில் நடைபெற வாய்ப்பு இல்லை என்று கூறிய எவரும், தேர்தலை நிராகரிக்கவில்லை. புலிகள் உட்பட அனைத்துத் தரப்பினரும் தமது வேட்பு மனுக்களை தாக்கல் செய்துள்ளனர். நடக்காவிட்டால் சரி, அப்படி நடந்தால் போட்டியிடுவோம் என்ற மனநிலைதான் அனைத்துக் கட்சிகளிடமும் காணப்படுகிறது.

சில அரசியல் கட்சிகள் இப்போதே பிரசாரத்திலும் ஈடுபட்டு விட்டதாகவும் தெரியவருகிறது. வடக்கு - கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல் நடந்தாலும் நடக்காவிட்டாலும், போட்டியின்றி ஏற்கனவே தெரிவுசெய்யப்பட்டுவிட்ட வெருகல் பிரதேச சபையும், புதுக்குடியிருப்புப் பிரதேச சபையும் முழுமையான செயற்பாட்டுக்குத் தயாராகிவிட்டன என்பது மட்டும் உண்மையாகும். ◎

நியாயமானதும் நேர்மையானதுமான தேர்தல் வடக்கு - கிழக்கில் நடைபெற வாய்ப்பு இல்லை என்று கூறிய எவரும், தேர்தலை நிராகரிக்கவில்லை. புலிகள் உட்பட அனைத்துத் தரப்பினரும் தமது வேட்பு மனுக்களை தாக்கல் செய்துள்ளனர். நடக்காவிட்டால் சரி, அப்படி நடந்தால் போட்டியிடுவோம் என்ற மனநிலைதான் அனைத்துக் கட்சிகளிடமும் காணப்படுகிறது.

## அதிரடி அய்யாத்துரை



**கல்யாண** வீட்டுக்கு வந்தவன் மாப்புளையாகிப் போனான் எண்டு சொல்லுவினம். ஆனால் இங்க என்ன நடந்திருக்குத் தெரியுமோ. சுவீடனில இருந்து கல்யாண வீட்டுக்கு வந்த ஒருவரை யாழ்ப்பாணம் மாநகர சபையின்ர வேட்பாளராப் போட்டிருக்கினமாம். உந்தப் பொலிரிக்ஸில நான் ரிஸ்க் எடுக்க விரும்பல்லை எண்டிட்டு செல்லமானவரின்ர பொடி கலையான செல்வன் சுவீடனுக்கே போயிட்டாராம். வந்த விருந்தாளியை வேட்பாளராப் போட்டு மனுத் தாக்கல் செய்யிற அளவுக்கு பொலிரிக்ஸ் வங்குரோத்துக்குள்ள யாரடாப்பா விழுந்து கிடக்கிறது எண்டு விசாரிச்சதில கூத்தமைப்பு எம்.பி. அதானுங்கோ மண்டையன் குழுத் தலைவர் பிரேமமான சந்திரனார்தான் அவரெண்டு சொல்லிச்சினம். வேட்பு மனு தயாரிக்கவே தங்களிட்ட ஆக்கள் இல்லையெண்டதுக்காக விருந்தாளியா வந்தவரைப் புடிச்சுப் போட்டது ஜஸ்ட் ஓவர் தெரியுமோ. உவையை மாதிரி ரிமோட்டில இயங்கிக் கொண்டு வெட்டியா பொலிரிக்ஸ் பண்ணுறதை விடவும் சுவீடனில சும்மா இருக்கிறது மேல் எண்டு அந்தப் பொடியள் நினைச்சிருக்கினமாக்கும். உப்பிடி எத்தினை விருந்தாளிகள் வேட்பாளரா இருக்கினமோ.

**ரெண்டெழுத்தாரின்ர** கோட்டையான புதுக்குடியிருப்புப் பிரதேச சபையை வீணைக் கட்சிக்காரர் இத்துனூண்டு எதிர்ப்பும் இல்லாமக் கைப்பற்றிப் போட்டினம். வன்முறையை மீறிய அஹிம்சை இதெண்டும் சொல்லினம். அது சரி, இனிமேல் வீணைக் கட்சிக்காரரின்ர நிர்வாகத்துக்குக் கீழயோ ரெண்டெழுத்தாரின்ர தலைவரும் மற்றவையும் குடியிருக்கப் போகினம் எண்டதுதான் குழப்பமாக் கிடக்கு. பொறுத்தார் பூமியாள்வார்; பொங்கினார் காடாள்வார் எண்டுவினமே. அது உதுக்கும் பொருத்தமெண்டுதான் நினைக்கிறன். இவ்வளவு காலமும் இருந்த நிலைமை மாறி, அந்தச் சனத்துக்கு நன்மை நடந்தால் சரிதான். உந்தப் புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு சுயேச்சையான குழுவொண்டு மனுத் தாக்கல் செய்ததெல்லோ, அந்த மனுவை நிரப்பினது கூத்தமைப்புக்காரர்தானாம். தங்களை தங்கட பேரிலையே கேக்கவிடாதவைக்கு படிப்பிக்கிறம் பார் எண்டு நிரப்பிச்சினமோ இல்லாட்டில் ரெண்டெழுத்தாரின்ர விருப்பத்துக்குப் போடுவம் எண்டதாலை கவனிக்காம கண்ணை மூடிக்கொண்டு போட்டிச்சினமோ தெரியாது. அந்த மனு நிராகரிக்கப்பட்டிட்டுது. அதாலை ரெண்டெழுத்தாரின்ர தலைவர் நைண்டி நைனில சூடாகி, கோபத்தில இருக்கிறார் எண்டது மட்டும் உண்மையாமுங்கோ. கோட்டையைப் பறிகொடுத்தவருக்கு கோபம் வாரது நியாயந்தானுங்கோ. இதுக்காகத்தான் அவர் ஜனநாயகம் - எலக்ஷன் எண்டால் பயப்படுகிறவர். அவரின்ர பயம் சரியாப் போச்சு பாத்தியளோ....

**ஜெனீவா** பேச்சுக்குப் போயிருக்கிற ரெண்டெழுத்தாருக்கு சிவராத்திரி அன்று இரவு சூரிச் நகரில சிவ சிவ ராத்திரியாம். தமிழினி ரெஸ்டூரண்டில இவைக்கு விருந்தும் நடனமும் வழங்கப் போகினமாம். தாய்லாந்தில போய் சொப்பிங் போனவைக்கு, ஜெனீவாவில சொப்பிங் போக ஏலாதோ எண்டு யோசிக்காதேங்கோ. உந்த விருந்து இவைக்குத்தான் எண்டாலும் உதுக்கு அழைக்கப்பட்டிருக்கிறவையெல்லாம் பிஸினஸ்காரரும் பணக்காரரும் தானாம். அது ஏன் பணம் புரல்றவையை மட்டும் இன்வைட் பண்ணியிருக்கினமெண்டு கேட்டதுக்கு, விருந்தும் நடனமுமெண்டது இவைக்கு; அவையை வரவழைத்தது வரிக்கு எண்டினம். இன்னும் புரியல்லையோ. காசுக்காரரைக் கூப்பிட்டால் காசு வாங்கலாமெண்டும் ஒரு திட்டமாம். எப்புடிங்கோ ஒரு கல்லில ரெண்டு மாங்கா அடிக்கினம். தங்களுக்கு விருந்தாவும் போச்சு, அப்புடியே இயக்கப் பணி பார்த்ததாவும் போச்சு. பாடின வாயும், ஆடின காலும் சும்மா இருக்காதெண்டு உதுக்குத்தான் சொல்லுறதாக்கும். ஆலோசகர் நடுங்கிக்கொண்டே டிஸ்கோ.....டிஸ்கோ...எண்டு ஆடினால் எப்புடி இருக்கும். யோசிக்கேக்க சிரிப்புத்தான் வருகுதுங்கோ.

**காரைநகர்** பிரதேச சபைக்குப் போட்டியிட தன்ர கட்சி சார்பில ஆக்களை நியமிப்பார் எண்டு எதிர் பாத்தால், மகேஸ்வரனார் ஏமாற்றிப் போட்டாருங்கோ. உங்க வேட்பு மனு தாக்கல் செய்யிற அண்டைக்கு இவர் கொழும்பில சிறை மீண்ட சிங்கமெண்ட கோஷத்தோடை எஸ்.பி.யையும் அவரின்ர துணைவியாரையும் கூட்டிக் கொண்டு கோயிலுக்குப் போனாருங்கோ.

ஏன் உவரை கோயிலுக்குக் கூட்டித்திரியிறியள் எண்டு கேட்டதுக்கு, பச்சைக் கட்சி வீறு விட்டுப் போயிருக்கிறதைப் பாத்து எங்க உடைஞ்சு போகுமோ எண்டு யோசிச்சுக் கொண்டிருக்கேக்க அதிகாரமானவர் ஆளை வெளியாலை விட்டுப்போட்டார். இவர் வந்த உஷாரில கட்சியில இருக்கிறவை இழந்து கொண்டு போன மிச்ச சொச்சத் தெம்போடை இருக்கினம் எண்டதாலை இப்பவே கறுப்பா எதையாவது புடிச்சு வச்சால் எதிர்காலத்தில உதவும் எண்டு தன்ர நீண்ட காலக் கணக்கைப் பற்றிச் சொன்னாராம். பிஸினஸ் மைண்ட் சூப்பரா வொர்க் அவுட் ஆகுது பாத்தியளோ....

**மதங்களைச்** சார்ந்தவையைப் பற்றி வாய்திறக்க யோசிக்க வேண்டித்தான் கிடக்கு. ஆனாலும் பாருங்கோ, சில மத போதகர்கள் எந்தக் கவலையும் இல்லாமல் சில்மிசம் பண்ணினம். நோர்வேயில கிறிஸ்தவச் சபையில இருக்கிற லக்கியான பாதிரியார் பெண்கள் விசயத்தில கொஞ்சம் வீக்கானவராக இருக்கிறாராம். வீசா முடிஞ்சு நிக்கிறவையையும், ஏமாற்றப்பட்டு நிக்கிறவையையும் கூட்டிக் கொண்டு வந்து தான் ஹெல்ப் பண்ணுறன் எண்டு சொல்லி தன்ர வீக்கான சேட்டைக்கும், தன்ர வீட்டின்ர வேலைக்கும் நிர்ப்பந்திக்கிறாராம். பாவம் எங்கட தாய்க்குலம் வெளிநாட்டு மோகத்தில போய் படாத பாடு படுகுதுகள். அதுக்கிடையில உந்த மாதிரி பிசாசுகளிட்டையும் மாட்டுப்பட்டு சீரழியினமெண்டும் சொல்லுகினம்.

உந்தச் செய்தியைக் கேட்டு வாய் பிளக்கேக்கேயே இன்னொரு செய்தியும் சொல்லிச்சினம்.

ரெண்டு வாரத்துக்கு முன்னம் பலான தொழிலில் ஈடுபட்ட ரெண்டு தாய்க் குலத்தை அங்கத்தைய காவல்துறையினர் புடிச்சிச்சினமாம். அவையும் எங்கட தாயகத் தாய்குலம் தானாம். தங்கட பெயரை ஜெஸ்மின் எண்டும், கிரி எண்டும் சொல்லிச்சினமாம். பெயரை மாத்திக் கொண்டு உந்தத் தொழில் செய்தால் தெரியாமல் இருக்குமெண்டு யாரும் சொல்லிக் கொடுத்திச்சினமோ தெரியுதில்லையுங்கோ. கல்யாணம் கட்டப்போறதுகளையும், உதவுறமெண்டு எடுக்கிறதுகளையும் அந்தரிக்க விட்டுப்போட்டு, யாரும் கண்டுகொள்ளாமலும் இருக்கினமாம். உப்பிடிப் போனால் தாய்க்குலத்தின்ர நிலைமை மோசமாத் தானேங்கோ போகும். உங்க நிண்டு கலாசாரம் பேசிறவை உதில கொஞ்சம் கவனம் எடுத்திச்சினமெண்டால் நல்லதுங்கோ.....

**தொண்டர்** ஆசிரியர்களுக்கான நியமனம் வழங்கப்பட்டதிலை தொகை தொகையா குளறுபடி நடந்திருக்கிறதாச் சொல்லினம். ஒரு ஆள், ரெண்டு பேருக்கெண்டால் உந்த நியாயம் சரியெண்டு நினைக்கலாம். உது மாவட்டத்துக்கு மாவட்டம் பெரிய தொகையாக நடந்திருக்கெண்டு பாதிக்கப்பட்டவை கல்வி அமைச்சரின்ர கவனத்துக்குக் கொண்டுவந்து கொண்டிருக்கினமாம். உதில ஏதும் உள் குத்து வெளிக் குத்து இருக்குமோவெண்டு பாதிக்கப்பட்டவை சந்தேகப்படுகினம். எங்கட பொலிரிக்ஸ்காரரும் உள்ளுக்குள்ளாலை ஏதாவது சுத்துமாத்துப் பண்ணியிருப்பினமோ எண்டும் யோசிக்க வேண்டியதாக் கிடக்கு. திறமையானவைக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய நியமனம் கிடைக்க வேணுமுங்கோ. உதில அநியாயம் நடக்குமெண்டால் அதை எதிர்க்கத்தான் வேணும். என்ர சப்போட்டும் பாதிக்கப்பட்டவைக்கு உண்டுங்கோ. ஆகவே பாதிக்கப்பட்டவைக்கு சம்பந்தப்பட்டவை நியாயம் வழங்கவேணும் புரியுதோ.

இல்லாட்டில் மாணவர் சக்தி மட்டுமல்லாமல், முன்னாள் மாணவர்களான தொண்டர் ஆசிரியர்களின்ர சக்தியும் சேர்ந்து குரல் கொடுப்பினம் எண்டதை தவறைத் திருத்த வேண்டியவை புரிஞ்சு கொண்டால் சரிதான்.




## வாசகர்களின் கவனத்திற்கு...

இலங்கையில் இருந்து வெளிவரும் தமிழ் மொழி மூல இலத்திரனியல், அச்சு ஊடகங்களில் ஒலி, ஒளிபரப்பாகும், பிரசுரிக்கப்படும் சமகால செய்திகள், விடயதானங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் தொடர்பான விமர்சனங்கள் வாசகர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன. விமர்சனங்கள் இறுக்கமாகவும் சுருக்கமாகவும், ஆக்கபூர்வமானவையாகவும் இருக்கவேண்டும். பயன்மிக்கது என ஆசிரிய பீடத்தினால் கருதப்படும் விமர்சனங்களுக்கு முரசு இடமளிக்கும்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**
**முரசு விமர்சனம்**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ. இல - 1772**
**கொழும்பு.**

## வைத்தியசாலையில் பயணிகள் புகையிரதத்தில் பிராணிகள்

தொலைக்காட்சி, வானொலி செய்தியறிக்கையில் பிரதான செய்திகள் என்பது மிக முக்கியமான விடயம் என்பது பலராலும் இப்பகுதியில் ஏற்னெவே சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயமாகும். ஆயினும் இவ்விடயத்தில் அவதானமாக இருக்க வேண்டிய செய்தி ஆசிரியரும், செய்தி வாசிப்பாளரும் ஏன் தொடர்ந்தும் கவலையீனமாக உள்ளனர்? கடந்த வாரம் இடம்பெற்ற இரு வெவ்வேறு வேலை நிறுத்த நடவடிக்கைகள், அரச வைத்தியர்கள் மற்றும் புகையிரத ஊழியர்களினதும் ஆகும். நாட்டின் பிரபல வானொலி மற்றும் தொலைக்காட்சி செய்தியறிக்கையில் பின்வருமாறு வாசிக்கப்பட்டது. "அரச வைத்திய அதிகாரிகளின் வேலைநிறுத்தம் காரமணாக வைத்தியசாலையில் பயணிகள் பாதிப்புக்குள்ளானார்கள்.

"ஊழியர்களின் வேலை நிறுத்தம் காரணமாக புகையிரத சேவைகள் தடைப்பட்டதனால் பிராணிகள் நிர்க்கதிக்குள்ளானார்கள்."

ஒலி, ஒளிபரப்பாளர்களே, உங்கள் ஊடக சுய விளம்பரத்தில் எடுக்கும் ஆர்வத்தினை தமிழ் மொழிவளர்ச்சியில் காட்டுங்கள். தமிழ் மொழியை மெல்லச் சாக விடாமல் காப்பாற்றுங்கள்.

*-வீ.நமசிவாயம், கந்தர்மடம்.*

## ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை பத்திரிகைகளின் பங்களிப்புத் தொடர்ந்து தேவை

கடந்த வருடம் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையினை முன்னிட்டு நாட்டின் பிரதான இரு தமிழ் தேசிய பத்திரிகைகளும், தமது பிரசுரங்களில் மாதிரி வினாத்தாள்களையும், விபரங்களையும் தொடர்ச்சியாக வெளியிட்டு வந்தன. இது அநேக மாணவர்களுக்கு பெரும் பயனுள்ளதாக அமைந்தது. ஏனெனில் எல்லாப் பெற்றோரினாலும் தமது பிள்ளைகளை விசேட வகுப்புகளுக்கு அனுப்பவோ அல்லது புத்தகங்களை வாங்கிக் கொடுக்கவோ முடியும் என்பது இயலாத காரியமாகும். நான் அறிந்த வரையில் சில பெற்றோரும், ஆசிரியர்களும் தொடர்ச்சியாக வெளிவந்த மாதிரி வினாத்தாள்களை சேகரித்து ஓர் பொக்கிஷமாகவே கட்டி வைத்துள்ளனர். எனவே இவ்வருடமும் தேசிய தினசரிப்பத்திரிகைகள், மாணவ, மாணவிகளின் நன்மை கருதி கூடிய கவனமெடுத்து புலமைப்பரிசில் பரீட்சை ஆக்கங்களை தொடர்ந்து வெளியிட்டு கல்வி வளர்ச்சிக்கு அரும்பணியாற்ற வேண்டுமென இறைஞ்சுகின்றேன்.

*-திருமதி.த.அருளானந்தம், மட்டக்களப்பு.*

## தென்றலின் தாஜ்...

கடந்த காலத்தில் தென்றலின் ஏயெம், தாஜ்ஜின் 'ஏகாந்தம்', என் 'விருப்பம்' ஆகிய இரண்டு நிகழ்ச்சிகளும் வானலைகளின் சிகரம் தொட்டவை. நேயர்கள் மத்தியில் என் விருப்பம் நிகழ்ச்சிக்கு இருந்த வரவேற்பு யாவரும் அறிந்ததே.

ஆனால், இன்று தென்றலோ சத்தமில்லாமல் என் விருப்பத்தை விழுங்கி விட்டது. இந்நிகழ்ச்சி போனாலும் 'ஏகாந்தம்' உள்ளதே என்று நினைத்த வேளையில் செவ்வாய் இரவு நிகழ்ச்சிக்கே வேட்டு வைத்துள்ளனர்.

செவ்வாயிலிருந்து வெள்ளி இரவு நிகழ்ச்சிக்கு ஏயெம். தாஜ்ஜை மாற்றியுள்ளனர். இவரது வரவால், இதுவரை காலமும் சோபை இழந்திருந்த, நட்புக்காக நிகழ்ச்சி தாஜ்ஜின் கைவண்ணத்தால் எடுத்த எடுப்பிலேயே மெருகேறத் தொடங்கியுள்ளது.

கிழமையையோ, நிகழ்ச்சியையோ மாற்றி கொடுப்பதாலோ அன்றி அகற்றுவதாலோ அறிவிப்பாளரின் தரம் எந்த விதத்திலும் குறைந்து விடாதென்பதை சிலர் புரிந்து கொள்ள வேண்டும்.

எனவே, வானலைகளைப் பொறுத்த வரையில் ஏயெம், தாஜ்ஜிற்கு என்றுமே தேய்மானமில்லை என்பதே நிஜம்.

*-தோணிக்கல் சு.நவரட்ணராஜா.*

## இளைய சக்தி


சக்தி எப்.எம்.வானொலியில் ஒவ்வொரு ஞாயிறு தோறும் இரவு வேளையில் இடம்பெறும் இளைய சக்தி நிகழ்ச்சியானது மிகவும் பயன் மிக்கதும், பாராட்டுக்குரியதுமாகும். எமது நாட்டிலே இலைமறை காய்களாக இருக்கும் பல கலைஞர்களின் திறமைகளை வெளிப்படுத்தி அவர்களை ஊக்குவிக்கும் விதமாக இந்நிகழ்ச்சி அமைகிறது. சந்தர்ப்பம் கிடைத்ததால் பிரபல்யம் அடைந்திருக்கும் கலைஞர்கள் இவ்வாறு வாய்ப்புகள் இன்றி திறமைகளை வெளிப்படுத்த முடியாதிருக்கும் புதிய, இளைய கலைஞர்களின் திறமைகளையும் மதித்து அவர்களுக்கும் வாய்ப்பளிக்க வேண்டும் என்ற மனோ நிலையை வளர்த்துக் கொள்வதும் இந் நிகழ்ச்சியின் விளைவுகளில் ஒன்றாக அமைய வேண்டும். தொழில் ரீதியாக பல துறைகளில் உள்ளவர்களிடம் கூட ஏராளமான கலைத் திறமைகள் இருப்பதை இந் நிகழ்ச்சியூடாக அறியமுடிகிறது. வெறும் ஒலி பரப்பிற்காக மட்டும் இந்நிகழ்ச்சி அமைந்துவிடாமல் திறமையுள்ளவர்களை மேலும் வளர்த்துவிடும் நோக்கிலும் இவ்வானொலி செயற்படுமேயானால் மேலும் வரவேற்புக்குரியதாக இந்நிகழ்ச்சி அமையும் என்பதே பலரது அபிப்பிராயமும் எதிர்பார்ப்புமாகும்.

*-எஸ்.கண்ணன், வரணி.*

## 30ஆம் நாள் நினைவஞ்சலி

**மலர்வு** 22 04 1941

**உதிர்வு** 26 01 2006



### அமரர் முத்துக்கருப்பன் சிவலிங்கம்

பண்டாரவளை 7/1, பிரதான வீதி நிலும்ஸ் சூ சென்ரர் உரிமையாளரும் முன்னாள் கந்தசேனை - கோணகலை எஸ்டேட் தலைமை குமாஸ்தாவுமான அமரர் முத்துக்கருப்பன் சிவலிங்கம் அவர்களின் ஆத்ம சாந்திக்கான கர்மக் கிரியைகள் 25.02.2006 அன்று இல 37/94, 1ஆம் ஒழுங்கைக் அம்பத்தென்ன கார்டனிலுள்ள இல்லத்தில் இடம் பெறும். இந்நினைவஞ்சலி நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு உற்றார் உறவினர் நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

ஏற்கனவே அன்னாரின் நல்லடக்க நிகழ்வில் கலந்து கொண்டு உதவி ஒத்தாசை புரிந்தவர்களுக்கும் மரணச் செய்தி கேட்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள். பாசத்தின் வற்றாத ஊற்றாய் இருந்து எம்மைப் பரிதவிக்க விட்டு சென்ற அன்னாரின் பிரிவால் துயருறும் அன்பு மனைவி சிவபாக்கியம், பிள்ளைகள் வாணி நளாயினி (USAID) முரளிதரன், சுதர்சன், சிவதர்ஷினி.

தகவல் : வாணி நளாயினி, 0778082878

**சமூக சேவைகள் மற்றும் சமூக நலன்புரி அமைச்சு**
**தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம்**

## பதவி வெற்றிடங்கள்

**பின்வரும் வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களிடம் விண்ணப்பம் கோரல்**

01. உதவி விரிவுரையாளர் (சிங்களம்/தமிழ்மொழி)
02. பயிற்சி உத்தியோகத்தர்
03. ஆய்வு உத்தியோகத்தர் (சிங்களம்/தமிழ்மொழி)
04. நூலகர் தரம் II
05. கணனி நிகழ்ச்சித் திட்ட திட்டமிடலாளர்
06. மொழிபெயர்ப்பாளர் (சிங்கள மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கு மற்றும் சிங்கள மொழியில் இருந்து தமிழ் மொழிக்கு)
07. கணனி தரவு குறிப்பு இயக்குனர்
08. முகாமைத்துவ உதவியாளர் (சிங்களம்/தமிழ்மொழி)
09. கற்புல, செவிப்புல பொறிஞர்
10. கற்புல, செவிப்புல உதவியாளர்
11. சாரதி

மேலதிக விபரங்களுக்கு 2006.02.17 ஆம் திகதி வர்த்தமானியைப் பார்க்கவும் விண்ணப்பம் முடிவடையும் திகதி 2006.03.10 ஆகும்.

ஆர்.டி.நியூட்டன் பெரேரா,
பணிப்பாளர் நாயகம்,
தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம்.

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம்
191,தர்மபால மாவத்தை,
கொழும்பு - 07
2006.02.15 .

## தினமுரசு சந்தா விபரம்

**சந்தாக் கட்டண அதிகரிப்பு விபரம்**

இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:

| நாடுகள் | ஒருவருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 4,300 | ரூ.2,150 | ரூ.1,100 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 4,900 | ரூ.2,450 | ரூ.1,250 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 3,800 | ரூ.1,900 | ரூ. 950 |
| உள்நூர் | ரூ. 1,500 | ரூ.750 | ரூ. 375 |


சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரைப் பெற விரும்புவோர் D.D. Enterprises என்ற பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளைகளை முகாமையாளர், தினமுரசு 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசுக் கட்டளையாக வெள்ளவத்தை தபாற்கந்தோரில் மாற்றும் வண்ணம் "Manager, Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

ஈ.மெயில் :- (E-mail):- murasu@sltnet.lk






## மலையாள மாந்திரீகம்

மலையாள மாந்திரீக சக்தியால் பிரிந்தவர்கள் ஒன்று சேர, கணவன் - மனைவி பிணக்கு தீர்ந்து, ஒற்றுமையாக இருக்க, திருமணம் கை கூட, மனங்கவர்ந்த காதலன் காதலி ஒன்று சேர, கல்வி ஞான கவசம் பெற, குபேர வாழ்வு கிட்ட, வெளிநாட்டு பிரயாணத்தடை நீங்க, சகல தோஷங்களும் நிவர்த்தி செய்து கொள்ள அனைத்து விடயங்களுக்கும் நேரில் வருகை தரவும்.

அத்துடன் அருள் ஞானத்துடன் கூறப்படும் ஜாதகங்கள் என்றுமே பிழைத்தது இல்லை. நடந்தது, நடக்க இருப்பது, நீங்கள் எண்ணியவாறு நடக்க இருப்பது, எண்ணியது எண்ணியவாறு எத்தனையாம் திகதி எத்தனை மணிக்கு நிறைவேறும் என்பதை திட்டவட்டமாகத் தெரிந்து கொள்ளவும், மற்றும் கைரேகை பார்த்து தெரிந்து கொள்ள பிறந்த திகதி தேவையில்லை.

வாங்கும் பணத்திற்கு உத்தரவாதம் கொடுப்பதென்றால் அது நான் மட்டுமே! வெளிநாட்டவர்களுக்கு விசேட சலுகையாக 24 மணித்தியால தொலைபேசி சேவையும் உண்டு.

Prof.Dr P. K. Samy (J.D.G.N) JP
Malayala Manthirika Uchchatta Peedam
Sri Durkadevi Aalayam,162, Kotahena Street,
May field Road, Colombo - 13, Srilanka

T/NO 2342463/2342464
2470615
Fax :- 0094 - 11 - 2344831
web- www.drpksamy.com

## இன்னொருவர் பார்வையில்

# சிங்கள தேசிய தமிழ் தேசிய உணர்வும்

**பல்லின - பல் கலாசாரத் தன்மை கொண்ட இலங்கையில், எரியும் பிரச்சினையாக உருவெடுத்து நிற்கும் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண ஆயுத முனையிலும் அரசியல் முனையிலும் எடுத்த முயற்சிகள் தோல்வியையே தழுவி வந்திருக்கின்றன. சம்பந்தப்பட்ட தரப்புகளிடையே பரஸ்பர நம்பிக்கை, நெகிழ்வுப் போக்கு ஆகியவை இல்லாமையே இவற்றுக்கு அடிப்படைக் காரணமென ஆய்வாளர்கள் கூறுகின்றனர். தேசம், தேசியம், பாரம்பரிய தாயகம், சுய நிர்ணய உரிமை என்றெல்லாம் பல்வேறு விடயங்கள் இனப் பிரச்சினைச் சிக்கலுக்குள் சிக்கி நிற்கின்றன. இன்றைய பேச்சுவார்த்தை முயற்சிகளையும் இலங்கையின் யதார்த்த நிலைமைகளையும் கணக்கிலெடுத்து, 'கதிக ஆய்வு வட்டம்' என்ற புத்திஜீவிகள் அமைப்பு, சம்பந்தப்பட்ட தரப்புகளின் கவனத்துக்கு விடுத்திருக்கும் அறிக்கையின் தமிழாக்கத்தை இங்கே தருகிறோம்.**

**தமிழ் "தேசிய உணர்வை" அங்கீகரித்தலும் சகல சமூகங்கள் மத்தியில் நம்பிக்கையையும் ஐக்கியத்தையும் கட்டியெழுப்புதலும் - என்ற தலைப்பில் ஜனாதிபதிக்கும், சர்வகட்சி மாநாட்டிற்கும் இவ் பகிரங்கக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.**

இலங்கை அரசாங்கம், தெற்கிலுள்ள பெரும்பாலான அரசியல் அமைப்புக்கள் மற்றும், ஆய்வாளர்களுடன் இணைந்து அரசியல் தீர்வொன்றினைக் காண்பதற்காக எல்.ரீ.ரீ.ஈ.யுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதில் கவனம் செலுத்தியுள்ளது. தனி நாடொன்றினை நிறுவுவதற்கு எல்.ரீ.ரீ.ஈ. நடத்தி வரும் பயங்கரவாத யுத்தத்திற்குத் தீர்வு காண்பதற்கான ஒரு முயற்சியே இது.

எல்.ரீ.ரீ.ஈ.யினர் பயங்கரவாதத்தில் ஈடுபட்ட போதிலும் "தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள்" என்று எல்.ரீ.ரீ.ஈ. கூற முன்வருவதற்கு தமிழ் "தேசிய உணர்வே" காரணமென்ற விடயத்தை எல்லோரும் மறந்து விட்டனர் போலத் தோன்றுகின்றது. எமது சமுதாயத்தில் நீடித்தகால சமாதானத்தையும் ஐக்கியத்தைய்ும் அபிலாஷைகளாகக் கொண்டிருக்கும் நாமெல்லாரும் ஓர் விடயத்தை எமது கவனத்தில் கொள்ள வேண்டியது எம் அனைவருக்கும் பயன்மிக்கதென்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

வடக்குக் கிழக்கில் தமது பரம்பரை வேர்களைக் கொண்டுள்ளவர்களும் பயங்கரவாத பாசிஸக் கொள்கைகளுக்கு எதிரானவர்களுமான இடதுசாரி மற்றும் ஜனநாயக நோக்கு கொண்ட தமிழர்களும் அரசியல் கட்சி அங்கத்தவர்களும் புலிகளின் அடக்குமுறைக்கும் பயமுறுத்தலுக்கும் இலக்காகியுள்ளனர். இன்று இவர்கள் எல்.ரீ.ரீ.ஈ.க்கு எதிரான தமது குரோதத்தை இரண்டாம் பட்சமாக கருதத் தலைப்பட்டுள்ளனர். இலங்கை அரசாங்கத்தை முதல்தர எதிரியாக இவர்கள் கருதத் தலைப்பட்டுள்ளமையானது, நாம் இங்கே சுட்டிக்காட்டும் விடயத்தை உறுதி செய்கின்றது.

( வடக்கு - கிழக்கிற்கு வெளியே வாழும் இலங்கைத் தமிழர்களும் ஏனைய குழுக்களும் ஸ்தாபனங்களும் எல்.ரீ.ரீ.ஈ.க்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து மேலும் உறுதியான முறையிலும் ஸ்தாபனமயப்படுத்தப்பட்ட வகையிலும் ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளுக்காக குரலெழுப்பும் ஒரு தருணத்தில் இந்த மாற்றம் நிகழ்ந்திருக்கின்றது.)

குறிப்பிட்ட மனித சமூகமொன்று தனது மொழியையும் கலாசாரத்தையும் தமது சமூகத்திற்கே உரித்தான தனித்துவ அடையாளமாகக் கருதி, பேணிச் செழுமைப்படுத்தும் நோக்குக் கொண்ட உணர்வினையே இங்கே நாம் "தேசிய உணர்வு" என்று குறிப்பிடுகின்றோம்.

மேலே கூறப்பட்ட சமூகம், குறிப்பிட்டதொரு நிலத் தொடர்புள்ள பிரதேசத்தில் கூட்டாக வாழும் பட்சத்தில் அந்தப் புவியியல் பகுதிக்குள் குறிப்பிட்ட இலக்குகளை அடைவதற்குத் தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ளும் அரசியல் சுதந்திரம் அதற்கு உண்டென்று கொள்ளப்படுகின்றது. எனினும் கூறப்பட்ட இந்த அரசியல் சுதந்திரம், முன்னரே குறிப்பிடப்பட்ட ஒரு சூத்திரப் பாணியிலான ஸ்தாபன அமைப் பொன்றினைக் கட்டாயமாகக் கொள்ளவேண்டியது என்பது வெகு சாதாரணமாக ஏற்றுக் கொள்ளப் படவில்லை. ஒரு "தேசிய உணர்வை", ஒரு சமூகம் கொண்டிருக்கின்றது என்பதற்காக அந்த சமூகம் ஒரு "தேசிய அரசிற்கு" தன்னிச்சையாக உரித்துடையது என்ற நம்பிக்கையே இவ்வாறான முன்னோடி சூத்திரமாகும் "தேச அரசு" என்ற நவீன எண்ணக்கரு, அந்தத் "தேசம்" ஒரே தன்மையான இனக் குழுவைக் கொண்டிருக்கின்றது என்பதாகின்றது. அதாவது ஏனைய சமூகங்களையும் கலாசாரங்களையும் அந்த அரசில் இருந்து புறந்தள்ளி ஒரு இனச் சமூகத்திற்கே அது உரித்தாகின்றது என்பதை நம்ப வைக்கின்றது. எனவே பல்கலாசார சமூகம் மற்றும் அத்தகைய தன்மை கொண்ட ஓர் உலகைப் பொறுத்தவரை அது இனவாதத் தன்மை கொண்டதாகின்றது. நாங்கள் இலங்கையை சிங்கள தேசமென அழைப்போமானால் அந்த அரசிலிருந்து சிங்களவர் அல்லாத ஏனைய இனக் குழுக்களை புறந்தள்ளும் அச்சுறுத்தலை நாம் எதிர்கொள்வோம். மறுபுறத்தில் வடபகுதித் தமிழ் சமூகத்தின் அதிகாரத்தின் கீழ் இலங்கையிலிருந்து பிரிந்து சென்று, தமிழ் தேச அரசொன்றினை உருவாக்க எல்.ரீ.ரீ.ஈ. க்கு உரிமையுண்டென்று வாதிடப்படுவதை எடுத்துக் கொள்வோம். அதாவது கூறப்படும் அந்தத் தமிழ் அரசிலிருந்து கிழக்கு மாகாணத் தமிழர்களையும் வடக்கிலும் கிழக்கிலுமுள்ள முஸ்லிம்களையும் சிங்களவர்களையும் புறந்தள்ளுவதானது இனவாதக் கொள்கையோடு ஒத்துப் போவதாக அமையும்.

எனவே பன்முக சமூக அமைப்பில் ஒரு நவீன "தேச அரசொன்றினை" அமைக்கும் தேவையற்ற பணியை நோக்கி எமது முயற்சிகளைத் திசை திருப்ப வேண்டிய தேவையில்லை. அதேபோன்று ஒரு நாட்டிற்குள் உள்ள தனித் தனியான அடையாளங்களைக் கொண்ட சகல கலாசாரங்களையும் அவற்றின் சொந்தப் பிரதேசங்களில், தேச

**எல்.ரீ.ரீ.ஈ.யை சந்தோஷப்படுத்துவதற்கு முயற்சி செய்யாமல், தமிழ் - சிங்கள – முஸ்லிம் சமூகங்களுக்கு மத்தியில் பரஸ்பர நம்பிக்கையையும் ஐக்கியத்தையும் கட்டியெழுப்ப முயற்சிப்பதே இலங்கை அரசாங்கத்தினதும் ஏனைய சம்பந்தப்பட்டோரினதும் நோக்கமாக இருக்க வேண்டும். அரசியல் தீர்வொன்றைத் தேடும் இவர்களுக்கு நாம் முன்வைக்கக்கூடிய யோசனை இதுதான்.**

**"தேசிய உணர்வு"களில் இருந்து எழுகின்ற அரசியற் பிணக்குகளின் இறுதித் தீர்வில் அரசியல் சுதந்திரம் மற்றும் உரிமைகள் சம்பந்தமான விடயங்களே முன்னணிக்கு வருகின்றன என்பதனை வலியுறுத்திக் கூறவேண்டிய தேவை இல்லை.**

அரசொன்றினை பிரித்தெடுக்க ஊக்குவிப்பது அதே யளவிற்கு அல்லது அதற்கும் மேலாக அர்த்தமற்றதாகும்.

ஒரு சமூகம் தான் கூட்டாக வாழும் பிரதேசத்திற்குள் தனது மொழியையும் கலாசாரத்தையும் பேணிப் பாதுகாத்து செழுமைப்படுத்துவதற்கான தீர்மானங்களை எடுக்கும் அரசியல் உரிமையை "சுய நிர்ணயத்திற்கான உரிமை" என்று கூறலாம். எனினும் இந்த உரிமை முன்னரே உத்தரவாதப்படுத்தப்பட்ட திட்டவட்டமான உரிமையல்ல. ஆனால் இது பெரும் சமூகப் பரப்பிலுள்ள ஏனைய சமூகங்களின் இணக்கத்தோடு வென்றெடுக்கப்பட்டு பேணிப் பாதுகாக்கப்பட வேண்டிய சுயநிர்ணய உரிமையாகும். குறிப்பிட்ட மக்கள் பிரிவினர் ஆயுதமேந்தத் தீர்மானித்தார்கள் என்ற காரணத்திற்காக வெறுமனே எழுந்தமானமாக எழுகின்ற உரிமையல்ல இது.

சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க முதன் முதலாக ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவதற்கு முந்திய தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் "தமிழ் தேசிய உணர்வு" குறித்து தனது உணர்வலைகளை வெளிப்படுத்தியிருந்தார். எனினும் ஜனாதிபதியாக அவர் பதவியேற்றதும் தனது வாக்குறுதிகளை மறந்துவிட்டு எல்.ரீ.ரீ.ஈ. யோடு பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு முன்னுரிமையளித்தார். இதைத் தவிர அதிகாரத்திலிருந்த ஏனைய சகல அரசாங்கங்களுமே அரசியல் தீர்வொன்றினை முன்வைப்பதற்கு முன்னுரிமை அளித்தன.

இந்த வகையில் சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ எல்.ரீ.ரீ.ஈ.க்கு முன்னுரிமை அளிப்பதானது, சகல அரசியல் கட்சிகளினதும் மற்றும் ஸ்தாபனங்களினதும் பொதுவான நடைமுறையாக இருந்துவந்துள்ளது. அவை தேசிய கட்சிகளாக இருந்தாலென்ன இடதுசாரிகளாக அல்லது வேறு எந்த வகையில் இருந்தாலென்ன இதுவே நடைமுறையாக இருந்து வந்துள்ளது. அதிகாரத்திலிருந்த அரசாங்கங்களில் அவை அங்கம் வகிக்காத போதும் கூட இதுவே பொதுவான நடைமுறையாக இருந்துள்ளது.

இந்த வகையில் தற்போதைய யுத்தம் "அதிகாரப் பகிர்வுடன் சம்பந்தப்பட்ட ஒரு பிரச்சினையென்று தாம் நம்பியதை, மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் தொடர்ச்சியாகக் கூறி வந்துள்ளன. தெற்கிலுள்ள அரசியற் கட்சிகளும் ஏனைய ஸ்தாபனங்களும் இதனையே கூறியும் வெளிப்படுத்தியும் வந்துள்ளன. எனவே "அதிகாரப் பகிர்வு"க்கு வழிவகைகளைக் கண்டு பிடிப்பதே தீர்வாகும்.

"தேசிய உணர்வு"களில் இருந்து எழுகின்ற அரசியற் பிணக்குகளின் இறுதித் தீர்வில் அரசியல் சுதந்திரம் மற்றும் உரிமைகள் சம்பந்தமான விடயங்களே முன்னணிக்கு வருகின்றன என்பதனை வலியுறுத்திக் கூறவேண்டிய தேவையில்லை.

" அதிகாரப் பகிர்வு"ப் பிரச்சினையென்று இதனை அர்த்தப்படுத்துவதற்கு முன்னர் மனித விவகாரங்களோடு சம்பந்தப்பட்ட ஒரு பிரச்சினையாக இது எழுந்துள்ளதென்பதை நாம் மறந்து விடுகின்றோம். சிங்கள, தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கு மத்தியில் பரஸ்பர நம்பிக்கையும் அங்கீகாரமும் போதியளவிற்கு இல்லாததால் எழுந்த பிரச்சினை என்பதனையும் மறந்து விடுகின்றோம். மனித சமூகங்களைச் சார்ந்தவர்கள் என்ற வகையில் நாம் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் மதிக்கத் தவறியதால் எழுந்த மனோபாவப் பிரச்சினை இது என்பதையும் மறந்து விடுகின்றோம்.

சிங்கள ஆதிக்கதிலுள்ள இலங்கை அரசாங்கங்கள் தமிழ் மக்களின் தனித்துவ அடையாளத்திற்கு மதிப்பளிக்கத் தவறியமையினாலும் போதியளவு அங்கீகாரமளிக்கத் தவறியதாலும் ஏற்பட்ட பிரச்சினையோடு சம்பந்தப்பட்டதென்று தமிழ் மக்கள் அபிப்பிராயப்படுகின்றார்கள். இதுவே தமிழ் மக்களின் கருத்தோட்டம். சிங்கள ஆதிக்கத்திலுள்ள அரசாங்கங்கள் தமக்கு நீதி வழங்குமென்று தமிழ் மக்கள் நம்பத் தயாரில்லை. இதுவே தமிழ் மக்களைப் பொறுத்தவரை அன்றும் இன்றுமுள்ள பிரச்சினையாகும். இதுதான் இன்றும் அவர்கள் மத்தியில் இருக்கும் கருத்தாகும். இதுவே பிரச்சினையென்பதும் அவர்கள் கருத்து.

**எல்.ரீ.ரீ.ஈ. யைத் 'தாஜா' செய்து சகல இனச் சமூகங்களுக்கு மத்தியில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புதல்.**

எனவே எல்.ரீ.ரீ.ஈ.யை சந்தோஷப்படுத்துவதற்கு முயற்சி செய்யாமல், தமிழ் - சிங்கள – முஸ்லிம் சமூகங்களுக்கு மத்தியில் பரஸ்பர நம்பிக்கையையும் ஐக்கியத்தையும் கட்டியெழுப்ப முயற்சிப்பதே இலங்கை அரசாங்கத்தினதும் ஏனைய சம்பந்தப்பட்டோரினதும் நோக்கமாக இருக்க வேண்டும். அரசியல் தீர்வொன்றைத் தேடும் இவர்களுக்கு நாம் முன்வைக்கக்கூடிய யோசனை இதுதான். தமிழ் "தேசிய உணர்வை" ஒரு சமூகக் கண்ணோட்டமாக அங்கீகரித்து ஏற்றுக் கொள்வதே இந்த இலக்கினை அடைவதற்கான முதற் படியென்று நாம் யோசனை கூறுகின்றோம். பொதுவாகக் கூறுவதானால் இலங்கையிலுள்ள சகல பிரஜைகளும் தத்தமது மொழியையும் கலாசாரத்தையும் பேணிப் பாதுகாத்து, செழுமைப்படுத்துவதற்கான உரிமையினைக் கொண்டுள்ளனரென்பது ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்டுள்ளதென்று கூறலாம்.

எனினும் இலங்கையில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்கள், தாம் வாழும் புவியியல் பிரதேசங்களில் ஒரு சமூகமாக வாழ்வதால் மேற்கண்ட உரிமையினை, குறிப்பாக தாம் வாழும் பிரதேசங்களில் கூட்டாக அனுபவிக்கக் கூடியவகையில் அரசியல் அமைப்பு மீளமைக்கப்பட வேண்டுமென்று அவர்கள் விரும்புகின்றனர். எவ்வாறெனினும் இதுவே வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் மக்கள் மத்தியில் வெளிப்படுத்தப்படும் "தேசிய உணர்வு" ஆகும். இந்த வகையில் 'சுயாட்சி' அல்லது 'தன்னாட்சி' என்ற பதப் பிரயோகத்தின் அர்த்தம் இதுதான் என்றால் "தேசிய உணர்வு"களினால் உந்தப்படும் எவருமே இதனை நியாயமற்ற கோரிக்கைகளாகக் கொள்ள முடியாது.

எனவே 'சுயாட்சி' என்ற தமிழர் சமூகத்தின் அபிலாஷைகளை ஏற்றுக்கொண்டு இலங்கையில் அரசியல் தன்மையினை மாற்றியமைப்பதற்கு முன்னோடியாக இலங்கை அரசாங்கம் செய்ய வேண்டியதொன்றுண்டு. அதாவது சகல அரசியல் கட்சிகள் மற்றும் சகல அரசியல் ஸ்தாபனங்களின் இணக்கத்துடனும் இலங்கை மக்களின் அங்கீகாரத்துடனும் உத்தியோகபூர்வமாக, அரச மட்டத்தில் அரசாங்கக் கொள்கையாக கீழே கூறப்படுவதை ஏற்றுக்கொள்வதாகப் பிரகடனப்படுத்த வேண்டும். அதாவது இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்களும், கிழக்கு மாகாணத்தில் வாழும் முஸ்லிம் மக்களும் தத்தமது மொழிகளையும் கலாசாரங்களையும் பேணிப் பாதுகாத்துச் செழுமைப்படுத்த உரிமை உடையவரென்பதை அரச கொள்கையாகப் பிரகடனப்படுத்த வேண்டும். அத்துடன் இதனுடன் தொடர்புடைய அரசியல் கலந்துரையாடல்களில் சம்பந்தப்பட்ட சகல சமூகங்களினதும் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும். சம்பந்தப்பட்ட சமூகங்களின் கருத்துக்களும் பெறப்பட வேண்டும். இறுதியில் அவை இலங்கை மக்களினால் அங்கீகரிக்கப்படவும் வேண்டும். அப்போதுதான் இப் பிணக்கு தொடர்பான உண்மையான கலந்துரையாடல்களை சம்பந்தப்பட்ட சகல சமூகங்களிடையிலும் விசுவாசமாக ஆரம்பிக்க முடியும்.


*(தொடரும்....)*

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

'ராஜா வீட்டுக் கன்னுக்குட்டி' என்னும் எனது நாடகத்தில், அவர் 'வில்லியம்ஸ்' என்னும் பாத்திரத்தை ஏற்று அசத்தினார். இப்பொழுதும் வி.எஸ்.ராகவன் நடிக்கிறார் என்றால், என் பேனா மூடி தானாகத் திறந்து கொள்ளும். ஏனெனில், உரையாடல்களுக்கு உயிர் கொடுக்கும் வித்தகம் வி.எஸ்.ராகவனிடம் மட்டுமே நான் அதிக சதவிகிதத்தில் கண்டிருக்கிறேன். நண்பர் பணியாற்றிய காரணத்தால், ஸ்ரீகாந்தின் நடிப்பில் மேல்நாட்டு வாசனை மிகுதியாக இருக்கும். என்னுடைய 'ராஜா வீட்டுக் கன்னுக்குட்டி' நாடகத்தில் கதாநாயகனாக நடித்து எனக்குப் பெருமை சேர்த்த என் நண்பர் ஸ்ரீகாந்த், ஆரம்ப நாட்களில் எனக்கு உணவூட்டி வளர்த்தவர் என்பதை இந்தக் கட்டுரைத் தொடரின் முன்னதாகவே சொல்லியிருக்கிறேன் ஸ்ரீகாந்திற்கு புகழ்கிரீடம் சூட்டியது வேண்டுகோளுக்கேற்ப, 'பூனைக்கண்கள்' என்று ஒரு நாடகத்தை நான் எழுதி, திரு.வி.எஸ்.ராகவன் நடித்து இயக்க - அந்த நாடகத்தைத் தொலைக்காட்சிப் பெட்டியில் பார்த்த, கன்னட உலகின் முடிசூடா மன்னராகத் திகழும் நடிகர் திரு.ராஜ்குமார், நாடக உரிமையை என்னிடம் வாங்கி பிரமாண்டமான கன்னடப் படமாகத் தயாரித்து, தானே இரு வேடங்கள் தாங்கியும் நடித்தார்.

'பூனைக்கண்கள்' நாடகம், திரு. ராஜ் குமாரைக் கவர்வதற்கு முக்கிய காரணம், நான் படைத்த பாத்திரத்தைப் பழுதின்றி துலங்கச் செய்த நண்பர் ராகவனின் நடிப்புத்தான்.



பிறருக்காக நான் எழுதிக் கொடுத்த நாடகங்களில் இரண்ரடப் பற்றிச் சொல்ல மறந்துவிட்டேன்.

ஒன்று -

'ராகம் தாளம் பல்லவி' - இது மறைந்த மாபெரும் நடிகரும் என் அருமை நண்பருமான திரு.டி.எஸ்.சேஷாத்திரி அவர்கள் நடத்தியது. இந்த நாடகம் பம்பாயில் ஷண்முகானந்தா அரங்கில் தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெற்று Times of Indian முதலிய ஏடுகள் பத்தி பத்தியாகப் பாராட்டி விமர்ச்சித்திருக்கின்றன. ஒரு நாதஸ்தவர வித்வானை பற்றியகதை இது. திரு. டி.எஸ்.சேஷாத்திரி குழுவினர் தங்களது இடையறா உழைப்பால், மேடையில் மூன்று மணி நேரம் நாதஸ்வர மழை பொழிந்தார்கள்.

வி.எஸ்.ராகவன் எல்லா விருதுகளுக்கும் பொருத்தமானவர், நூறு சதவிகிதம் தகுதியானவர் என்பதில் எனக்கு எள் முனையளவு கூடச் சந்தேகமில்லை.

நான் தமிழ்நாடு இயல், இசை நாடக மன்றத்தின் தலைவராயிருந்த நாட்களில், நண்பர் ராகவன் செயலாளராக இருந்து செவ்வனே பணியாற்றியவர். அப்போது, அவர் நலிந்த கலைஞர்களின் கண்ணீரைத் துடைத்த கைக்குட்டையாகத் துலங்கினார் என்றால் அது முக்காலும் உண்மை.

நடிகர் ஸ்ரீகாந்தைப் பற்றிச் சொல்ல வேண்டுமாயின், அந்நாளைய பாலசந்தர் நாடகங்களைத் தூக்கி நிறுத்திய தூண்களில் அவரும் ஒருவர். அமெரிக்க தூதரகத்தில் ஜெயகாந்தனின் 'சில நேரங்களில் சில மனிதர்கள்.' சினிமாவுலகில் - ஸ்ரீகாந்த் மிகப் பெரிய வலம் வந்தார் என்பது நாடறிந்த உண்மை. இருப்பினும், இன்றும் கூட நாடக தாகம் மிக்க நடிகராக ஸ்ரீகாந்த் விளங்குகிறார் என்றால், அவரது மேடைக் காதல் அத்தகையது. எனது வசனங்களை வாழ்வித்தவர்கள் என்கிற வகையில் வி.எஸ்.ராகவனையும், ஸ்ரீகாந்தையும் நான் மறப்பதற்கில்லை.


திரு.வி.எஸ்.ராகவன் குழுவிற்காக நான் 'முதுமை ஊஞ்சலாடுகிறது' என்று ஒரு முழுநீள நகைச்சுவை நாடகத்தை எழுதிக்கொடுத்தேன். குணச்சித்திரப் பாத்திரங்களில் சுடர்விடும் ராகவன், நகைச்சுவை பாத்திரத்திலும் சக்கைப்போடு போட்டார்.

தொலைக்காட்சி நிலையத்தில் பணிபுரிந்த என் அருமை நண்பர் திரு.கோபாலி அவர்களின்

(தொடரும்.......)

---

**ஆடைகள்** எதுவும் இன்றி ஆண்களும் பெண்களுமாக இங்கே அமைதிப் போராட்டம் நடத்துகின்றனர். எனவே இதை ஒரு பாலியல் தொழிற் சாலை என எண்ணி விடாதீர்கள்.




அதாவது, மிருகங்களைப் பயன்டுத்தி மருத்துவ பரிசோதனைகளை மேற்கொள்ளக் கூடாது என்ற கோரிக்கையை முன்வைத்து இம்மக்கள் பார்ஸிலோனா நகரில் உள்ள புனித ஜோம் சதுக்கத்தில் அமைதிப் போராட்டமொன்றை நடத்துகின்றனர்.

அமைதிப் போராட்டம் என போராட்டத்தில் 'இப்படி' ஈடுபட்டவர்கள் கூறினாலும், பார்ப்போர் மனதுகளில்...?

---

## இரகசியம்



**ஜெக்ஸன்** குடும்பத்தினருக்கு இது போதாத காலம் எனக் கூறப்படுகின்றது.

மைக்கல் ஜெக்ஸன் சிறுவர் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டுகளின் பேரில் தள்ளாடிக் கொண்டிருக்கும் போது 'தங்கை ஜெக்ஸன்' என அறியப்படுகின்ற ஜெனற் ஜெக்ஸன் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் தனது ஒற்றை மார்பகத்தை காட்டினார் என ஒரு குற்றச் சாட்டு எழுந்தது.

இப்போது இன்னுமொரு குற்றச்சாட்டு! இந்தக் குற்றச் சாட்டை சுமத்தியிருப்பவர் ஜெனற்றின் முதல் கணவனின் சகோதரர்.

அதாவது, பல வருடங்களாக மூடி மறைத்து வைத்திருந்த ஒரு இரகசியத்தை இவர் வெளியிட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

அந்த இரகசியம் இதுதான் ஜெனற் இளம் யுவதியைப் போல் இருந்தாலும் 18 வயதில் அவருக்கு ஒரு மகள் இருக்கிறாள்.

இந்த இரகசியம் அம்பலத்துக்கு வந்து விட்டதும் ஜெனற் சற்று தடுமாற்றம் கண்டுள்ளார். எனினும், இப்படியொரு குற்றச்சாட்டை தனது மச்சினனுக்கு (முன்னாள்) சித்தப்பிரமை பிடித்து விட்டது என்று கூறியும் வருகிறார்.

---



## தொங்கும் அழகி

**புகழ்பெற்ற** பிரித்தானிய மொடல் அழகியான கேட்மோஸ், சிலகாலமாகப் போதைப் பொருட்களுக்கு அடிமையாகி இருந்தார். இதனால் இவரது உறவினர்கள் இவரை புனர்வாழ்வு முகாமுக்குள் தள்ளி விட்டனர்.

புனர்வாழ்வு பெற்றதன் பின்னர் போதைப் பொருட்களுக்கு ஒரு முடிவைக் கட்டிவிட்டு மீண்டும் தனது தொழிலுக்கு வந்துள்ளார்.

மீண்டும் தனது 'மொடல்' தொழிலை அவர் ஆரம்பித்தது இங்கே காணப்படும் புகைப்படத்தில் உள்ளவாறு வெளவாலைப் போன்றத் தோற்றத்திலாகும். இங்கே இவர் ஒரு மரக்கிளையைப் பிடித்து தொங்கிக் கொண்டிருக்கிறார். எதையாவது பிடித்து தொங்கிக் கொண்டிருப்பதுதான் இவரது வாழ்க்கை என்றாகி விட்டுள்ளது.

---

## சித்திரமே..... ஆடையாய்!

**உடல்** சித்திரக்கலை (Body painting) இன்றைய உலகில் புகழ் பெற்றதொரு கலையாகியுள்ளது.

சீனாவில் ஹென்சுனி எனும் சுப்பர் மார்க்கட்டில் பகிரங்கமாக தனது உடலை சித்திரங்களால் தீட்டிக் கொள்ளும் ஒரு சீன யுவதியையே இங்கு காண்கிறீர்கள்

இப்படியே போனால் ஆடை உற்பத்தியாளர்களின் கதி? அம்போ தான்....!





## முத்த நிறுத்தம் தேவை




**ஹெபடைஸ்டீஸ்** C (Hepatitis C) என்பது உதிரத்தின் மூலம் உருவாகின்ற ஒரு வகை கிருமியாகும். இக்கிருமி ஈரலில் பாதிப்புக்களை ஏற்படுத்தும் என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் இந்த பயங்கரமான கிருமி முத்தமிடுவதன் மூலமும் பற்தூரிகைகளை மாற்றி உபயோகிப்பதன் மூலம் தொற்றக் கூடும்.

எனவே முத்தங்கள் கூட இப்போது ஆபத்தைக் கொண்டு தரலாம்! அதிலும் முரசுகளில் நோய்கள் இருந்தால் அந்நபர்கள் முத்த நிறுத்தத்தில் ஈடுபடுவதுதான் நல்ல வழியாகும்!

---

**உளவு பார்த்தலால் ஏற்படும் நன்மை, தீமைகள் பற்றிக் கூறும் அனுபவக் கட்டுரைத் தொடர்....**




**ரேடியோ** கண்டுபிடிக்கப்பட்ட பிறகு வெவ்வேறு நாடுகளில் பரவி செயல்படும் உளவாளிகளோடு உளவுத் துறையின் தலைமை அலுவலகம் தொடர்பு வைத்துக் கொள்வது சுலபமாகிவிட்டது.

பாராசூட்டுக்களைப் பயன்படுத்தி தேவைப்பட்ட இடங்களில் உளவாளிகள் போர்க்காலங்களில் இறங்கிக் கொள்வார்கள். இரண்டாயிரம் அல்லது மூவாயிரம் அடி உயரத்திற்கு மேலிருந்து குதித்தால்தான் பாராசூட் விரிந்து மெதுவாகக் கீழே இறங்குவதற்கு உதவியாக இருக்கும். ஆனால் இரண்டாவது உலகப் போரின்போது Satelite Parachute என்று புதிய பாராசூட்டுக்கள் பயன்படுத்தப்பட்டன. இவற்றின் உதவியால் அறுநூறு அடி உயரத்திலிருந்துகூட கீழே குதித்துவிட முடியும். குதிக்கத் தொடங்கிய உடனே இந்த பாராசூட் விரிந்து விடும். ஆகவே எதிரிகளின் கண்களில் படாமல் குதித்து விடுவது சுலபம்.

நாச வேலைகளில் ஈடுபடுவது இரண்டாவது உலகப் போரின்போது அதிகரித்தது. உளவாளிகள் இதற்கென்று விசேஷமான பயிற்சிகளையும் பெற்றார்கள். ஒரு காரினுடைய பெட்ரோல் டாங்கியில் சிறிதளவு சர்க்கரை போன்ற பொருளைப் போட்டு விட்டால் போதும். குறிப்பிட்ட நேரங்கழித்து அந்தப் பெட்ரோல் டாங்கை அது வெடிக்கச் செய்துவிடும்.

சங்கேதக் குறிப்புக்களை (Code) பயன்படுத்துவது இரண்டாவது உலகப் போரின் போதுதான் அதிகமாயிற்று.

செய்திகளை எவ்வாறு இணைத்துப் படித்தால் உண்மையான தகவல்களைத் தெரிந்துகொள்ள முடியும் என்பதற்கு பல்வேறு சங்கேதக் குறிப்புக்கள் கையாளப்பட்டன. அனுப்பப்படுகின்ற செய்திகள் இடையில் எவர் கையில் கிடைத்தாலும் அவரால் அதன் உண்மையான அர்த்தத்தைப் புரிந்துகொள்ள முடியாது.

உளவு இலாகாவின் கண்கள் போல ராடார் (Radar) கருவி பயன்படலாயிற்று. ஓரிடத்தில் நடைபெறும் விஞ்ஞான சோதனைகளை இன்னொரு இடத்தில் இருந்தபடியே ராடார் கருவி மூலம் அறிந்துகொள்ள முடியும்.

U-2 விமானத்தில் பறந்து ரஷ்யாவின் ஆரல் கடலுக்கு அருகேயுள்ள ஏவுகணை தளத்தை அமெரிக்கர்கள் படமெடுக்க விரும்பினார்கள். நாற்பத்தெட்டு அங்குல லென்ஸ் கொண்ட கேமரா பயன்படுத்தப்பட்டது. இந்த கேமராவினால் ஐம்பதாயிரம் அடி உயரத்திலிருந்து துல்லியமாகப் படம் எடுக்க முடியும். சோவியத் ராடார்கள் அனுப்புகின்ற செய்திகளை கிரகிக்கக் கூடிய டேப்புக்கள் இந்த விமானத்தில் பொருத்தப்பட்டிருந்தன. ரஷ்யா சைபீரிய பாலைவனப் பகுதியில் அணு ஆயுதப் பரிசோதனைகள் ஏதாவது செய்கிறதா என்று காற்று மண்டலத்தைப் பரிசோதித்துக் கண்டறிய கருவிகளும் அந்த விமானத்தில் இருந்தன. ஐம்பது சதுர மைல் பரப்பளவில் உள்ள அனைத்தையும் படமெடுக்கும் சக்தி வாய்ந்த கேமராவும் அதிலிருந்தது. அது எடுக்கும் படங்களிலிருந்து இரண்டு சதுர அடி பரப்பளவுள்ள எந்த பொருள் பூமியில் இருந்தாலும் அது இன்ன பொருள்தான் என்று கண்டுபிடித்துச் சொல்லிவிடலாம்!

அமெரிக்க உளவாளிகள் மட்டும்தான் இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபடுகிறார்கள் என்பதில்லை. ரஷ்ய உளவாளிகளும் இதைத்தான் செய்கிறார்கள்.

(தொடரும்.......)

(நன்றி : நர்மதா)

# அதிரும் கொலையாளி ஆட்டோ சங்கர்



**6 நபர்களைக்** கொலை செய்த ஆட்டோ சங்கர், சிறையில் இருந்து தப்பி ஓடினான்.

ஆட்டோ சங்கர் மற்றும் அவனது கூட்டாளிகள் மீது கோர்ட்டில் வழக்குத் தொடரப்பட்டது. இந்த வழக்கு 21.08.1990 அன்று விசாரணைக்கு வருவதாக இருந்தது.

### தப்பி ஓட்டம்

அதற்கு முன் பொலிசுக்குப் பெரிய அதிர்ச்சி தரும் சம்பவம் நடந்தது.

அதாவது 20.08.1990 அன்று நள்ளிரவு சென்னை மத்திய சிறையில் இருந்து ஆட்டோ சங்கர், அவனது தம்பி மோகன், கூட்டாளி செல்வராஜ் ஆகியோர் தப்பிவிட்டனர். இவர்களுடன் அதே ஜெயில் அறைக்குள் (செல்) இருந்த மற்றொரு கொலை கொள்ளை வழக்கில் சம்பந்தப்பட்ட வக்கீல் ராஜா, சுண்டல் குமார் ஆகியோரும் ஓடிவிட்டனர்.



மீண்டும் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட பின்னர் ஆட்டோ சங்கர்.

இந்த 5 பேரும் தப்புவதற்கு ஜெயில் ஊழியர்கள் சிலரும், வக்கீல் ராஜாவின் நண்பனான உதயா (ஜெயிலில் இருந்து பரோலில் வெளியே வந்து தலைமறைவாக திரிந்தவன்) என்பவனும் உதவியாக இருந்தார்கள்.

உதயா, சம்பவத்தன்று நள்ளிரவில் காரில் மத்திய சிறைச்சாலை அருகே சென்று மரத்தில் ஏறி நின்று ஜெயில் காம்பவுண்டுக்குள் கயிற்றைப் போட்டான். அந்த கயிறு வழியாக 5 பேரும் ஏறி குதித்து தப்பினார்கள்.

தப்பிய 5 கைதிகளைப் பொலிசார் சல்லடை போட்டுத் தேடினார்கள். ஒரு வாரத்தில் வக்கீல் ராஜா, சுண்டல் குமார் இருவரும் பெங்களூரில் சிக்கினார்கள். இவர்களிடம் விசாரணை நடத்தியதில் ஆட்டோ சங்கர் தன்னுடைய புதிய காதலி தேவியுடன் ஒரிசா சென்று இருப்பதாகத் தெரியவந்தது.

அதோடு ஆட்டோ சங்கருக்கு தேவியுடன் ஏற்பட்ட தொடர்பு மற்றும் அவனைப் பற்றிய காதல் விவகாரங்களும் வெளிவந்தன. ஜெயில் பறவையாக இருக்கும் போது ஆட்டோ சங்கரே இவற்றை ஜெயில் நண்பர்களிடம் கூறி இருக்கிறான்.

### தேவியின் தொடர்பு

சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்தபோது, ஆட்டோ சங்கரின் காதல் வலையில் தேவி சிக்கினாள். தேவி, சென்னை பல்லாவரத்தைச் சேர்ந்தவள். அவளுடைய கணவன் கொலை வழக்கில் ஆயுள் தண்டனை அடைந்து மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

அவரைப் பார்க்க தேவி வந்த போது சங்கரை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அடிக்கடி சந்தித்து பேசியதில் இருவருக்கும் காதல் ஏற்பட்டது.

தேவிக்கு ஆட்டோ சங்கர் அவனுடைய பெயர் பதித்த மோதிரத்தை பரிசாக வழங்கினான் அதே போல், தேவியும் அவளுடைய பெயர் பதித்த மோதிரம் ஒன்றை பரிசாகக் கொடுத்தாள்.

இப்படி 6 மாத காலமாக ஆட்டோ சங்கர் தேவிக்கு ஜெயில் காதலனாக இருந்தான். காதலியுடன் உல்லாச வாழ்க்கை வாழவேண்டும் என்ற எண்ணத்தில்தான் ஆட்டோ சங்கர் தப்பினான் என்று தெரிய வந்தது.

### தேவி கைது

இதன் பேரில் பொலிஸார் வக்கீல் ராஜா. சுண்டல் குமார் ஆகியோருடன் ஒரிசாவில் உள்ள ரூர்கேலாவுக்குச் சென்றனர்.

ரூர்கேலா நகரம் அருகே ஒரு குடிசை வீட்டில் ஆட்டோ சங்கர் அவனுடைய காதலியுடன் தங்கியிருப்பதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது. அங்கு தேவி கழுத்தில் தாலி கட்டி குடும்பம் நடத்தி வந்தான்.

அந்த கிராமத்தின் முக்கிய புள்ளிகளின் உதவியுடன் பொலிஸார் மாறுவேடத்தில் சென்று ஆட்டோ சங்கரையும், காதலி தேவியையும் மடக்கிப் பிடித்தார்கள். ஆட்டோ சங்கர் கைவிலங்கு மாட்டி பொலிஸ் வேனில் ஏற்றப்பட்டான்.

பொலிஸில் சிக்கிக்கொண்டதும் ஆட்டோ சங்கர் அதிர்ச்சியில் உறைந்துபோனான். எதுவும் பேசவில்லை. தேவி தேம்பி தேம்பி அழுதாள்.

தப்பி ஓடிய 12 நாட்களில் பொலிஸார் அவனைக் கண்டு பிடித்து கைது செய்து விட்டனர். ஆட்டோ சங்கரின் தம்பி மோகன், கூட்டாளி செல்வராஜ் ஆகிய 2 பேரும் பீகார் மாநிலம் பாட்னாவுக்கு தப்பிச் சென்றதாகத் தகவல் கிடைத்தது. உடனே பொலிஸார் பாட்னா விரைந்தனர்.

அங்கு மோகனும், செல்வராஜூவும் சி.ஐ.டி. பொலிஸிடம் வசமாகச் சிக்கினார்கள்.



கைதான போது தேவி

### நீதிமன்றத்தில் ஆஜர்

ஒரிசாவில் இருந்து சென்னைக்கு ரெயில் போக்குவரத்து பாதிக் கப்பட்டு இருந்தது. அதனால் சங்கரும், தேவியும் விமானத்தில் சென்னைக்குக் கொண்டு வரப்பட்டனர். ஆட்டோ சங்கர் நீளக்காற்சட்டை, முழுக்கை சட்டை அணிந்திருந்தான். சட்டையின் இரு கைகளையும் மடக்கி விட்டு ஸ்டைலாக வந்தான்.

பொலிஸ் டி.ஜி.பி. துரை முன்பு ஆட்டோ சங்கரை ஆஜர்படுத்தினர். அப்போது ஆட்டோ சங்கரை நிருபர்கள் பார்த்தார்கள். சங்கரைப் போட்டோ எடுத்தனர்.

மறுநாள் சங்கரும் தேவியும் கோர்ட்டில் ஆஜர் படுத்தப்பட்டனர். விசாரணைக்காக 2 பேரையும் 7 நாட்கள் காவலில் வைக்க பொலிஸார் அனுமதி பெற்றார்கள். கோர்ட் விசாரணை முடிந்ததும் ஆட்டோ சங்கரும், தேவியும் ஐ.ஜி. அலுவலகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

(கொலைகள் தொடரும்...)

# உலகப் போர்



வின்சன் சர்ச்சில்

**பிரான்ஸைக்** கைப்பற்றிக் கொண்ட ஹிட்லர் அடுத்தபடியாக பிரிட்டன் மீது குறிவைத்தார். போர் ஆரம்பமானபோது இங்கிலாந்து பிரதமராக இருந்தவர் சேம்பர்லைன். அவர்



ஹிட்லர்

ஜெர்மனியைத் 'தாஜா' செய்து சமாதானமாக போய்விடலாம் என்று நினைத்தார். அதன் விளைவாக போர் நடவடிக்கைகளைச் சரியாக எடுக்கவில்லை. பிரிட்டனை ஹிட்லர் தாக்கியபோது அதை இங்கிலாந்து இராணுவம் சமாளிக்க முடியவில்லை.

இதனால் பிரதமர் சேம்பர்லைன் மீது இங்கிலாந்து மக்கள் சீற்றம் கொண்டனர். பதவியை விட்டு விலகும்படி ஆர்ப்பாட்டங்கள் நடத்தினர். இதனால் பதவியை சேம்பர்லைன் இராஜினாமா செய்தார். அவருக்குப் பதிலாக சர்ச்சில் பிரதமரானார்.

இங்கிலாந்துக்கு ஹிட்லர் 'இறுதி எச்சரிக்கை' விடுத்தார். 'நீங்களாக சரண் அடைந்து விடுங்கள். இல்லாவிட்டால் பிரிட்டனைத் தரைமட்டம் ஆக்கிவிடுவேன்" என்று கொக்கரித்தார்.

சர்ச்சில் மிகப் பெரிய ராஜ தந்திரி, போர்ப்பயிற்சி பெற்றவர் இரும்பு போல உறுதியானவர். அவர் சுருட்டைப் பிடித்தபடி சிரித்துக் கொண்டே சொன்னார். "சரண் அடையும்படி யாரைப் பார்த்துச் சொல்கிறாய்? உன் மிரட்டலுக்கு எல்லாம் இங்கிலாந்து மக்கள் பயந்து விடமாட்டார்கள். உன்னால் முடிந்ததைச் செய்!" சர்ச்சில் இவ்வாறு கூறியதைக்கேட்டு அடங்காத கோபம் கொண்டார், ஹிட்லர்.

1940 ஜுலை 10ஆம் திகதி தனது விமானப்படையை பிரிட்டன் மீது ஏவிவிட்டார். ஜெர்மன் போர் விமானங்கள், அணி அணியாகப் பறந்து சென்று பிரிட்டன் மீது குண்டுமாரி பொழிந்தன. ஜுலை 28ஆம் திகதிக்குள் 7,500 தடவை விமானத்தாக்குதல் நடந்தது.



ஜெர்மனால் தாக்கப்பட்ட பக்கிங்காம் அரண்மனை

லண்டன் மாநகரத்தின் மீதும் குண்டு வீச்சு நடந்தது. இதில், ஏராளமான கட்டிடங்கள் சேதம் அடைந்தன.

இங்கிலாந்து அரண்மனை ('பக்கிங்காம் அரண்மனை') பாராளுமன்ற கட்டிடம் ஆகியவையும் விமானத்தாக்குதலுக்குத் தப்ப முடியவில்லை. அவை பலத்த சேதம் அடைந்தன. பிரிட்டிஷ் விமானப் படை எதிர்தாக்குதல் நடத்தியது. 575 ஜெர்மனி விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. பிரிட்டன் இழந்தது 100 விமானங்கள் மட்டுமே. நவம்பர் 14 ஆம் திகதி லண்டன் மீது மிகப் பெரிய தாக்குதலை ஜெர்மனி நடத்தியது. 500 போர் விமானங்கள் லண்டன் மீது பறந்து குண்டுமாரிப் பொழிந்தன. இதனால், புகழ்பெற்ற கிறிஸ்தவ தேவாலயம் உள்ளிட்ட சுமார் 60 ஆயிரம் கட்டிடங்கள் சேதம் அடைந்தன. 586 பேர் பலியானார்கள்.

ஜெர்மனி விமானங்கள் வரிசை வரிசையாக வந்து சரமாரியாக குண்டு வீசிய போது. 'நெருப்பு மழை' பெய்தது போல இருந்ததாக அந்த சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் கூறினார்கள்.

ஜெர்மனி இவ்வாறு இடைவிடாமல் தாக்குதல் நடத்தியபோதும், இங்கிலாந்து மக்கள் மனம் தளர்ந்து விடவில்லை. மலைபோல் நிமிர்ந்து நின்றார்கள்.

பிரதமர் சர்ச்சில் பின்னால் மக்கள் ஓரணியில் நின்று அவர் கரத்தைப் பலப்படுத்தினார்கள். பிரிட்டனைச் சுலபமாக சரண் அடையச் செய்ய முடியும் என்று நினைத்த ஹிட்லர் ஏமாற்றம் அடைந்தார்.

இதனால் ஹிட்லருக்குப் பெரும் கோபம் ஏற்பட்டது. அதனால் ஹிட்லர் யுத்தநிறுத்தத்திற்குத் திரும்புவது போல தன்னை வெளிப்படுத்திக் கொண்டார்.


"ரஷ்யாவைப் பிடித்துவிட்டால் பிரிட்டன் தானாகப் பணிந்து விடும்" என்று நினைத்தார்.

(தொடரும்...)



வையமிங் கனைத்தும் ஆக்கியும் காத்தும்
மாய்த்துமே மகிழ்திடு தாயைத்
துய்யவெண் ணிறந்தாள் தனைக்கரி யவளைத்
துணையெனத் தொடர்ந்தது கொண்டே.

**- சுப்பிரமணிய பாரதியார்**



# நல்லா இருக்கேன்!



பங்கனப்பள்ளி என்ற ஊரில் ஒரு கணவன் - மனைவி வாழ்ந்து வந்தனர். திருமணமாகிப் பல ஆண்டுகள் ஆகியும் இருவரும் எதற்கெடுத்தாலும் ஒருவரோடு ஒருவர் சண்டை போட்டுக் கொண்டிருந்தனர். இருவருமே விட்டுத்தரவே மாட்டார்கள். நீயா? நானா தான்.

ஒரு நாள் களைப்புடன் வீடு திரும்பிய கணவன், “நான் எவ்வளவு வேலைகளைத்தான் செய்வேன். இனி நீதான் நம் வீட்டு மாடுகளைப் பார்த்துக் கொள்ள வேண்டும்” என்று சொன்னார்.

இதைக் கேட்ட அவர் மனைவி, “மாடுகளுக்குத் தீனி போடுவது, பால் கறப்பது எல்லாம் ஆண்களின் வேலை. நீங்கள் தான் செய்ய வேண்டும் என்னால் செய்ய முடியாது” என்று சொன்னாள்.

நீ தான் செய்ய வேண்டும்; நீங்கள்தான் செய்ய வேண்டும் என்று இருவரும் சண்டை போடத் தொடங்கினார்கள்.

நீண்ட நேரமாகியும் அவர்கள் சண்டை ஓய்வதாக இல்லை.

“நம் இருவரில் யார் முதலில் பேசுகின்றாரோ அவரே மாடுகளைப் பார்த்துக் கொள்ள வேண்டும்” என்றார் அவர்.

அவளும் இதற்கு ஒப்புக்கொண்டாள்.

இருவருமே அமர்ந்திருந்தனர். நேரமோ ஓடிக்கொண்டிருந்தது.

தீனி சாப்பிடாததால் தோட்டத்தில் இருந்த மாடுகள் பசியால் கத்திக் கொண்டிருந்தன. அவற்றின் அவலக் குரல் கேட்டும் இருவரும் இருந்த இடத்தை விட்டு அசையவில்லை.

நேரமாக ஆகப் பொறுமை இழந்த மனைவி, பக்கத்து தெருவிலிருந்த தன் தோழியின் வீட்டிற்குச் சென்றாள்.

நடந்ததை எல்லாம் தோழியிடம் சொன்ன அவள், “காலையிலிருந்து ஏதும் சமைக்கவில்லை. அவர் பட்டினியாகவே கிடந்து துடிக்கட்டும்” என்றாள்.

தன் மகனை அழைத்த அவள், “எங்கும் சென்றுவிடாதே. நான் பாயசம் செய்கிறேன். சுடச்சுட அதை எடுத்துச் சென்று இவள் கணவனிடம் கொடுத்துவிட்டு வா” என்றாள்.

பசியிலும் தன் பிடிவாதத்தைக் கைவிடாமல் கணவன் எதுவும் பேசாமல் அங்கேயே அமர்ந்திருந்தார். அந்த வழியே வந்த திருடன் ஒருவன் வீட்டில் ஏதும் ஓசை இல்லாததைக் கண்டான். யாரும் இல்லை திருடுவதற்கு ஏற்ற இடம் என்ற எண்ணத்தில் அந்த வீட்டிற்குள் நுழைந்தான்.

அங்கிருந்த விலையுயர்ந்த பொருட்களை எல்லாம் எடுத்து மூட்டை கட்டினான். மூடியிருந்த அறைக்குள் ஏதேனும் பொருள் இருக்கலாம் என்ற எண்ணத்தில் கதவைத் திறந்தான்.

உள்ளே இருந்த வீட்டுக்காரரைப் பார்த்து, “ஐயோ மாட்டிக் கொண்டோமே...”என்று திடுக்கிட்டான்.

பேசக்கூடாது என்ற பிடிவாதத்தில் உறுதியாக இருந்த கணவன், திருடனைக் கண்டும் ஏதும் கத்தவில்லை.

அவர் ஏதும் பேசாததையும் எழுந்திருக்காததையும் அறிந்த திருடன், பாரிச வாத நோயாளியைக் கண்டு வீணாகப் பயந்துவிட்டோமே என்று நினைத்தான்.

அங்கிருந்த விலையுயர்ந்த பொருட்களைச் சிறிதும் தயக்கமின்றி எடுத்தான். பெரியவர் தலையில் வைத்திருந்த தலைப்பாகையையும் எடுத்தான். அப்பொழுதும் அவர் குரல் கொடுக்கவில்லை. விரித்த தலைப்பாகைக்குள் எல்லாப் பொருட்

**பாப்பா முரசு சிறுகதை**

களையும் வைத்துக்கட்டி எடுத்துச் சென்றான்.

சிறிது நேரத்தில், கொதிக்கக் கொதிக்கப் பாயசத்துடன் பக்கத்துத் தெருச் சிறுவன் அங்கு வந்தான். வீட்டில் இருந்த பொருட்கள் இறைந்து கிடப்பதையும் அவர் ஏதும் பேசாமல் அமர்ந்திருப்பதையும் கண்டு திடுக்கிட்டான்.

நடந்ததை எல்லாம் சிறுவனுக்கு உணர்த்த வேண்டும், அதே சமயம் பேசவும் கூடாது. என்ன செய்வது? என்று சிந்தித்தார் அவர்.

இறைந்து கிடந்த பொருட்களை எல்லாம் சிறுவனுக்குச் சைகையால் காட்டினார் அவர். அவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

இவ்வளவு முட்டாளாக இருக்கும் இவனுக்கு எப்படி உணர்த்துவது என்று குழம்பிய அவர், தன் தலைப்பாகையும் திருட்டுப் போய்விட்டது என்று காட்டினால் புரிந்து கொள்வான் என்று நினைத்தார்.

தன் கைகளால் தலையை மூன்று முறை சுற்றிய அவர் வாயைத் திறக்காமலே ஏதோ முனகினார்.

“கொண்டு வந்த பாயசத்தை என் வாயில் ஊற்ற வேண்டாம். தலைக்கு மேலே மூன்று முறை சுற்றி விட்டு தலையில் ஊற்று” என்று அவர் சொல்வதாக நினைத்தான் சிறுவன்.

மீண்டும் அவர் கைகளால் தலையைச் சுற்றிக் காட்டவே வேறு வழியின்றிப் பாயசப் பாத்திரத்தை அவர் தலையில் கவிழ்த்தான்.

சூடு தாங்காமல் துடித்த அவர், அப்பொழுதும் வாயைத் திறக்கவில்லை.

பயந்து போன சிறுவன் நேராக வீட்டிற்கு ஓடி வந்தான். “ஐயோ! அவருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது. ஏதோ முனகுகிறார். என்ன பேசுகின்றார் என்று புரியவில்லை. பாயசத்தைக் கூட சாப்பிடாமல் தலையில் ஊற்றும்படி சைகை காட்டினார். வீட்டில் உள்ள பொருட்கள் எல்லாம் இறைந்து கிடக்கின்றன” என்றான்.

இதைக் கேட்ட மனைவி தன் கணவருக்கு என்னவோ ஏதோவென்று வீட்டிற்கு ஓடி வந்தாள்.


பொருட்கள் எல்லாம் இறைந்து கிடப்பதைப் பார்த்து, “என்ன நடந்தது?” என்று கேட்டாள்.

“அப்படி வா வழிக்கு. நீ தான் மாடுகளைப் பார்த்துக் கொள்ள வேண்டும். திருடன் என் கண் முன்னாலேயே வீட்டில் உள்ள பொருட்களை எல்லாம் எடுத்த போதும், என் தலைப்பாகையையே பறித்த போதும் நான் பேசவில்லை. கொதிக்க கொதிக்க பாயசத்தை என் தலையில் சிறுவன் ஊற்றிய போதும் நான் பேசவில்லை. எப்படி என் பிடிவாதம்? பந்தயத்தில் வெற்றி பெற்றுவிட்டேன் அல்லவா?” என்றார் அவர்.

“உம் பிடிவாதத்தில் இடிவிழ! வீடே நாசமாகி விட்டதே” என்று அலறினாள் மனைவி.

கணவன், மனைவி இருவருக்குள் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இருக்க வேண்டும். அது இல்லை என்றால் யாருக்கு நஷ்டம்?

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 01.03.2006

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 633**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
**கொழும்பு**

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 631

**பரிசுக்குரியவர்:**
**எம். ஷர்பீன்,**
**46, வைத்தியா வீதி, தெகிவளை.**

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| ர. டிவின்ஸ்டன், கிங்ஸ்டன் சர்வதேச பாடசாலை, கொழும்பு-15. | சாஜிதா நசார், பாத்திமா முஸ்லிம் கல்லூரி, கொழும்பு 12. |
| ரஞ்சன் நிரஞ்சனா, ரி.வி.கே. மில் வீதி, செங்கலடி. | லோ.மதுரன், மன்/புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை, மன்னார். |
| பி .அரவிந்தன், காளிகோவில் வீதி, புன்னச் சோலை, மட்டக்களப்பு. | கி. கிறிஷானி, சொய்சாபுர தொடர்மாடி, மொரட்டுவ. |
| யோகராசா சிவரஜினி, சரசாலை தெற்கு, சாவகச்சேரி. | எம். ஜெஸ்ரினா, மக்குளூற்று, வெள்ளைமணல். |
| எம்.ஏ.எஸ். கதீஜா, 53/1, பாடசாலை வீதி, கொடபிடிய, அகுறஸ்ஸ | ரா. திவ்யா, 175, லோவர் வீதி, பதுளை. |


# ஆத்திசூடி

## நுண்மை நுகரேல்

நீ சிற்றுண்டிகளை விருப்பம் காரணமாக உடலுக்கு நோயை உண்டாக்கக் கூடிய வகையில் கண்ட கண்ட நேரங்களில் உண்ணாதே.

எஸ் நிரஞ்சலா, கண்டி. -ஔவையார்

# தோலுரித்துத் தின்னும் பழம்




தோடம் பழம் தோடம் பழம்
தோலுரித்துத் தின்னும்பழம்
ஆடுகின்ற பந்துபோலே
அழகான தோடம்பழம்.

அண்ணனுக்கும் அக்காவுக்கும்
ஆளுக்கு இரண்டுபழம்
அம்மாவுக்கும் அப்பாவுக்கும்
அருமையான ஒவ்வோர்பழம்.

பச்சைமஞ்சள் ஆகிவிட்ட
பதமான தோடம்பழம்
இச்சையுடன் சுளைபுசித்தேன்
எண்ணிப்பத்தும் வாங்கிவிட்டேன்.

எங்கள்குஞ்சுக் கண்ணனுக்கு
ஏற்றஒன்றும் கொடுத்துவிட்டேன்
எனக்கிருந்த மூன்றுபழம்
எடுத்துவிட்டேன் பத்தும்சரி.

# அதிசய உலகம்



**இப்பர்** மீன்கள் ஆபிரிக்கா மற்றும் ஆசியா கடல்களில் வசிக்கின்றன. முழு வளர்ச்சி பெற்ற மீனின் நீளம் 25 செ.மீ. இருக்கும். இதன் உடல் முழுவதும் குட்டி குட்டி செதில்களால் நிறைந்திருக்கும். இதற்குத் தாடையில் நான்கு பற்கள் இருக்கும். இவைதான் இந்த மீன்களுக்கு பறவையின் அலகு போன்ற வடிவத்தைக் கொடுக்கிறது.

ஆபத்து நேரத்தில் இந்த மீன்கள் நிறைய தண்ணீரை குடித்து தங்கள் உடம்பை உப்ப வைத்துக் கொள்ளும். இவை கடலிலுள்ள குட்டி மீன்கள் மற்றும் சிறு உயிரினங்களை உண்டு உயிர் வாழும்.

இவற்றின் உள் உறுப்புகள் மற்றும் இரத்தத்தில் ஒரு விஷம் கலந்திருக்கும். இந்த விஷம் மனித இனத்தை கொன்றுவிடும் இயல்புடையது. ஆயினும் இவற்றை நீக்கிவிட்டு இந்த மீன்களைச் சமைத்தால் மிகவும் ருசியாக இருக்கும். இந்த மீன்களைச் சமைப்பதற்கு என்று தனி படிப்பு படிக்க வேண்டும். படித்துப் பட்டம் பெற்றவர் மாத்திரமே இந்த மீன்களைச் சமைக்க அனுமதி உண்டு. ஜப்பானில் இந்த மீன்களைச் சாப்பிடுவதற்கு ஏக கிராக்கி என்பதால் இதை சமைப்பவர்களுக்கும் ஏகப்பட்ட டிமான்ட் உண்டு.

# உங்கள் பொது அறிவு எப்படி?

## பலதும் பத்தும்

1. கோமதேசுவரர் சிலை எங்கே உள்ளது?
*மைசூரிலுள்ளது. 470 அடி உயரமுடைய மலைச்சிகர பாறையில் வெட்டப்பட்ட 60 அடி உயரமுள்ள சமண சமயக் கடவுளின் சிலை.*

2. அல்ம் தேவாலயம் எங்கு உள்ளது?
*ஜேர்மனியில் 532 அடி உயரமுடைய தேவாலயம்.*

3. டிமீஸ் மடாலயம் எங்குள்ளது?
*ரஷ்யாவிலுள்ள ஆலயம்.*

4. மீனாட்சியம்மன் கோவில் எங்குள்ளது?
*மதுரையில் உள்ளது. 847 அடி நீளம் 207 அடி அகலமானது. சிற்ப வேலைப்பாடுடைய மிகப் பெரிய கற்கோவில்.*

5. சீக்கியரின் மிகப் பெரிய கோவில் எங்குள்ளது?
*இந்தியாவில் அமிர்தசரஸில்.*

6. இராஜராஜ சோழன் கோயில் எங்குள்ளது?
*தஞ்சாவூரில் - இந்தியா.*

7. டயழனா ஆலயம் எங்குள்ளது?
*சின்னாசியாவில் எபசெஸ் என்னும் இடத்திலுள்ளது.*

8. சிடிசைத் மசூதி எங்குள்ளது?
*மதபாத்தில் பாறையில் துளையிட்ட அபூர்வச் சாராம்சமுடையது.*

9. ஈபேல் கோபுரம் எங்குள்ளது?
*பிரான்ஸில், பாரிஸில் காஸ்டாவ் ஈபெல்லால் கட்டப்பட்ட 85 அடி உயரமுடைய கோபுரம்.*

# தகவல் பெட்டி

## திருட்டு சி.டி.

**திருட்டு** சி.டி.கள் இந்தியாவில் தான் பிரபல்யம் என்று பார்த்தால் பிலிப்பைன்ஸிலும் அது பிரபல்யமாகத் தான் இருக்கிறது பாருங்கள். சட்டவிரோதமான, ஆபாச சி.டிக்களால் இளம் சமுதாயம் சீரழிந்து போவது உண்மை. அதனைக் கட்டுப்படுத்துவதற்காக, பிலிப்பைன்ஸின் கியூசன் நகரில் - ஆயிரக்கணக்கான திருட்டு சி.டிக்கள், வி.சி.டிக்கள் இராணுவ டாங்குகள் மூலம் நொறுக்கி அழிக்கப்படுகின்றன.



## பச்சை மேனியா?




**தாய்லாந்து** தலைநகர் பாங்கொக்கில் உடலில் பச்சைக்குத்தப் பயன்படும் வடிவங்கள் கண்காட்சி நடந்தது. இதில் பல நாடுகளின் பச்சை குத்தும் கலைஞர்கள் கலந்து கொண்டனர். சீனாவைச் சேர்ந்த ஒரு கலைஞர், தான் வடிவமைத்துள்ள படங்களைக் காட்சிக்கு வைப்பதுடன். தனது முதுகிலும் அவர் பச்சைக் குத்திக் கொண்டுள்ளார்.

## மீன் பிடிப்போமா?



**ஜப்பான்** தலைநகர் டோக்கியோவில் நடைபெறும் சர்வதேச மீன்பிடி விளையாட்டு கண்காட்சியில் அறிமுகமான காமோம் என்ற ரோபோ படகு இது. மணிக்கு 6.5 கி.மீ. சீறிப்பாய்ந்து மீன்பிடிக்கும் இந்தப் படகை ரிமோட் மூலம் இயக்க முடியும். இதன் விலை பெரிதாக இல்லை ஆக 28 லட்சம் தான்.





## பிறந்த நாள் பரிசு


**அவுஸ்திரேலியாவைச்** சேர்ந்த கவிஞர் மொசாரத்தின் 250ஆவது பிறந்தநாளையொட்டி வித்தியாசமான முறையில் வடிவமைக்கப்பட்டுள்ள சாக்லெட் இது. இந்த சாக்லெட்டில் 18 கோடி ரூபாய் மதிப்புள்ள 107 வைரங்கள் பதிக்கப்பட்டுள்ளன. ஜப்பானில் டோக்கியோவில் உள்ள ஓட்டலில் இந்த சாக்லெட் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

## பரிசு பெற்ற புகைப்படங்கள்

**நெதர்லாந்தில்** நடந்த சர்வதேச பத்திரிகை புகைப்படப் பிடிப்புபோட்டியில் சிறந்த படங்களாக தேர்ந்தெடுக்கப்பட்டவைதான் கீழேயுள்ள படங்கள். அவுஸ்திரேலியாவில் நடந்த குதிரைப் பந்தயத்தின்போது பார்வையாளர்களின் உற்சாக முழக்கம் (முதல் படம்). உடையை அணிந்து கொள்ள தந்தைக்கு உதவும் சிறுவன் (இரண்டாவது படம்). அன்புடன் அணைத்துக் கொள்ளும் சிறுவன், சிறுமி (கடைசிப் படம்) ஆகியவை குடும்ப ஒற்றுமையையும் அன்றாட வாழ்க்கை பிரதிபலிப்பையும் விளக்கும் சிறந்த படங்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.








ஜீவா - நயன்தாரா
ஈ

## இன்னொரு காதலில் ஐஸ்வர்யா ராய்?


**தனது** வனப்பாலும், புன்னகையாலும் உலகை கிறங்கடிக்கும் ஐஸ்வர்யா ராய் மீண்டும் ஒரு புதிய காதலில் தொபுக்கடீர் என்று விழுந்திருக்கிறார்.

தமிழ், இந்திப் படங்களைக் கடந்து ஹாலிவுட்டிலும் காலூன்றிவிட்ட ஐஸ்வர்யா, நம்புங்கள், 35 வயதை நெருங்கிக் கொண்டிருக்கிறார். உலக அழகி, இந்தியாவின் நடக்கும் தாஜ்மஹால் என நேசத்துடனும் பொறாமையுடனும் பார்க்கப்படும் ஐஸ்வர்யாவுக்கும் சாதாரண பெண்களைப் போலவே காதல், வாழ்க்கை என்று ஆயிரம் கனவுகள் உண்டு.

ஆரம்பத்தில் சல்மான்கானுடன் சேர்ந்து சுற்றினார் ஐஸ். அது ஒரு முரட்டுக் காதல். சல்மானின் முரட்டுத்தனத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் அவரை விட்டு விலகி, அவர் மீது ஏகப்பட்ட புகார்களையும் வீசினார் ஐஸ்வர்யா.

தண்ணி அடித்துவிட்டு வீட்டின் கதவை ராவில் வந்து தட்டினார், டெலிபோனில் மிரட்டினார் என்று இவர்களின் காதல் சண்டை பொலிஸ் வரை போனது. இந் நிலையில் சாக்லேட் பாய் மாதிரி ஐஸ்வர்யாவின் வாழ்வில் வந்து நுழைந்தார் விவேக் ஓபராய். சல்மான் தரப்பின் மிரட்டல்களை ஓபராய் சந்தித்தாலும் காதலில் தீவிரமாய் இருந்தார்.

ஐஸ்வர்யா போகும் இடமெல்லாம் - டெல்லியாகட்டும், மும்பை சூட்டிங் ஸ்பாட் ஆகட்டும், நியூசிலாந்த் ஆகட்டும் - எல்லா இடங்களுக்கும் அவருடன் கைகோர்த்தபடி, ஐஸ்வர்யாவின் லக்கேஜ்களை சுமந்தபடி சுற்றினார் ஓபராய்.



நரேன் - பாவனா
சித்திரம் பேசுதடி

பிரிக்க முடியாத இந்த ஜோடி விழாக்கள், பார்ட்டிகளில் சுற்றின. ஆனால், இடையில் விவேக் ஓபராயுடன் ஐஸுக்கு சண்டை வந்து இருவரும் சேர்ந்த வேகத்திலேயே பிரிந்துவிட்டனர். இதில் ஐஸ்வர்யாவை விட அதிகம் பாதிக்கப்பட்டது ஓபராய்தான்.

தனது இரண்டாம் காதலுக்கு வெற்றிகரமாய் மூடுவிழா நடத்திய ஐஸ்வர்யா, வழக்கம் போல் தனது பிழைப்பைப் பார்க்கப் போய்விட்டார்.

இந் நிலையில் அமிதாப்பச்சனின் மகனும் இந்தியில் வேகமாய் முன்னேறி வரும் இளம் கதாநாயகனுமான அபிஷேக்பச்சனுடன் ஐஸ்வர்யாவுக்கு காதல் உருவாகிவிட்டதாகப் பாலிவுட்டில் பேசிக் கொள்கிறார்கள்.

இருவரும் இணைந்து நடித்து வரும் ஒரு படத்தின் போது ஏற்பட்ட நெருக்கமே காதலாக மாறிவிட்டதாம். இந்தப் படத்துக்காக ஐஸ்வர்யா ராயும், அபிஷேக்கும் ஒரு மாதம் ஜெய்ப்பூரில் தங்கியிருந்தார்களாம் அப்போது காதல் பத்திக்கிச்சாம்.

இவர்களின் காதலுக்கு அபிஷேக்பச்சனின் தாயார் ஜெயாபச்சன் ஆசி வழங்கி விட்டதாகவும், அமிதாப்தான் யோசிப்பதாகவும் கூறுகிறார்கள். எது எப்படியோ அபிஷேக், ஐஸ்ஸை மனதாரக் காதலிக்கிறாராம்.

அபிஷேக்கும், ஐஸும் அடுத்து மணிரத்தினம் இயக்கும் 'குரு' என்ற இந்திப் படத்தில் காதலர்களாகவே நடிக்கவுள்ளனர். அந்தப் படம் இவர்களது காதலுக்கு மேலும் கொஞ்சம் ஜல்லி - காங்கிரீட்டைப் போட்டு இறுக்கும் என்கிறார்கள்.



கமல்ஹாசன் - ஜோதிகா
வேட்டையாடு விளையாடு

## 'கலைமாமணி' சூர்யா - ஸ்னேகா

**நடிகர்கள்** விக்ரம், சூர்யா, வடிவேலு, நடிகைகள் ஜோதிகா, ஸ்னேகா உள்ளிட்ட 120 பேருக்கு தமிழக அரசின் கலைமாமணி விருது அறிவிக்கப்பட்டுள்ளது.


இயல், இசை, நாடகம் ஆகிய மூன்று துறைகளில் சிறந்து விளங்கும் கலைஞர்களுக்கு ஆண்டு தோறும் தமிழக அரசு கலைமாமணி விருது வழங்கி கெளரவிக்கிறது.

இந்த வகையில், 2004, 2005ஆம் ஆண்டுகளுக்குரிய கலைமாமணி விருதுகளை தமிழக அரசு அறிவித்துள்ளது. அதன்படி நடிகர்கள் விக்ரம், சூர்யா, வடிவேலு, நடிகைகள் ஜோதிகா, பி.வாசு மற்றும் தென்கச்சி சுவாமிநாதன் உள்ளிட்ட செய்யப்பட்டுள்ளனர்.
முதல்வர் ஜெயலலிதா விருதுகளை வழங்கி தெரிவிக்கப்பட்டுள்ளது.
திரைத்துறையினரை மேலும் குளிர்விக்கும் விதமாக

ஸ்னேகா, இயக்குனர்
120 பேர் விருது பெறத் தேர்வு
வரும் 25ஆம் திகதி சென்னையில் நடைபெறும் விழாவின்போது கலைஞர்களைக் கெளரவிக்கிறார் என்று தமிழக அரசின் செய்திக் குறிப்பில்

சில நாட்களுக்கு முன்பு தமிழக அரசின் திரைத்துறை விருதுகள் அறிவிக்கப்பட்டன. தற்போது கலைமாமணி விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இரண்டு வருடமாக இல்லாமல் திடீரென இவை அறிவிக்கப்பட்டுள்ளன. எல்லாம் தேர்தல் படுத்தும் பாடுதான்.




மயா
யுகா

## ஹொலிவுட்டில் கமல்!

**அன்னை** தெரசாவின் வாழ்க்கை வரலாறு திரைப்படமாகிறது. ரூ.2,700 கோடி பட்ஜெட்டில் உருவாகவுள்ள இந்தப் படத்தை ஹொலிவுட் நிறுவனம் தயாரிக்கவுள்ளது. இதில் ஹொலிவுட் நடிகை பாரிஸ் ஹில்டன், கமல்ஹாசன், மோகன்லால், மிதுன்சக்ரவர்த்தி உள்ளிட்டோர் நடிக்கிறார்கள்.

செக்கோஸ்லாவேகியாவைச் சேர்ந்தவர் அன்னை தெரசா. அங்கிருந்து இந்தியாவுக்கு வந்து, கொல்கத்தாவில் தங்கி தனது இறுதி நாள் வரை ஏழை, எளிய மக்களுக்கு சேவை செய்து வந்தார். அமைதிக்கான நோபல் பரிசும் அவருக்கு வழங்கப்பட்டது. இந்தியாவின் உயரிய விருதான 'பாரத்ரத்னா'வும் அளிக்கப்பட்டது.

அந்தப் புனித அன்னையின் வாழ்க்கை வரலாறு இப்போது திரைப்படமாகிறது. மலையாள இயக்குநர் ராஜீவ்நாத் இப்படத்தை இயக்கவுள்ளார். அமெரிக்காவில் உள்ள திரைப்பட நிறுவனம் ஒன்று இப் படத்தைத் தயாரிக்கிறது.

இதற்கான பட்ஜெட் ரூ.2,700 கோடியாம். ராஜீவ்நாத் மலையாளத்தில் விருது பெற்ற படங்கள் பலவற்றை தயாரித்தவர். மோட்சம், ஜனனி ஆகியவை அதில் குறிப்பிடத்தக்கவை.

அன்னை தெரசா படம் குறித்து ராஜீவ்நாத் கூறுகையில், 'தெரசா' வேடத்தில் யாரை நடிக்க வைப்பது என்று தீவிரமாக ஆலோசனை செய்தோம். இறுதியில் ஹொலிவுட் நடிகை பாரிஸ் ஹில்டனை முடிவு செய்துள்ளோம்.

அவரிடம் இதுகுறித்துப் பேசி வருகிறோம். அவர் ஒப்புக்கொள்வார் என நம்புகிறேன்.

பாரிஸ் ஹில்டன் தவிர கமல்ஹாசன், மோகன்லால், மிதுன்சக்ரவர்த்தி ஆகியோரும் இப்படத்தில் நடிக்கிறார்கள்.

சிதார் மேதை ரவிசங்கர் படத்திற்கு இசையமைக்கவுள்ளார். ஹொலிவுட்டைச் சேர்ந்த ஜான் பால் என்பவர் கதை, வசனத்தை கவனிக்கவுள்ளார். சந்தோஷ் சிவன் கேமராவைக் கையாளுவார். போப் ஆண்டவரின் ஆசியுடன் படப்பிடிப்பை தொடங்கவுள்ளோம்" என்றார் ராஜீவ் நாத்.






பாவனா
சித்திரம் பேசுதடி



## ரிப்போர்ட்டர் நயன்தாரா!

**சுப்ரீம்** ஸ்டார் சரத்குமாருடன் 'ஐயா'வில் அறிமுகமான நயன்தாரா, இப்போது சரத்தின் 100ஆவது படமான 'தலைமகனில்' மீண்டும் ஜோடி சேர்ந்துள்ளார்.

முதல் படத்தில் போர்த்திக் கொண்டு நடித்த நயன்தாரா, இப்போது குளிர்விட்டுப் போன நிலையில் துணிந்து போய் நடித்து வருகிறார். இதனால் முதல் படத்தில் மிஸ் பண்ணிவிட்டதை இந்தப் படத்தில் வட்டியும், முதலுமாக சேர்த்து வசூல் செய்துவிடும் முடிவில் இருக்கிறார் போலும் சரத்குமார்.

சரத்தின் தேவையை உணர்ந்து தலைமகனில் எக்ஸ்ட்ரீம் கவர்ச்சியில் 'காப்றா' பண்ணி வருகிறார் நயன்தாரா.

முதல் படத்திலேயே படுவேகமாக 'பிக்கப்' ஆகிப் போன நயன்தாரா, இப்போது கையில் திகதி இல்லாமல் காலில் சக்கரத்தைக் கட்டிக் கொண்டு தமிழ், தெலுங்கில் படு பிஸியாக ஓட்டமாய் ஓடிக் கொண்டிருக்கிறார்.



நயன்தாரா - எஸ்.சூர்யா
கள்வனின் காதலி

தலைமகனில் அவருக்கு நிருபர் வேடமாம். இந்த வேடத்தில் ஒன்றிப்போய் நடிக்க வேண்டும் என்பதற்காக சில பெண் நிருபர்களை வரவழைத்து அவர்களிடம் எப்படியெல்லாம் வேலை செய்வீர்கள், எப்படி பேட்டி எடுக்க வேண்டும், என்ன மாதிரியான கேள்விகள் எல்லாம் கேட்க வேண்டும் என்று பத்திரிகைத்துறை நுணுக்கங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டாராம்.

இப்படி கேட்டுத் தெரிந்து கொண்டதன் விளைவாக அவருக்கு இப்போது 'ஜர்னலிசம்' மீது காதலே பிறந்து விட்டதாம். 'அடடா, என்ன அருமையான துறை இது' என்று வியந்து பேசும் நயன்தாரா, இதில் பெண் நிருபர்கள் சந்திக்கும் சிக்கல்களையும் புரிந்துகொண்டு 'அடப் பாவமே இவ்வளவு சிரமப்பட்டா இவர்கள் வேலை செய்கிறார்கள்' என்று பரிதாபப்படவும் செய்தாராம்.

அப்படியே தபால் மூலம் ஜர்னலிசம் படிக்கவும் முடிவு செய்துவிட்டாராம். நிச்சயமாக ஒரு நாள் நானும் பத்திரிகையாளர் ஆகி, கட்டுரை எல்லாம் எழுதப் போகிறேன் என்று பயம் காட்டுகிறார் நயன்ஸ் சேச்சி.

சீக்கிரமே, அழகான மூக்கு கண்ணாடியைப் போட்டுக் கொண்டு, கையில் நோட்டு, பேனாவுடன் அழகிய நிருபராக நயன்தாரா எங்காவது தென்படலாம்.


தலைமகன் படத்தைத் தயாரிப்பது சரத்குமாரின் வீட்டுக்காரம்மாவான ராதிகாவின் ராடன் மீடியா ஒர்க்ஸ் தான். படத்தை பாலாஜி என்பவர் இயக்குகிறார். இதில் பத்திரிகையின் ஆசிரியர் தீரன் என்ற கேரக்டரில் நடிக்கிறார் சரத்குமார். பத்திரிகையின் பெயர் எவரெஸ்ட்டாம். அவரிடம் நிருபராக வேலை பாக்கிறாராம் நயன்தாரா.

'கமர்கட்டு வாங்கி தந்தா....காக்க கடி கடிச்சி தந்தா' என்ற பாடலுக்கு சரத்குமாருடன் நயன்தாரா போட்டுள்ள 'ஜல' ஆட்டம், படம் பார்ப்பவர்களுக்கே ஜலதோஷம் பிடிக்க வைக்குமாம். அந்த அளவுக்கு 'சிக்' உடையில் 'கிக்' காட்டியிருக்கிறாராம் நயன்தாரா.

தமிழில் இந்தப் படம் தவிர, நாகர்ஜுனாவுடன் ஒரு தெலுங்குப் படத்தில் புக் ஆகி இருக்கிறார் நயன்தாரா. அங்கு இப்போது நயன்தாரா வாங்கும் சம்பளம் என்ன தெரியுமோ...ரூ.40 லட்சம். அவருக்கு ரூ.60 வரை கொட்டித் தரவும் தயாராக இருக்கிறார்களாம்.

தமிழிலும் இவரது சம்பளம் ரூ.30தைத் தொட்டுவிட்டதாம்.




## விவாகரத்தை நோக்கி அரவிந்த்சாமி

**நடிகர்** அரவிந்த்சாமியின் மனைவி காயத்ரி விவாகரத்துக் கோரி சென்னை குடும்ப நல நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்.

'தளபதி' படத்தில் ரஜினியின் தம்பி வேடத்தில் நடித்து, தமிழ் சினிமாவில் அறிமுகமானவர் அரவிந்த்சாமி. மணிரத்தினத்தின் அறிமுகமான அரவிந்த்சாமி, 'பம்பாய்' படத்தில் உச்சத்தை அடைந்தார்.

பிசியான நடிகராக இருந்து வந்த அரவிந்த்சாமி, திடீரென நடிப்பைக் கைவிட்டு விட்டு தனது பிசினஸில் தீவிர கவனம் செலுத்தத் தொடங்கினார். ஒரு முன்னணி கன்சல்டன்சி நிறுவனத்தின் விற்பனை அதிகாரியாக, உலகம் சுற்றி வருகிறார் அரவிந்த்சாமி.


இவரது மனைவி காயத்ரி. இவர்களுக்கு இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர்.

கடந்த 2 ஆண்டுகளுக்கு முன் இருவருக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து அரவிந்த்சாமி - காயத்ரி பிரிந்தனர். குழந்தைகள் இருவரும் தந்தையுடன் வசித்து வருகின்றனர்.

இந்நிலையில் விவாகரத்துக் கோரி காயத்ரி, சென்னை குடும்ப நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். தனது 2 குழந்தைகளைப் பார்ப்பதற்கு அனுமதி தர வேண்டும் என்றும் அவர் தனது மனுவில் கோரியுள்ளார்.

மனுவைப் பரிசீலித்த நீதிபதி ஜெயபால், வருகிற 21ஆம் திகதிக்குள் பதில் அளிக்குமாறு அரவிந்த்சாமிக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டார்.

'மெட்டி ஒலி' சீரியல் புகழ் பெரியவர் டெல்லி குமாரின் மகன் தான் அரவிந்த்சாமி என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால், அவரை தனது தம்பிக்கு குமார் சிறு வயதிலேயே தத்துக் கொடுத்துவிட்டார். இதனால் தந்தையுடன் அரவிந்த்சாமி பேச்சுவார்த்தையே வைத்துக் கொண்டதில்லை.




## பேயடி வாங்கிய 'ஆதி'!

**தொடர்ந்து** அதிரடியாக வெற்றி பெற்று வந்த விஜய்க்கு 'ஆதி' படம் வசூல் ரீதியாகவும் இமேஜ் ரீதியாகவும் பேரிடியாக அமைந்துவிட்டது.

இதனால் சில முக்கிய முடிவுகளை எடுத்துள்ளாராம் இளைய தளபதி.

காதல் இளவரசனாக சில காலம் நடித்து வந்த விஜய், திருமலை படத்தின் மூலம் அதிரடி நாயகனாக மாறினார். திருமலையில் அவர் செய்த ஆக்ஷன் ரோல் பேசப்பட்டதாலும், நல்ல வசூலைக் கொடுத்ததாலும் தொடர்ந்து ஆக்ஷன் படங்களுக்குத் தாவினார்.

அப்படியே ரஜினியைக் காப்பியடிப்பதில் ஆரம்பித்து, தெலுங்கில் வெற்றி பெறும் ஆக்ஷன் படங்களை (கில்லி அவரது திரையுலக வாழ்க்கையில் மிகப் பெரிய மைல் கல்லாக அமைந்தது) உல்டா செய்வது வரை ஒரே பார்முலாவை கெட்டியாகப் பிடித்துக் கொண்டு காலத்தை ஓட்டினார்.

இது குறித்து விமர்சனங்கள் எழுந்தாலும் அதைக் கண்டுகொள்ளாமல், வசூலே முக்கியம் என்று தனது பாதையில் போய்க்கொண்டே இருந்தார்.



அவரது முடிவு சரிதான் என்பது போல தொடர்ந்து விஜய் நடித்த திருப்பாச்சி, சிவகாசி, மதுர போன்ற ஆக்ஷன் படங்கள் நல்ல வசூலைக் கொடுக்கவே, ஓவர் குஷியான விஜய், கதையைப் பற்றிக் கவலைப்படாமல் த்ரிஷா இருந்தா போதும் என்று சுவிஸ் பக்கமாகப் போய் 4 டான்ஸ் ஆடுவது, நூறு கார்களைக் கொண்ட சேஸ் வைப்பது, அப்படியே அவற்றில் 5 வண்டிகளை குண்டு வைத்து வானில் பல்டியடிக்க வைத்து உடைப்பது, அப்படியே போற போக்கில் எதிரியை நோக்கி சவால் வசனம் பேசுவது என்று வண்டியோட்டினார்.

கதைக்கா விஜய் என்பது போய் விஜய்க்கா கதை என்ற டிரெண்ட் வலையில் விஜய்யும் சிக்கினார். விஜய்க்கான இயக்குநர்கள் என்றும் சிலர் அடையாளம் காணப்பட்டார்கள்.

இப்படிப் போய்க் கொண்டிருந்த விஜய்க்கு பிரேக் போடுவது போல 'ஆதி' வந்து சேர்ந்தது. பெரும் எதிர்பார்ப்புடன் விஜய் நடித்த ஆதி, வசூல் ரீதியாகப் படுமோசம் செய்து விட்டதாம். பாதிக் காசு கூட இன்னும் திரும்பி வரவில்லையாம்.

அத்தோடு, 'தொடர்ந்து ஒரே மாதிரி நடிக்கிறார்ப்பா' என்று அவரது இரசிகர்களே அங்கலாய்க்கும் அளவுக்கு விஜய்யின் படங்கள் போரடிக்க ஆரம்பித்துவிட்டன.

கூட்டிக் கழித்துப் பார்க்கையில், அஜித்தின் 'பரமசிவனை' விட 'ஆதி' பட வசூல் மோசமாக உள்ளது.

'ஆதி' எப்படித்தான் தோற்றான் என்பதை விஜய்யும், சந்திரசேகராவும் உட்கார்ந்து யோசித்துப் பார்த்தபோது, வேக வேகமாகப் படத்தை எடுத்தது, கதையை சரியான முறையில் கையாளாதது, ஒரே மாதிரியான கேரக்டர் ஆகிய வீக்னஸ்கள் தெரிய வந்தனவாம்.

இதைத் தொடர்ந்து இப்போதைக்கு ரீமேக் படங்களில் நடிப்பதில்லை என்ற ஒரு மிக நல்ல முடிவுக்கு விஜய் வந்துள்ளார். மேலும், தொடர்ந்து ஆக்ஷன் படங்களிலேயே நடிக்காமல் வித்தியாசமான கதையம்சம் கொண்ட படங்களில் நடிக்கவும் முடிவு செய்துள்ளாராம். இதனால் விஜய்யும், 'ஆதி' படத் தயாரிப்பாளர் பிளஸ் விஜய்யின் தந்தையுமான எஸ்.ஏ.சந்திரசேகரரும் சோகமடைந்துள்ளனர்.

இந்நிலையில் கன்னடத்தில் வெளியாகி வெற்றி பெற்ற ஒரு படத்தின் உரிமையை எஸ்.ஏ.சந்திரசேகரா வாங்கி வைத்துள்ளார். இப்போதைக்கு அதில் நான் நடிக்க மாட்டேன் என்று தந்தையிடம் கண்டிப்பாகக் கூறி விட்டாராம் விஜய்.

இதையடுத்து அந்தக் கதையை விக்ரமை வைத்துத் தயாரிக்கப் போகிறார் சந்திரசேகரா. காலம் தாழ்ந்த முடிவுதான். இருந்தாலும் இப்போதாவது யோசித்தாரே...

அப்படியே த்ரிஷாவையும் கொஞ்ச காலத்துக்கு தூரமா வச்சுட்டு வேற ஹீரோயினைப் போடுற முடிவையும் விஜய் எடுத்தால் அவருக்கு இன்னும் நல்லது.






## மறைந்து போன சாதனை!

ஈரைந்து மாதங்கள்...
எனைச் சுமந்து!
சுத்தப்படுத்தி...!
சுகமாக வைத்து விட்டு...!
சும்மா இருக்கின்றாயே..!
இவ்வையகத்தில்.

ஆகாய விண்மீன்களின்
நகைப்பும்...!
காலைப்பனியில் மலரும் -
மலர்களின்
மணமும்..!

வேசமில்லாப் பாசமும் -
கொண்டவளே..!
ஜனனித்த நாள் முதல்..
மரணிக்கும் நாள் வரை...
என் - கண்ணீர் துடைக்க...
பார்த்திருப்பவளே...!

அவன் அறியாமல்
அவன் செய்யும்
சாதனை கின்னஸ் வரையும்!
நீ - தெரிந்து செய்யும்
சாதனையை...!
கின்னஸ் போதாதன்னையே!
போதாதன்னையே!!

*-ஜே.அகிலா பர்வின், நுரைப்பிட்டிமுனை - 01.*

## காத்திருப்பு..!

காதலி காதலனின்
வருகைக்காய்
காத்திருந்து
கண் சிவப்பதுண்டு.

காலவினாடிகளின்
நகர்வுக் கொடுமை
சகிக்க முடியாமல்
முகம் சுளிப்பதுண்டு.

தினமும் தரிசிக்கும்
காதலனின் உருவம்
தென்படாமல்
கடிகார முட்களை
வெறித்துப் பார்ப்பதுண்டு.

காத்திருப்பு
மேவும் பொழுது
கை நகங்கள் கொறித்து
அலற்சியாய்
துப்புவதுண்டு.

கரைந்து போகும்
நேரவினாடிகளில்
மனமுருகி
உடல் முழுது
இறுகிப் படிவதுண்டு.

அந்தக் காதலி
போலதான்
நானும்..
தினமும் பயணிக்கும்
'பஸ்வண்டி' பாதகிக்காய்
காத்திருந்து
நேரவினாடிகள் விரைந்து
செல்லும்...

என்னை சீண்டி
நகரும் கடிகார
முட்களை
நானும் வெறித்துப்
பார்ப்பதுண்டு.

*-அநுராதபுரம் ரஸீம்தலுல்லாஸ்.*

## பெண்ணாகப் பிறந்துவிட்டேன்



பெண்ணாகப் பிறந்தது - ஏன்
இந்த பூமியிலே
ஏழ்மையிலே பிறந்தேன் - என்
மீது ஏக்கம் கொண்ட ஒருவன்
தந்தையிடம் கேட்டான்
சம்பந்தம்....
இதயமுள்ளவன் - என
எண்ணினேன்.
உங்கள் பெண்ணையும்
வரதட்சணையாக மூன்று இலட்சமும்
முப்பது பவுண் நகையும் தாங்களென..
சிரித்து கொண்டே சொன்னான்.
எனது தலையிலே வானமே..
இடிந்து விழுந்தது போல இருந்தது.
இதை கேட்ட...
என்னால் கண்ணீர் சிந்த முடியுமே..
தவிர...
கானம் பாடி கல்யாண வாழ்க்கையில்
இணைய முடியாது.
உறவுகள் என்னை கண்டு
தங்கள் வறுமையைக் - கூற
சகோதரர்கள் என்னைக் கண்டு
கையை உதற...
பெற்றோர் என்னைப் பார்த்து
என்ன பாவம் செய்தோம் - என
சொல்ல...
வீட்டு மூலையிலே...
பழைய துணியை போல
நான் ஒதுங்கி கண்ணீர் சிந்திக்
கொண்டிருக்கிறேன் - நாளை
ஒரு இறப்பு வராதா என...

*-பி.சசி, நானாட்டான்.*

## இதய நாவல்

மோகனமான
என்னவனை நினைந்தொரு
நாவலை எழுதினேன்
என் இதயத்தில்.
என் இதய நாவலை
திறந்து படிக்க இன்னுமேன்
வரவில்லை
அவன்?

*-ஜெ.சுபாஷினி, நல்லூர்.*

## முழுமை பெறுவன ஓர் சிலவே

அரும்பாக இருப்பதெல்லாம்
மொட்டாக மலர்கின்றதா -
அன்றி
மொட்டாக
இருப்பதெல்லாம்
பூவாகப் புலர்கின்றதா -
இல்லை
பூவாக இருப்பதெல்லாம் -
நறு
மணம் வீசி நுகர்கின்றதா -
அதுபோல்
பிஞ்சான எல்லாமே
காய்க்கின்றதா
அதிர்கனியாகவே எல்லாம்
சுவைக்கின்றதா?

*-ஜெ.சுபாஷினி, நல்லூர்.*

## சமாதானத்திற்காய்....

எண்ணெயும்
தண்ணீரும்
செங்குருதியும்
சதையுமாய்
சேர்ந்திட வேண்டும்

சுதந்திரமாய்
வாழ்வதற்கு
அவரவருக்கு
தேவையான
உரிமை
மாத்திரையை
வழங்க வேண்டும்

பழிவாங்குவதை
கைவிட வேண்டும்

சமாதானம்
பிறப்பதற்காய்
சில விடயங்களை
விட்டுக் கொடுக்க
வேண்டும்.

யுத்தத்தை
விட்டு...விட்டு
அகிம்சையை
வளர்த்திடுவோம்
அதை காந்தியின்
அகிம்சை
அண்ணார்ந்து
பார்க்க வேண்டும்
முள்ளை பஞ்சால்
எடுக்கும்
பண்பாம் மன்னிப்பு
இதை யாவரும்
யாவருக்கும் வழங்கி
யாவரும்
கைகோர்த்து
இனவாதத்தை
அழிப்போம்
சமாதானத்திற்காய்
இணைவோம்.

*-அ.கா.முரிஸ்வின், மூதூர் - 01.*

## கிளிஞ்சல்

ஆரம்பத்தில்
கேட்ட கேள்வியையே
கல்யாணத்தின் பின்பும்
கேட்கிறாய் நீ!
"ஏங்க இப்படி
இருக்கீங்க..."

## இத்யாதி... இத்யாதி...

'எமக்கு
விடுதலை வேணும்
அதற்காக...'

## தீக்குள் விரலை வைத்தாள்

இலேசாய் விலகினாலே
நாணப்பட்டுக்
கூச்சமுற்றவள்,
முந்தானையே
இன்று -
பாயாய்...
பாழாய்...

## கோபம்

கொஞ்சுண்டாவது
சிரியேன்..
மாலை இரவாகட்டும்!

## வெயில்

வெளியே
நீ வராதே
வேர்க்கிறது எனக்கு!

## வெருளி

என்னைப் பார்த்துக்
குரைக்கிறது
உன் வீட்டுப் பிராணி
இன்றாவது
கழற்றிவிடேன்,
உன் தோட்டத்திலுள்ள
திருஷ்டி
பொம்மையை...

## கோகிலம்

நீ என்னை
ஏசினதாய்
என் நண்பன்
சொல்கிறான்
ஏசினாயா நீ...

## முகில்

அவிழ்த்துப் போட்டு
விடாதே
உன் கூந்தலை
என் வீடு
ஓலைவீடு!!

## புன்னகை

அயல்வீட்டுக்காரன்
தனக்குத்தானே
குழி வெட்டுகிறான்
கவிதையால்....
சிரித்தாயோ நீ...

## நவரத்தினம்

கடைத்தெருவுக்கு
வந்தியோ
நீ இன்று;
'முந்நூறு கூட்டு...'
-முதலாளி

*-எஸ்.ஏ.எம்.நிலாம், மன்னார்.*

## பிரிவின் துயரம்

### காதலின் வேதனை

காதல் என்ற பெயரில் முதல்
கடிதம் தந்த பெண்ணே
கடைசியாக நான் உனக்கு
எழுதும் கவிதை - இது
என்றாவது ஓர் நாள்
என் உண்மைக் காதலை
நீ புரிந்து கொள்வாய்
அன்று சக்கையாய் - நீ
எறிந்த என் காதலுக்காக
நிச்சயம் கண்ணீர் விடுவாய்...

*-தே.சுரேஸ், கிளிவெட்டி.*

நான் என் வீட்டை
விட்டுப் பிரிந்து வரும்

ஒவ்வொரு வெளிநாட்டுப்
பயணத்தின் போதும்

என் சிறு பிள்ளையின்
ஒரே ஒரு சொட்டுக்
கண்ணீர்

என் இதயத்தையே
(சுக்குநூறாக)
உடைத்துவிடுகிறது!

பிறகு -

வெறும் உடல்மட்டும்
விமானமேறி
விண்ணில் பறந்தென்ன -
மண்ணில் புகுந்தென்ன -

இரண்டிலுமே நான்
சுமப்பது
அந்த என்
சிறுபிள்ளையின்
ஒரு சொட்டுக்
கண்ணீரைத் தானே?!

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் – கவிஞரும்

உலக வலம் வரும் இணையங்களை எம்நாட்டு மற்றும் புலம் பெயர்ந்து வாழும் எம்மவர்கள் தமது உள்ளத்திலிருக்கும் உள்ளக் கிடக்கைகளை வெளிப்படுத்துவதற்கான ஊடகமாகப் பயன்படுத்துகிறார்கள் அந்த வகையில் இங்குள்ளவையும் தமது தாயக உறவுகளையும் தாங்கள் பட்ட துன்பங்களையும் மறக்கமுடியாமல் பல இளம் கவிஞர்கள் தங்கள் பங்கிற்கு வடித்த கவிதைகளின் சில துளிகள் இவ்வாரம் சிறப்புக் கவிதைகளுக்காக:

முரசின் கவிதை பயிற்சிக்களம் பகுதியில் புதிய கவிஞர்களின் வெளியீடுகளை அறிமுகப்படுத்த முரசு களம் அமைத்துக் கொடுக்கின்றது. தமது கவிதை வெளியீடுகளை அல்லது வெளியிடப்பட விருப்பவற்றை வெளிக் கொண்டுவர விரும்புவோர் முரசுடன் தொடர்பு கொள்ளலாம்.

## அருவி

சப்தமே இல்லாமல்
இரகசியமாய்ப் பின்னால் வந்து
திடீரென்று கத்துகிற சிறுபிள்ளை போல்
சந்தடியில்லாமல் குறுகிச் சென்று விட்டு
சட்டென்று பெரும் இரைச்சலுடன் இறங்கி
ஆர்ப்பாட்டமாய் விரிகிறது அருவி...

மதங்கொண்ட இளங் களிற்றின்
கம்பீரப் பிளிறலுடன் -
கட்டுக் கடங்காமல் திமிறும் கன்றுக்குட்டியின்
உற்சாகத் துள்ளலுடன் -
சிவபெருமானின் சிரசினின்றும் வீழ்ந்த
கங்கா தேவியின் கருவத்துடன் -
திருத்த முனைகின்ற
இள ரத்தத்தின் வேகத்துடன் -
பல நாட்கள் பிரிந்திருந்த பிள்ளையை
அணைத்துக் கொள்ள ஓடிவரும்
அன்னையின் ஆவலுடன் -

கண்மண் தெரியாமல் அவசரமாய் வந்து
தலை குப்புற விழுந்தாலும்
இளைப்பாறத் தாமதிக்காமல்
வெண்பற்கள் எல்லாம் விலாவரியாய்த் தெரிய
அட்டகாசமாய்ச் சிரித்தபடி...

*-கவிநயா.*

## தியானம் கலைத்தல்

பார்வையின் உள்வாங்கலும்
நடையும் மட்டுமே
சாத்தியப்படும்
நடையே
தியானமாய் அமைகையில்
மனதின்
சலனமற்ற நிலை
சகஜமாய் நிகழ்கையில்
அந்தப் பேரானந்தம்
கலைந்திடும் வகையில்
ஒன்று
குழந்தையின் முதுகில்
தொப்பென அறைந்து
தரதரவென இழுத்துச் செல்லும்
தாயோ
அல்லது
சாலையின் ஓரம் கிடந்த
செங்கல் துண்டினை
நச் சென அடித்து
நற நற வென அங்கேயே
பொடி செய்து
பல்தேய்க்கும் பெரியவரோ
எதிர்ப்பட்டு விடுகின்றனர்.

*-மதுமிதா.*

## ஒரு ஊசித்தும்பியின் கேவல்

நரகல் கிளறும் இவ்வதிகாலை
கிளப்பாட்டும் கிழவன் கதையும் பயின்றபடியாக
மயிலிறகு குட்டிபோட்ட மாயத்தை
தோழியிடம் கூடிக்கூடி குசுகுசுத்து
தோப்புக் கரணம் வாங்கியபடியாக
கிடந்திருப்பேன்
முன்பள்ளி வெளியில் சம்மாரமிட்டபடி

ஏன் மணல்வீட்டை சரித்து
நிர்வாணமாய் நின்றபடி மூத்திரம் பெய்து
யாதேனுமொரு நிழலசைவில் கீரிடும்
என் அல்லசல் குட்டிநட்டிகள்
பள்ளிக்கமர்த்தப்பட்ட சூரிய உதயத்தில்தான்
நானும் வலுக்கட்டாயமாக
வீட்டு வேலைக்கமர்த்தப்படலானேன்.

என்னை ஆடு மாடுகள் மாதிரி
ஒரு அடிமையாக வித்துத்தொலைத்து
பட்டாம்பூச்சி பிடித்துவிளையாடும்
என் ஆசைகளை சொதப்பி
கனவுகளையும் செமித்தாயே!
அம்மா நீ மகா கொடுரீதான்.

இந்தப் பளிங்கு மாளிகையின்
நாய்க்கும் பூனைக்குமான செல்லத்தில்
சொற்பமும் எனக்கு வாய்க்காமலாயிற்று
இருந்தும் இந்தப் பிராணிகளோடுதான்
என் ஆறுதல்களும் முறைப்பாடுமாகும்.

எஜமானின் ஆக்கிரமிப்பிலிருந்து தப்பி
வாழ்தலின் அழகை இரசிக்கும்படியான
என் சூரியன் அதோ அழுகிறது
தூக்கணம் குருவின் சிறகுப்பிலிருந்தும்
சிலந்தியின் காலிடுக்கிலிருந்துமாக.

மிக அதிகாலை மங்கலான வெளி
புழுப்பூச்சிகளற்ற தெரு

இரவின் அடைமழை கூதலின்
கொடுகிக்கிடந்தது
எனதின் நாயும் பூனையும்
சற்று தொலைவில் ஆயுதம் தரித்தபடியாக
நுகர்ந்தனர் சிலர் அடையாளம்
காணமுடியாதபடி.

வயற்காடுகளின் ஈரம் உலராத
பிசுபிசுப்புகளோடு
சேறு நெடி அடிக்கும்படியாக
மிலாந்தினாள் சிறுமி
திராய் கத்தைகளோடு
மிகுதியாயும் ஒட்டிக்கிழங்கும்
வைத்திருந்தாள்.

அம்மாவை பறிகொடுத்து தவிக்கும்
தனித்த பறவையின் கேவலாக
சோகம் மிகுந்த பாடலாக கவிந்தது
அந்தப் பிஞ்சின் இரங்கல்
இன்னும் எல்லாவிதமுமான பிரக்ஞைகளும்
இழையோடிக்கிடந்தது அவள் முகத்தில்

ஒரு கலர் பெட்டிக்காக
அல்லது மிகவும் அவசியமென்றாகிய
ஏதேனும் ஒன்றுக்கான
இந்த திராய் கத்தைகளை
அவள் ஏந்தி வந்திருக்கக்கூடும்
அப்பாவின் பாடுகளை தணிக்கும்படியாக

இருந்தும் எனதின் உணர்வெல்லாம்
யாரேனும் ஒரு காட்டுமிராண்டி
தனித்த ஒரு சூழலில்
இந்தப் பட்டாம் பூச்சியின் சிறகிப்பை
நிர்மூலமாக்கிவிடலாமென்பது பற்றியே
தான்.

*-றதுமான் ஏ.ஜெமில், இலங்கை.*

## முதலாவது இராணுவத் தாங்கி

உலக வரலாற்றில் போரியல் தேவைக்கென முதன் முதலில் இராணுவத் தாங்கி வடிவமைக்கப்பட்டது 1915ஆம் ஆண்டில் ஆகும். பிரிட்டிஷ் அரசாங்கத்தின் வேண்டுகோளை அடுத்து பிரித்தானிய லின்கோன் நகரில் அமைந்துள்ள வில்லியம் போஸ்டர் எனும் கம்பனியின் உருக்கு ஆலையில் அமைக்கப்பட்ட தாங்கி 'லிட்டில் வில்லி' என பெயரிடப்பட்டது. இது 1915 செப்டெம்பர் 6 இல் வெள்ளோட்டம் விடப்பட்டது.



## அதிவேக இராணுவத் தாங்கி

தற்போது பாவனையில் உள்ள இராணுவத் தாங்கிகளில் அதிவேகமாகச் செல்லக்கூடியது. 5.2000 எனப் பெயரிடப்பட்ட பிரிட்டிஷ் இராணுவத்திற்குரிய தாங்கியாகும். சறே நகரில் உள்ள சேர்ட்சே ஆலையில் கட்டப்பட்ட மேற்படி தாங்கி, டீசலினால் இயக்கப்படுவதுடன் மணிக்கு 82 கிலோமீற்றர் (51 மைல்) வேகத்தில் செல்லக்கூடியதாகும். வளை குடா போரில் பாலைவனப் போக்குவரத்திற்கு பல தேசியப்படைகளினால் இது உபயோகப்படுத்தப்பட்டது.


## அதி பாரமான இராணுவத் தாங்கி

தற்போது பாவனையில் உள்ள இராணுவத் தாங்கிகளில் அதிபாரமான இராணுவத் தாங்கி ஜெர்மன் இராணுவத்திடமே உள்ளது. மாவூஸ் II என பெயரிடப்பட்ட மேற்படி தாங்கி ஜெர்மன் பன்சர் பிரதேசத்திலுள்ள இராணுவக் கட்டுமான ஆலையில் உருவாக்கப்பட்டதாகும். 192 தொன் நிறையுடைய இந்த தாங்கி கடின இரும்பு உருக்கினால் தயாரிக்கப் பட்டுள்ளதுடன் அணுகுண்டுத் தாக்குதலுக்கும் தாக்குப் பிடிக்கும் எனக் கூறப்படுகின்றது.

# சுத்தமான குடிநீரே ஆரோக்கிய வாழ்வைத் தரும்!

**நம்** உடலின் மொத்த எடையில் 60 சதவீதம் அளவிற்கு இருப்பது தண்ணீர்தான். உடலின் இயக்கத்திற்கு மிகவும் அத்தியாவசியமானதும் கூட.

பொதுவாக ஆரோக்கியமான ஒரு நபர் உணவு இல்லாமல் குறைந்தது 6 முதல்



8 வாரங்கள் வரை கூட உயிர் வாழ முடியும். தண்ணீரில் எவ்வித கலோரியோ அல்லது சத்துணவோ கிடையாது என்ற போதிலும் தண்ணீரின்றி யாராலும் உயிர் வாழ முடியாது. 5 முதல் 10 சதவீதம் வரை உடலில் இருந்து தண்ணீர் இழப்பு ஏற்பட்டால் அது மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தும். அதே நேரத்தில் 15 முதல் 20 சதவீதம் வரை தண்ணீர் இழப்பு ஏற்படும் பட்சத்தில் அது ஏறக்குறைய மரணத்தில் சென்று முடியலாம்.

மனித உடலில் ஜீரணம், வியர்வை வெளியேற்றம், உடலுக்குள் சத்துணவை எடுத்துச் செல்லல், திரவ மற்றும் திடக் கழிவுகளை வெளியேற்றுதல், உடலின் வெப்ப நிலையை சீராக வைத்திருத்தல் போன்ற பல்வேறு இரசாயன மாற்றங்கள் நிகழ்வதற்கு தண்ணீர் அவசியமாகிறது.

உடலில் உள்ள திசுக்களுக்கு ஒரு பாதுகாப்புப் போர்வை அல்லது மெத்தை போன்று தண்ணீர் செயலாற்றுகிறது. உடலின் அனைத்து திசுக்களுக்கும், இரத்தத்தின் அடிப்படைக்கும், மூட்டு இணைப்புகளில் உள்ள திரவம், கண்ணீர், கோழை வடிதல் போன்றவற்றுக்கும் தண்ணீரே காரணமாகத் திகழ்கிறது. உடல் உறுப்புகள் முறைப்படி செயல்படுவதற்கு உராய்வு எண்ணெய் போன்று தண்ணீர் செயலாற்றுகிறது.

நம்முடைய தோலினை மென்மையாகவும், மிருதுவாகவும் வைத்துக் கொள்வதற்கும் உடலில் உள்ள தண்ணீரே பங்காற்றுகிறது. வயது முதிர்வடையும் போது தோலில் ஏற்படும் சுருக்கங்களுக்கும் உடலில் உள்ள தண்ணீரின் அளவு குறைவதே காரணம். ஆகவேதான் பிறக்கும் குழந்தைகளின் உடல்களில் சுமார் 75 முதல் 80 சதவீதம் அளவிற்கு தண்ணீர் இருப்பதால் அவர்களின் தோல் மென்மையானதாகக் காணப்படுகிறது. அதுவே 65-70 வயதான முதியோருக்கு உடலில் தண்ணீர் 50 சதவீதமாகக் குறைவதால் சுருக்கங்கள் காணப்படுகிறது. தண்ணீர் குறைவின் காரணமாகவே எலும்பு இணைப்புகளில் பாதிப்பு ஏற்படுவதும் முதுமையில் நிகழ்கிறது.

மனித உடலுக்கு அன்றாடம் சராசரியாக 6 முதல் 8 டம்ளர் வரையிலான தண்ணீர் தேவையாகிறது. ஒவ்வொரு நாளும் உடலின் தண்ணீர் தேவை மாறுபடுகிறது. காபி, டீ, பழச்சாறுகள், பழங்கள், காய்கறிகள், முட்டை, மாமிசம், உணவு வகைகள், மீன், பிரட் போன்றவற்றிலிருந்தும் தண்ணீர் எடுத்துக் கொள்ளப்படுகிறது. வெப்பமான சூழ்நிலையில், கோடை காலத்தில் நமது உடலுக்கு அதிக அளவு தண்ணீர் தேவைப்படுகிறது.

# உணவே மருந்து

**சைவ** உணவில் உடலில் ஏற்படும் நோய்களுக்குத் தேவையான எதிர்ப்பு சக்தி மற்றும் நோய்களுக்கான சிகிச்சை இயல்பாகவே இருப்பது தெரிய வந்துள்ளது. இதன் காரணமாக வெஜிடேரியன் உணவு முறைக்கு உலக அளவில் நல்ல வரவேற்பு ஏற்பட்டு வருகிறது.

அசைவ உணவுகளைக் குறைத்துக் கொண்டு தாவரவகை உணவுகளை அதிக அளவில் எடுத்துக் கொள்ளுதல் நலம் என்று அமெரிக்க புற்றுநோய் ஆராய்ச்சிக் கழகம், தேசிய உணவு ஆய்வுக் கழகம் போன்ற சுகாதார அமைப்புகள் நடத்திய ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.

சைவ உணவு முறையே ஒரு சில நோய்களுக்குச் சிறந்த சிகிச்சையாகும் என்றும், உடலுக்கு தேவையான பலன்களை அளிக்கக்கூடிய சத்துக்கள் வெஜிடேரியன் உணவுகளில் இருக்கின்றன என்றும் அவை கூறுகின்றன.

எந்தவொரு அசைவ உணவுகளையும் சாப்பிடாதவர்கள் பலர். இறைச்சியை மட்டும் தவிர்ப்பவர்கள் சிலர் என்று 'செவன்த் டே அன்வென்டிஸ்ட்' நடத்திய ஆய்வு தெரிவித்துள்ளது. மேலும் சைவ உணவுமுறையைக் கொண்டிருக்கும் 90 சதவீதத்திற்கும் மேற்பட்டோர் ஆரோக்கியமான உடல்நிலையைக் கொண்டுள்ளனர். அதாவது அசைவத்தை முற்றிலும் தவிர்த்தோர் ஆரோக்கியமானவர்கள் என்று



தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாவரவகை உணவுகளை எடுத்துக் கொள்வோர் உடல் குண்டாவதில் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்கிறார்கள்.

உடல் குண்டாக இருப்பதால் பல்வேறு வகை நோய்கள் தாக்கும் அபாயம் உள்ளது. உயர் ரத்த அழுத்தம், இதயம் தொடர்பான நோய்கள், சர்க்கரை வியாதி, சில வகை கேன்சர் போன்றவை ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் உடல் பருமனாக இருப்பவர்களுக்கு அதிகம். சில நேரங்களில் நார்ச்சத்து அதிகம் கொண்ட உணவை எடுத்துக் கொள்வதாலோ அல்லது காய்கறிகளை அதிகம் உண்பதாலோ உடல் எடை தேவையான அளவைக் காட்டிலும் குறைவாக இருக்கும் வாய்ப்பும் உண்டு. கொழுப்புச் சத்து குறைவாக எடுத்துக் கொள்வதாலும் உடல் எடை குறைந்து காணப்படலாம். அதற்கேற்ப உடல் எடையை சீரான அளவில் வைக்கத் தேவையான ஆகாரங்களை எடுத்துக் கொள்ளுதல் அவசியமாகிறது.

சைவ உணவு சாப்பிடுபவர்களைக் காட்டிலும், சைவ உணவை அதிகம் எடுத்துக் கொள்பவர்களுக்கே இருதய நோய் ஏற்படும் வாய்ப்புகள் அதிகம் என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

# வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

கேள்வி இல்லை! பதில் இல்லை!
பொருட் கொள்வனவு அவசியமில்லை!
வயது, பால் வேறுபாடின்றி வாசகர் பங்கு பெறலாம்!

## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

11

பெயர் : ........................................

முகவரி : ........................................
........................................
........................................

தே-அ- அட்டை இல : ........................................

கையொப்பம் : ........................................

உண்மை - நேர்மை - வெளிப்படைத்தன்மை

- ஒவ்வொரு வாரமும் அதிர்ஷ்டசாலி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவார்.
- மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).
- ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களை அனுப்பலாம்.

அனுப்பி வைக்க வேண்டிய முகவரி

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**
**முரசு பரிசுப் போட்டி - 11**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல - 1772**
**கொழும்பு.**

கூப்பனை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:

28.02.2006

பரிசுப் போட்டி இல - 09
பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி

**திருமதி. கலாவதி குமாரசாமி**
**27/125, பரக்கும்பா பிளேஸ், கொழும்பு 06**

அதிர்ஷ்டசாலி உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.




## உடைகளைத் தேர்வு செய்வது எப்படி?

**பேஷன்** என்பது பொதுவாக நாளுக்கு நாள் மாறிக்கொண்டேயிருக்கக் கூடியது. அதிலும் பெண்களுக்கான பேஷன் உடைகள் என்றால் சொல்லவே தேவையில்லை. ஆண்களை விடவும் பெண்களே அழகு சாதனங்கள் மற்றும் உடைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிறார்கள்.

ஆள் பாதி ஆடை பாதி என்ற நிலை போய், தற்போதைய நவீனயுகத்தில் ஆளெல்லாம் சும்மா... அவர்கள் அணியும் ஆடைகளே அவர்களை மதிப்பீடு செய்யும் நிலை உள்ளது.

காலமாற்றத்திற்கேற்ப விதவிதமான ஆடைகளும், புதுப்புது பேஷன்களுடன் வந்து கொண்டிருக்கின்றன. எல்லாத் தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய - கூடியவரை உடல் பகுதிகளை வெளிப்படுத்தாத, அதே நேரத்தில் கவர்ச்சியின் அளவு எல்லை மீறிவிடாத டிசைன் கொண்ட ஆடைகளைப் பெண்கள் அணிந்தால் நலம். அப்போதுதான் அந்த ஆடைகளுக்கும், அவற்றை அணிபவர்களுக்கும் உரிய கௌரவம் கிடைக்கும்.

ஜன்னல் வைத்த ஜாக்கெட், ஸ்லீவ்லெஸ் டாப்ஸ், முழங்காலுக்கு மேல் வரை வெளிப்படுத்தும் ஸ்கேர்ட், ஜீன்ஸ், டீ-சேர்ட், இரு பீஸ், சிங்கிள் பீஸ் என நடிகைகள் அணிந்து வரும் ஆடைகளுக்கு நாகரீகமாக பெயர் வைத்துக் கொண்டாலும், அதுபோன்ற உடைகளை சினிமாவைத் தவிர பொது இடங்களில் பெண்கள் அணிந்தால் அநாகரீகமே.

அந்த அளவிற்கு இன்றைய சினிமாக்களில் ஆடை கலாசாரம் ரொம்பவே மாறிவிட்டது. இது போன்ற ஆடைகளைத் தவிர்த்து நமது கலாசாரத்தை ஓரளவிற்கு பாதுகாக்கும் வகையிலான உடைகளை நாம் அணியலாம்.

பெண்கள் தங்களின் உடைகளைத் தேர்வு செய்யும் முன் தங்களின் உடல்வாகு, வயது, நிறம் போன்றவற்றை மனதில் கொள்ள வேண்டும். கல்லூரி செல்பவரா? டீன் - ஏஜ் வயதினரா? அலுவலகம் செல்லும் நடுத்தர வயது கொண்டவரா? அல்லது எந்த நிகழ்ச்சிக்காக ஆடைகள் வாங்குகிறோம் என்பன போன்றவற்றையும் கருத்தில் கொண்டு வாங்கலாம். சூழ்நிலைகளுக்கேற்றவாறு உடை



உடுத்துதல் கூடுதல் அழகைத் தரும். அழகுபடுத்துகிறோம் என்று கூறிக்கொண்டு ஆபாசமான உடை உடுத்துவதைத் தவிர்க்க வேண்டும்.

### உடைகள் குறித்த சில டிப்ஸ்

வீட்டில் நிகழும் பல நிகழ்ச்சிகள், உறவினர் வீட்டுத் திருமணங்கள், கோயில் திருவிழாக்கள் என்றால் பட்டுச்சேலை தான் பேவரைட் சொய்ஸ் ஆக வைத்துக் கொள்ளுங்கள்.

பட்டுச் சேலை இல்லாவிட்டாலும் சாதாரண ஷிபான், விலை உயர்ந்த கொட்டன் சேலைகள் அல்லது மைசூர் சில்க் போன்ற அவரவர்க்குப் பிடித்த ரக கிராண்ட் ஆக இருக்கும் சேலைகளை அணிந்தால் ஜொலிப்பாக இருக்கும்.

சேலை கட்ட விருப்பமில்லாதவர்கள் அல்லது சேலை கட்டத்தெரியாதவர்கள் எனில் இதுபோன்ற நிகழ்ச்சிகளுக்குப் பட்டினால் ஆன சுடிதார் அல்லது சல்வார் கமீஸை அணியலாம்.

அதிக அளவில் ஒளிர்வு இல்லாத, டிசைன் அதிகம் இல்லாத அதே நேரத்தில் தேவையான பளபளப்புடன் அவர்களின் நிறங்களுக்கேற்ற கலரைத் தேர்வு செய்து அணியலாம்.



திருமணங்களுக்கு என தனியாக பட்டுச் சேலைகளை உபயோகிக்கலாம்.

டிசைன்களுடன் கூடிய சேலைகள், கைத்தறி சேலைகள், எம்ப்ராய்டிங் போட்ட சேலைகள், பிரிண்டட் சேலைகள் என்று எண்ணற்ற சேலை ரகங்கள் உள்ளன.

தவிர ஜார்ஜெட், கேஷுவல் சேலைகள், விழாக்களுக்கான பிரத்தியேக சேலைகள், தனி பருத்தியினால் ஆன சேலைகள், சிந்தடிக் சேலைகள், சாட்டின், குளிர்காலத்திற்கான சேலைகள் என்று தனித்தனியாக சேலை ரகங்கள் சந்தையில் கிடைக்கின்றன.

இவற்றில் பெண்கள் எந்தவகை சேலையை அணிய முடியுமோ அவற்றை தட்பவெப்பநிலைக்கேற்ப தங்களின் தோற்றம் மற்றும் வயதைக் கருத்தில் கொண்டு உடுத்தலாம். பொதுவாக சேலைகளுக்கு என்று தனி பாரம்பரியமே உண்டு. அதிலும் தமிழ்நாட்டில் சேலைகளுக்கான மகத்துவம் அதிகம் எனலாம்.

கல்லூரி செல்பவர்களுக்கான மிகச் சிறந்த சொய்ஸ் சுடிதார், சல்வார் கமீஸ் தான்.

கல்லூரியில் ஏதாவது நிகழ்ச்சி என்றால் சேலை அணிந்து செல்லலாம்.

கல்லூரி பேராசிரியையாகப் பணிபுரியும் பெண்கள் என்றால் அநேகமாக சேலையே உகந்தது.

ஜீன்ஸ், டீ-சேர்ட் போன்றவற்றை ஏதாவது பார்ட்டிகளுக்கு அவ்வப்போது ஓரிரு முறை அணிவதில் தவறில்லை. அதுவும் மற்றவர்களை சங்கடத்தில் ஆழ்த்தாத வகையில் பார்த்துக் கொள்ளுங்கள்.

நீங்கள் அணியும் ஆடைகள் தான் உங்களின் பண்பினையும், பாரம்பரியத்தையும் வெளிப்படுத்தும் என்பதை எப்போதும் மனதில் கொள்ளுங்கள்.

# சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது –ஷோபா–

## இனிப்புத் தோசை

**தேவையான பொருட்கள்**

| | |
|---|---|
| கோதுமை மா | - 2 கப் |
| அரிசி மா | - 1 கப் |
| துருவிய தேங்காய் | - 1/2 கப் |
| வெல்லம் (நசுக்கியது) | - 1 கப் |
| உப்பு | - 1 சிட்டிகை |

**செய்முறை**

இவை அனைத்தையும் நீர் விட்டு சிறிது கெட்டியாக கரைத்துக் கொண்டு தோசை வார்க்கும் கல்லில் எண்ணெய் ஊற்றி தேய்த்து, 1 கரண்டி மாவை ஊற்றி மொத்தமாக தேய்த்து எண்ணெய் ஊற்றி சிறிது நேரம் திருப்பிப் போட்டு வெந்தவுடன் எடுத்துப் பரிமாறவும்.

# ஒரு தாயின் மகள் 68

லாரா அன்றைக்கும் குடித்துத்தான் இருந்திருக்கிறாள்! அன்றைக்கும் நாலு பேர் இறந்து போயிருக்க வேண்டும். மூன்று பேர் தப்பினார்கள்..."

அவளும் க்ளோவும் வாய்விட்டு அழுவதைக் கண்டு தாரென்ஸன் டி.வி.யை நிறுத்தினான். சற்றுப் பொறுத்து வேறொரு சேனலைத் திருப்பியபோது அங்கும் இதே செய்தி. ஆனால் இப்போது செய்தி மேலும் பயங்கரமாக இருந்தது. பலியானது நான்கு உயிர் அல்ல. ஐந்து.

குடும்பத் தலைவன் - முப்பத்திரண்டு வயது; குடும்பத்தலைவி - இருபத்தெட்டு வயது; ஐந்து வயதுப் பையன்; இரண்டு வயதுப் பெண். அத்துடனில்லை. இறந்து போன குடும்பத் தலைவி எட்டு மாதக் கருவை வயிற்றில் சுமந்திருந்தாள். லாராவின் மகளுக்கு ஒரு கையில் முறிவு; கன்னத்தில் பதினைந்து தையல் போட்டிருந்தார்கள். லேசான வலிப்பு வேறே...

"இந்தத் தடவை செனெட்டரால் தன் மனைவியைக் காப்பாற்ற முடியாது" என்றான் தாரென்ஸன். "ஐந்து உயிர்கள் பலி!"

"ஆறு" என்றாள் பேஜ். இறந்து போன

சொன்னார். குடிப் பழக்கத்தைப் போக்கிக் கொள்வதற்காக இதுவரை லாரா நாலு ஆஸ்பத்திரியில் தங்கிச் சிகிச்சை பெற்றிருக்கிறாளாம் - வெவ்வேறு பொய்ப் பெயர்களில். ஆனால் பலன் ஏற்பட வில்லை. அவளுக்கு நாற்பது வருட சிறைத் தண்டனை கிடைப்பது நிச்சயம் என்றார் அந்த நபர்.

அந்த வாரக் கடைசிக்குள் லாராவைப் பற்றியும் விபத்தைப் பற்றியும் பரபரப்பு உச்சக் கட்டத்தை எட்டியது. பிலிப்பின் பெற்றோர், ஜேமியின் பெற்றோர், பேஜ், பிராட், தாரென்ஸன் - எல்லோரையும் நிருபர்கள் துரத்தினார்கள். ஒரு டெலிவிஷன் நிலையத்தின் பெண் நிருபர் பேஜிடம் மன்றாடினாள். "குடி போதையில் கார் ஓட்டுவது எவ்வளவு கொடுமையானது என்பதைப் பொது மக்கள் தெரிந்து கொள்ள வேண்டாமா? அதற்காகவேனும் கோமாவில் கிடக்கும் உங்கள் பெண்ணின் படத்தை டி.வி.யில் காட்ட வேண்டும்" என்றாள் அவள்.

பேஜ் திட்டவட்டமாக மறுத்து விட்டாள்.

"அப்படியானால் நீங்கள் மட்டுமாவது பேட்டி கொடுங்கள்" என்று அந்தப் பெண்

**சென்ற வாரம்**
ஆயினும் பேஜுக்கு எந்த வித அசைவும் தெரியவில்லை. அதனைப் பிராடுக்கு பேஜ் சொன்ன போது அதனைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை அவன். பேஜ் ஓவியம், களிமண் பொம்மைகள் செய்வதில் கொஞ்சம் உழைத்துக் கொண்டிருந்தாள். இதற்கிடையில் லாரா இன்னொரு விபத்தில் 4 பேர்களைக் கொன்றுவிடுகிறாள்...

ஆலிஸனின் நிலைமையில் மாறுதலைக் காணோம். வெறும் முனகல் கூட இப்போதெல்லாம் வருவதில்லை.

கோமாவிலிருந்து அவள் எப்படியாவது விடுபட்டு விழித்துக் கொண்டால் போதும் என்று பேஜ் தவியாய்த் தவித்தாள். உயிருடன் பிழைத்து விட்டால், பிறகு அவளு



பிலிப்பை எண்ணி. 'ஆலிஸனுக்கு ஏதாவது நேர்ந்தால் ஏழு' என்று நினைத்துக் கொண்ட போது அவள் உடம்பு நடுங்கியது.

பொழுது விடிந்து, ஆஸ்பத்திரிக்குப் போவதற்காக அவர்கள் புறப்பட்ட போது, வாசலில் பத்திரிகை, டெலிவிஷன் நிருபர்கள் ஒரு பட்டாளமாக நின்றிருந்தார்கள். நடந்த விபத்தைப் பற்றிக் கருத்துச் சொல்லும்படி தாரென்ஸனைச் சூழ்ந்து கொண்டார்கள்.

"ரொம்ப அதிர்ச்சியான விபத்து" என்று சுருக்கமாகச் சொன்னான் தாரென்ஸன். க்ளோவைச் சக்கர நாற்காலியில் உட்காந்திருப்பது போல அல்லது ஊன்று கட்டையில் சாய்ந்து கொண்டிருப்பது போலப் புகைப்படம் எடுக்க வேண்டுமென்று அவர்கள் கேட்டார்கள். அதற்கு அனுமதி தரவில்லை தாரென்ஸன். பேஜுடன் காரில் புறப்பட்டு விட்டான்.

ஆஸ்பத்திரியை அடைந்தபோதுதான் பேஜுக்கு ஞாபகம் வந்தது. க்ளோவைப் படம் எடுக்க விரும்பியவர்கள் ஆலிஸனை மட்டும் விடுவார்களா? அந்த எண்ணம் ஏற்பட்டதும் புயல் வேகமாக ஆலிஸனின் அறையை அடைந்தாள். அங்கே இன்னும் எந்த நிருபரும் வரவில்லை. நர்ஸ்கள் ஜன்னல் கதவுகளைச் சாத்திக் கொண்டிருந்தார்கள். யாரையும் வர அனுமதிக்க வேண்டாமென்று பேஜ் சொன்னதை ஆஸ்பத்திரி நிர்வாகிகளும் ஒப்புக் கொண்டார்கள்.

லாராவைப் பற்றிச் செய்தி சேகரிக்கும்படி தாரென்ஸன் சொல்லியிருந்த நண்பரும் பல தகவல்கள் திரட்டி வந்து

நிருபர் விடாப்பிடியாக வற்புறுத்தினாள். பேஜ் அதற்குச் சம்மதித்து, மூன்று மாதங்களுக்கு முன்பு நடந்த விபத்து, ஆலிஸனுக்கு நேர்ந்த காயம், இப்போது அவளுடைய நிலைமை ஆகியவை குறித்துச் சுருக்கமாகச் சொன்னாள்.

"அந்த விபத்தினால் உங்கள் வாழ்க்கை வேறு எந்த வகையிலாவது பாதிக்கப் பட்டிருக்கிறதா? வேறு ஏதேனும் சிக்கல் ஏற்பட்டுள்ளதா?" என்று கேட்டாள் அந்தப் பெண்.

**எழுதியது: டேனியல் ஸ்டீல்**
**தமிழில்: ரா.கி. ரங்கராஜன்**

தானும் பிராடும் பிரிந்திருப்பதை யார் மூலமோ இவள் அறிந்திருக்கிறாள் என்பது பேஜுக்குப் புரிந்தது. அதற்குப் பதிலளிக்காமல் மழுப்பிவிட்டு, "எங்கள் எல்லோருக்குமே இது சோதனையான காலம். சுதாரித்துக் கொண்டு வருகிறோம். இது போன்ற சோக முடிவுகளுக்கு ஜவாப் தாரியானவர்களைச் சட்டம் கடுமையாகத் தண்டிக்கும் என்று நம்புகிறேன்" என்று கூறிப் பேட்டியை முடித்துக் கொண்டாள்.

'என்ன பேட்டி கொடுத்து என்ன? ஆலிஸனிடம் என்ன மாற்றம் ஏற்படப் போகிறது? ஒன்றுமில்லை' என்று நினைக் கையில் அவள் உள்ளம் கனத்தது.

டாக்டர் கொடுத்திருந்த மூன்று மாதக் கெடு முடிந்து, நாலாவது மாதம் ஆரம்பமாயிற்று.

டைய மன வளர்ச்சியோ, மூளை வளர்ச்சியோ எப்படி இருந்தாலும் பரவாயில்லை. நடமாட வைப்பதற்கும், ஆலிஸன் ஆலிஸனாக இருப்பதற்கும் எத்தனை நீண்ட காலம் பிடித்தாலும் பரவாயில்லை என்று நினைத்தாள். ஆனால் அந்த நம்பிக்கை ஒருநாளும் ஈடேறப் போவதில்லை என்ற எண்ணம் இப்போது ஏற்படத் தொடங்கி விட்டது.

அன்று அவள் ஆஸ்பத்திரியின் வரவேற்பறையில் வரைந்து வந்த சுவரோவியத்தை ஓரளவு முடித்துவிட்டு அப்போதுதான் ஆலிஸனிடம் திரும்பியிருந்தாள். அந்த ஓவியம் ஒரு துறைமுகக் காட்சி. சின்னச் சின்னதாய்ப் பல விவரங்களை அதில் பூர்த்தி செய்ய வேண்டியிருந்தது. சிறு குறிப்பு நோட்டில் பென்சிலால் அவ்வப்போது வரைந்த வண்ணம் ஆலிஸனின் படுக்கைக்கருகே உட்கார்ந்திருந்தாள். சாந்தம் தவழ்ந்த பிற்பகல் வேளை. சூரியனின் சாயங்காலக் கிரணங்கள் மென்மையாய் ஜன்னல் வழியே அறைக்குள் நுழைந்து கொண்டிருந்த நேரத்தில் -

படுக்கையில் ஆலிஸனின் கை கொஞ்சம் நகர்கிற மாதிரி தோன்றியது.


அப்படி நடுநடுவே அசைவது உண்டு தான். அதற்கு எந்த அர்த்தமும் கிடையாது என்று பேஜுக்குத் தெரியும். மூளையில் ஏதோவொரு மின்னலை பாயும்போது அது போன்ற அசைவு ஏற்படுகிறது என்று அவள் அறிவாள்.

(தாய் தொடர்வாள்.....)

## பறவைக் காய்ச்சல்

**இந்தியாவின்** சில பகுதிகளில் பறவைக் காய்ச்சல் பரவியுள்ளது உண்மைதான் என்றாலும், அவைகளை கட்டுப்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுவிட்டன. எனவே, அச்சப்படுவதற்கு ஏதுமில்லை என்று இந்திய மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

தலைநகர் டெல்லியில் நேற்று இரவு செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர்



அன்புமணி, பறவைக் காய்ச்சல் பரவி வருகிறது என்று எந்தவிதமான அடிப்படையற்ற செய்தியையும் ஊடகங்கள் பரப்பிவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

மகாராஷ்டிரத்தின் நந்தூர்பார் மாவட்டத்தில் பறவைக் காய்ச்சலுக்கு பறவைக் காய்ச்சல் பரவியுள்ளதாக கண்டறியப்பட்டுள்ள கோழிப் பண்ணைகளில் இருந்து வரும் 3 முதல் 5 லட்சம் கோழிகள் அழிக்கப்பட்டு வருகின்றன என்றும், நாட்டின் மற்ற பகுதிகளில் இயங்கிவரும் பண்ணைகளில் அந்த அறிகுறி ஏதுமில்லை என்றும், அது ஏற்பட்டுவிடாமல் தடுக்க உரிய மருந்து பொருட்கள் அனுப்பப்பட்டுவிட்டதாகவும் ராமதாஸ் கூறினார்.


நந்தூர்பார் மாவட்டத்திலும், இந்த காய்ச்சலுக்குக் காரணமான ஹெச்5 என்1 நுண்ணுயிரி பாதித்த 3 கோழிகள் மட்டும்தான் கண்டறியப்பட்டுள்ளன என்றும், வேறெங்கிலும் இந்த பாதிப்பு இல்லை என்றும் அன்புமணி ராமதாஸ் கூறினார்.

பறவைக் காய்ச்சல் பரவாமல் தடுக்கும் நடவடிக்கையாக அழிக்கப்படும் கோழிகளுக்கு நட்டஈடு ரூ.1,000 கோடியானாலும் அதனை அளிக்க அரசு தயாராகவே உள்ளது என்றும், இழப்பீடு அளிப்பதற்காக ஏற்கனவெ ரூ.100 கோடி நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டுள்ளதையும் அன்புமணி



ராமதாஸ் சுட்டிக்காட்டினார்.

இந்த நிலையில் இலங்கையிலும் இக் காய்ச்சல் பரவக்கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதாகச் சில வட்டாரங்கள் கூறி வருகின்றன. இந்நோய் இலங்கையில்





ஒருவர் பலியாகிவிட்டதாக வந்த செய்தி முற்றிலும் தவறு என்றும், அவருடைய மரணத்திற்கு பறவைக் காய்ச்சல் காரணமல்ல என்று மருத்துவச் சோதனையில் தெரியவந்துள்ளதாகவும் அன்புமணி கூறினார்.


மகாராஷ்டிரத்திலும், குஜாரத்திலும் பரவும் பட்சத்தில் இதற்கான தடுப்பு நடவடிக்கைகளை எவ்வளவு தூரம் இலங்கை அரசு எடுக்க வேண்டும் என்று இலங்கையின் சுகாதார அமைச்சர் தலைமையிலான குழுவொன்று ஆராய்ந்துவருவதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.



வெளிநாட்டு மக்களுக்கு கலை ரசனை கொஞ்சம் ஓவராகிக் கொண்டுதான் இருக்கிறது. இங்கு நீங்கள் பார்ப்பது ஒரு ஆண்களின் மலசலக் கூடத்தில் உட்புறத்தைத் தான். அதிலும் எவ்வளவு கலைத்துவமாக ஓவியங்களை வரைத்துள்ளார்கள் பார்த்தீர்களா?

# சுவிற்சர்லாந்தின் சமஷ்டி முறைமை





பல்வேறு கோட்டங்களினதும் குடித்தொகையியல் சார் நிலைமை பெருமளவில் வேறுபடுகின்றது. சுவிஸ் சனத்தொகையில் ஏறத்தாழ 17 சதவீத ஸ்யூரிக் கோட்டத்தில் வாழ்கின்றார்கள். அபென்ஸல் என்ற கோட்டத்தில் 0.02சதவீதத்தினர் மட்டுமே வாழ்கிறார்கள். எனினும், கீழே ஆராயப்பட்டிருப்பதற்கிணங்க, சில வழிகளில் இப் பல்வேறு அலகுகளும் சமமாக நடத்தப்படுகின்றன.

### சுவிஸ் சமஷ்டியின் வடிவமைப்பு

சுவிஸ் சமஷ்டி முறைமை, சமஷ்டி இணைப்பு வரலாற்றினதும் பாரம்பரியத்தினதும் சாயல்களை இன்னமும் கொண்டுள்ளது. எனவே, கோட்டங்களின் இறைமை, அரசியல் யாப்பினால் வரையறுக்கப்படாத வரையில் கோட்டங்கள் இறைமையுடையவை என்று 1999ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் உறுப்புரை 3 குறிப்பிடுகின்றது. நாட்டுக் கூட்டிணைப்பு (இது சமஷ்டி அமைப்பைக் குறிக்கின்றது), கோட்டங்களின் சுதந்திரத்திற்கு மதிப்பளிக்கின்றது. சுவிற்சர்லாந்தில், சமஷ்டியின் செயற்பாட்டில், கோட்டங்களின் தன்னாட்சி ஒரு அடிப்படை அம்சமாகும்.

சமஷ்டியில் இடம்பெறும் 26 அலகுகளுக்கும், பகிர்ந்து செயற்படும் நிறுவனங்களும் (ஒரு சட்டவாக்கச் சபையும் ஒரு நிறைவேற்றுச் சபையும்) ஜனநாயக நிறுவனங்களும் சுவிஸ் சமஷ்டியில் உண்டு. சுய ஆட்சிக்கும் பகிரப்பட்ட ஆட்சிக்குமிடையேயுள்ள இச்சமநிலை தான், நாட்டின் உறுதிப்பாட்டிற்கு அடிப்படையாக அமைகின்றதென்று தோன்றுகிறது.

### தகுதிகளின் பங்கீடு

சமஷ்டி அரசாங்கம், அரசியல் யாப்பில் வெளிப்படையாகக் கூறப்பட்டுள்ள பல தகுதிகளை அனுபவிக்கின்றது. 1999ஆம் ஆண்டு அரசியல் யாப்பில் துணைத்தன்மை என்ற தத்துவம் பொதிந்திருக்கின்றது. தாக்கமுள்ளதாக அமைவதற்காகச் சமச்சீரான செயற்பாடு அவசியப்படும் விடயங்கள் மட்டுமே மத்திய அரசாங்கத்தினால், கையாளப்பட வேண்டும். 'மீதி அதிகாரங்கள்', அதாவது, வெளிப்படையாக வழங்கப்படாதவை, கோட்டங்களின் கையில் இருக்கும்.





பாதுகாப்பு, வெளிநாட்டுக் கொள்கை, சக்தி, போக்குவரத்து, பொருளாதாரம், சமூகக் காப்புறுதி, வியாபாரமும் வர்த்தகமும் என்ற விடயங்களில் சமஷ்டி அரசாங்கத்திற்கே நியாயாதிக்கம் உண்டு. கல்வி, கலாசாரம், சுகாதாரம், பராமரிப்பு, பொலிஸ், வீடமைப்பு, நகரத்திட்டமிடல், கூட்டாட்சி அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட சூழல் நியமங்களை நடைமுறைப்படுத்துதல் என்பனவற்றிற்குக் கோட்டங்களே பொறுப்பு. வேறுபாடுகளைச் சகித்தல், பொலிஸைக் கூட எட்டுகின்றது (ஒவ்வொரு கோட்டமும் தத்தனது சட்டத்திற்கும் ஒழுங்கிற்கும் பொறுப்பாகும்). இராணுவத்தினர் அணியும் சீருடைகளுக்கும் அவை பொறுப்பு (இராணுவம் சமஷ்டி அரசாங்கத்தின் பொறுப்பாகும். ஆனால், ஒவ்வொரு கோட்டமும், சீருடையின் ஒரு பகுதியை மாற்றியமைக்கலாம்.)

வெகுசனத் தொடர்புகள் அல்லது போக்குவரத்து, சமூக நலன் அரசின் வளர்ச்சி என்பவை தொடர்பான நவீன தொழினுட்ப அபிவிருத்திகள் தொடர்பாக, கோட்டங்களின் தகுதிகள் சமஷ்டி அரசாங்கத்திற்கு இடமாற்றப்பட்டதனால், ஓரளவு மத்தியமயமாக்கல் இடம்பெற்றுள்ளது. எப்படியிருப்பினும், சமச்சீரான செயற்பாடு அத்தியாவசியமாகும் தருணங்களில் மட்டுமே, சமஷ்டி அதிகாரங்கள் சட்டமுறையானவையாக அமையும் என வலுவான எண்ணம் இன்னமும் உண்டு. மேலும், ஏதாவது தகுதிகள் இடமாற்றஞ் செய்யப்பட வேண்டுமேயானால், சுவிஸ் வாக்காளர்களுள் பெரும்பான்மையோரின் ஆதரவும் பெரும்பாலான கோட்டங்களின் ஆதரவும் அவசியப்படும். (அபிப்பிராய வாக்கெடுப்பினூடாக) சுவிஸ் மக்கள், பிரதேச அதிகாரங்களுக்கு மிக அதிக முக்கியத்துவம் கொடுப்பதால், நேரடிச் சனநாயக முறை, பொதுவாக, அரசியல் யாப்புசார் மத்தியமயப்படுத்தலின் வேகத்தைப் பொதுவாகக் குறைத்துள்ளது. சமஷ்டி நிறுவனங்கள் கையாளும் அதிகாரங்களை விட உள்ளூர் அதிகாரங்கள் மீது அவர்களுக்குக் கூடிய செல்வாக்கு இருப்பதே சுவிஸ் மக்கள், உள்ளூர் அதிகாரத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதற்குக் காரணமாகும்.

### அரசிறை வரி வருமானம் பற்றிய அதிகாரமும் ஒற்றுமையும்

இப்பரந்த அதிகாரங்களைக் கையாள்வதற்காக, கோட்டங்கள், பரந்த அளவில், அரசிறை வரும்படி (ஃபிஸ்கல்) தொடர்பாகத் தன்னாட்சியை அனுபவிக்கின்றன : மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாடெதுவுமின்றி, கோட்டங்கள் நிதியைச் சேகரித்து, பொது நிதிகளைச் செலவு செய்யலாம். உண்மையில், சமஷ்டி அரசாங்கத்தின் வரி ஈட்டும் அதிகாரம் கடுமையாக வரையறுக்கப்பட்டுள்ளது. சமஷ்டி அரசாங்கம் தனி ஆள் வருமானத்தின் மீது மட்டும் 11.5 சதவீத வரி விதிக்கலாம். கூட்டாட்சி அரசாங்கம், கோட்டங்கள், மாநகர சபைகள் என்ற ஒவ்வொன்றும், தமது முழு நிதி வளங்களுள்ளும் ஏறத்தாழ மூன்றிலொரு பங்குச் செலவிற்கு அவை பொறுப்பாகும்.

மத்திய அரசிலிருந்து சில கோட்டங்களுக்கு (நிலைக்குத்தான சமமாக்கல்) மீள் பங்கீடு செய்வது பற்றி, அரசியல் யாப்பு சில விதிகளை ஏற்படுத்தியுள்ளது. அது கோட்டங்களுக்கிடையில் (கிடையான சமமாக்கல்) மீள் பங்கீடுகள் இடம்பெறுவதையும், ஊக்குவிக்கின்றது. ஆனால், அதை, பொறுப்பாணை சார்ந்ததாக ஆக்கவில்லை.

அரசியல் யாப்பின் பூர்வாங்க வாசகம் வசதி குன்றிய பிரஜைகளுக்கு உதவுதல் தொடர்பாக ஒற்றுமைப்படுத்தல் பற்றி, சில ஈடுபாடுகள் நிலவ வேண்டுமென்று குறிப்பிடுகின்றது (மக்களின் உறுப்பினர்களுள் மிகவும் பலகீனமானவர்களின் நலன்களைக் கொண்டே சுவிஸ் மக்களின் வலிமை மதிப்பிடப்படுகின்றதென்பதை சுவிஸ் மக்களாகிய நாம் அறிவோம்; கோட்டங்களும் அறியும்). எனினும், வளங்களை ஒரு வித மீள் பங்கீடு செய்யும்படி விடுக்கப்படும் இந்த அழைப்பு, சகல பிரஜைகளும் ஒத்த விதத்தில் நடத்தப்பட்ட வேண்டும் என்பதற்கான அழைப்பல்ல என்பது முக்கியமாகும். குறிப்பாக, சமூகப் பாதுகாப்புப் பற்றிய விடயங்களை உதாரணமாகக் குறிப்பிடலாம். பிரஜைகள் ஒப்பிடத்தக்க சேவைகளை அனுபவிக்க வேண்டும் என்பதே நோக்கமாகும். ஆனால், அவை, சில சமயங்களில், கோட்டத்திற்கு கோட்டம் பெரிதும் வேறுபடலாம். சமஷ்டிக் கட்டமைப்புக்கள் நிறுவப்பட்ட பின்னரே, சுவிஸ் சமூக நல அரசு விருத்தியடைந்தமை இதை ஓரளவு விளக்குகின்றது. நடத்தப்படும் விதத்திலுள்ள வித்தியாசங்கள், ஆரம்பத்திலிருந்தே, அமைப்பின் ஒரு பகுதியாக இருந்து வள்துள்ளது. இதற்கு எதிர்மறையாக, சமூக நல அரசு நிறுவப்பட்ட பின்னர், தோன்றிய சமஷ்டி நாடுகளில், வித்தியாசமாக நடத்தப்படுதல், பிரஜைகளின் சமத்துவம் என்ற தத்துவத்தை மீறுவதாகும் என்ற வகையில் நோக்கப்படலாம். (பெல்ஜியம் இதற்கு ஓர் உதாரணமாகும்).

### சுய ஆட்சியுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள்


சுவிற்சர்லாந்து என்ற சமஷ்டி நாடு, 23 கோட்டங்களாகவும் மூன்று, அரைக் கோட்டங்களாகவும் பிரிக்கப்பட்டிருக்கின்றது. அரசுக்களின் சபையில் (மேற் சபை) அவற்றிற்கு, ஒரு பிரதிநிதி (இரண்டு பிரதிநிதிகளுக்குப் பதிலாக) மட்டும் இருப்பார் என்பதையும் நாடளாவிய அபிப்பிராய வாக்கெடுப்புக்களில் அவற்றின் பலம், ஏனைய கோட்டங்களை விட அரைப் பங்காகவே இருக்கும் என்பதையும் தவிர்ப்பதற்காக, இந்த அரைக் கோட்டங்கள், முழுக் கோட்டங்கள் அனுபவிக்கும் அதே அதிகாரங்களையே அனுபவிக்கின்றன.

சுவிஸ் கோட்டங்கள், தமது சொந்த நிறுவனங்களைப் பொறுத்தளவில், மிக அதிக அளவு தன்னாட்சியைப் பெற்றுள்ளன. அவற்றிற்கே சொந்தமான அரசியல் யாப்பு அவற்றிற்கு உண்டு. சட்டவாக்கக் கிளைக்கும் நிறைவேற்றுக் கிளைக்குமிடையில் அதிகாரங்களை எவ்வாறு பங்கீடு செய்யலாம் என்பதை அவை தீர்மானிக்கும். (இது உறுப்பு சார் தன்னாட்சி எனப்படும்). கோட்டங்கள் வெறுமனே நிர்வாக அலகுகள் அல்ல. ஆனால் உண்மையான, காத்திரமான சட்டவாக்க, நிறைவேற்று, நீதி அதிகாரங்களைப் பெற்ற அலகுகளாகும்.

இவை யாவும் கோட்டத்தைச் சேர்ந்த பிரஜைகளால் தெரிவு செய்யப்பட்ட சொந்தப் பாராளுமன்றங்களைக் கொண்டவை. சமஷ்டிப் பாராளுமன்றத்தினால் தெரிவு செய்யப்படும், சமஷ்டி அரசாங்கத்திற்கெதிர்மாறாக, கோட்டங்களுக்கான நிறைவேற்றாளர்களும் பிரஜைகளினாலேயே தெரிவு செய்யப்படுகின்றனர். சில கோட்டங்கள் ஏழு அங்கத்துவ நிறைவேற்றாளர்களைப் பெற்றிருக்க, ஏனைய ஐந்து அங்கத்துவ நிறைவேற்றாளர்களைப் பெற்றுள்ளன. ஒன்று, ஒன்பது நிறைவேற்றாளர்களைக் கொண்டுள்ளது. மக்கள் வாக்களிப்பின் மூலம், நிறைவேற்றாளரை, பதவி நீக்கஞ் செய்வதற்கு, சில கோட்டங்களின் அரசியல் யாப்பில் ஏற்பாடு உண்டு. ஆனால், இத்தகையதொரு சம்பவம் இதுவரை இடம்பெறவில்லை.

கோட்டங்கள் பல வழிகளில் தனித்தன்மை பெற்றுள்ளன. சில கோட்டங்கள் குறிப்பிடத்தக்களவு மத்தியமயப்படுத்தப்பட்டுள்ளன. வேறு சில, பெருவாரியான பொறுப்புக்களை மாநகர சபைகளிடம் கையளித்துள்ளன. சில கோட்டங்களில், பாராளுமன்ற அங்கத்தவர்களாக இருந்து கொண்டே மற்றுமொரு பதவியில் முழு நேர வேலைக்கு அமரலாம். கோட்டம் பற்றிய ஒவ்வொரு சட்டம் தொடர்பாகவும், 'கட்டாயமான ஒப்பங்கோடல்' நடத்தப்பட வேண்டுமென்று, (பொது மக்கள் வாக்களிப்பு) சில கோட்டங்களில் ஏற்பாடு உண்டு. வேறு சில, 'விரும்பினால் மட்டும் அபிப்பிராய வாக்கெடுப்பை நடத்தும். மக்களுள் குறிப்பிடப்பட்டதொரு தொகையினர், கோரினால் மட்டுமே இவை நடத்தப்படுகின்றன. சில கோட்டங்கள், கோட்டப் பாராளுமன்றத்தினால் ஆக்கப்பட்ட சட்டங்களை உறுதிப்படுத்துவதற்காக அல்லது நிராகரிப்பதற்காக வருடா வருடம்' திறந்த வெளி'க் கூட்டங்களை நடத்தும்.





*(தொடரும்)*

# மூட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## இலங்கைப் பரப்புக்குள் நுழைந்த இந்திய விமானங்கள் உணவுப் பொருட்களைப் போட்டன

**விமானப்** பாதுகாப்புடன் முன்னேறிய இலங்கை இராணுவம் பருத்தித்துறை நகரத்தை 1987ஆம் ஆண்டு மே மாதம் 30ஆம் திகதி கைப்பற்றியது. பெருமளவு கண்ணி வெடிகளும் பொறி வெடிகளும் புதைக்கப்பட்டிருந்ததால், இராணுவம் மெதுமெதுவாகவே முன்னேறியது. ஜெயவர்தனாவுக்கு இது பெரும் மகிழ்ச்சியாக இருந்தது. சிங்கள மக்கள் அதிர்ச்சியாலும் சந்தோசத்தாலும் ஆரவாரப்பட்டனர். ஆனால் இந்த ஆரவாரமும் மகிழ்ச்சியும் நீடிக்கவில்லை. நிலைமை முற்றாகவே மாறியது. கண்மூடித் தனமாக பொது மக்கள் வாழும் பகுதிகள் மீது, இலங்கை விமானப்படை குண்டு வீசித் தாக்குவதாக அமிர்தலிங்கம் கண்டனம் தெரிவித்தார். நிலைமை கட்டுமீறிச் செல்வதை உணர்ந்த தமிழக முதல்வர் எம்.ஜி. இராமச்சந்திரன், புதுடில்லிக்கு விரைந்து சென்று பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்துப் பேசினார். இராணுவ நடவடிக்கையை உடனடியாக நிறுத்துவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்குமாறு எம்.ஜி.ஆர், ராஜீவ் காந்தியைக் கேட்டுக் கொண்டார். இந்திய அமைச்சரவையின் அரசியல் விவகாரக் கமிட்டி உடனடியாகவே கூடி மாற்று நடவடிக்கை எடுப்பது பற்றி ஆராய்ந்தது. புலிகள் தோற்கடிக்கப்படுவதை அனுமதிக்கக் கூடாது என்று இந்திய உளவுத் துறையினரும் இந்திய வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளும் கூறினார்கள். புலிகள் தோற்கடிக்கப்பட்டால் புதுடில்லியின் ஆதிக்கம் தளர்ந்து விடுமென்பதே அவர்கள் கூறிய காரணமாகும்.

### 149 தேனீர்க் கோப்பைக்குள் இரத்தம்!

யாழ்ப்பாணத்தில் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு கப்பல்கள் மூலம் உணவுப் பொருட்களை அனுப்பப் போவதாக ஜூன் மாதம் முதலாம் திகதி இந்தியா அறிவித்தது. அப்போதைய வெளிவிவகார அமைச்சர் ஏ.சி.எஸ்.ஹமீதை கொழும்பிலிருந்த அப்போதைய இந்திய உயர் ஸ்தானிகர் தீக்ஷித் சந்தித்து இது குறித்துப் பேசினார். மனிதாபிமான அடிப்படையில் யாழ்.மக்களுக்கு உணவுப் பொருட்கள் வழங்க இலங்கை அனுமதியளிக்க வேண்டுமென்று தீக்ஷித், ஹமீதைக் கேட்டுக் கொண்டார். எந்தவித மனிதாபிமான உதவிகளையும் நேரடியாக வழங்கக் கூடாதென்றும் வழங்குவதாயிருந்தால், இலங்கை அரசுக் கூடாகவே வழங்க வேண்டுமென்றும் ஹமீத் பதிலளித்தார்.




ஆனால் நேரடியாக உணவுப் பொருட்களை அனுப்பப் போவதாக இந்தியா அறிவித்ததும் இலங்கை அமைச்சரவை அவசர அவசரமாகக்கூடி, நிலைமையை ஆராய்ந்தது.

"கொழும்பு அரசாங்கத்தை மீறி உணவுப் பொருட்களை அனுப்புவது எமது இறைமையை மீறும் செயல்" என்று இலங்கை அமைச்சரவை விடுத்த அறிக்கையில் தெரிவித்தது. அமைச்சரவையின் இந்த எதிர்ப்புக்கு மத்தியிலும் யாழ்ப்பாணத்திற்கு கப்பல்கள் மூலம் நேரடியாக உணவுப் பொருட்களை அனுப்புவதற்கு இந்திய அரசியல் விவகாரக் கமிட்டி அங்கீகாரம் அளித்தது. இது குறித்து பரவலான இந்திய எதிர்ப்பு பிரசாரமொன்றினை இராஜதந்திர மட்டத்தில்

(அரசியல் தொடர்)

இலங்கை அரசாங்கம் மேற்கொண்டது. இந்தியாவில் உணவுக் கப்பல்கள் அனுப்பும் திட்டத்தை முறியடிப்பதற்கு தம்மிடம் போதிய பலமில்லையென்று இலங்கை அரசாங்கம் பிரசாரம் செய்தது. இதற்குப் பதிலடியாக யாழ்ப்பாணத்துக்கு உணவுப் பொருட்கள் எடுத்துச் செல்லும் கப்பல்களில் சேர்ந்து செல்லுமாறு இந்தியச் செய்தியாளர்களையும் புதுடில்லியிலுள்ள வெளிநாட்டு நிருபர்களையும் இந்தியா அழைத்தது.

ஜூன் மாதம் முதலாம் திகதி பல்வேறு உணவுப் பொருட்களுடன் 19 மீன்பிடி வள்ளங்கள் யாழ்ப்பாணத்தை நோக்கிப் பயணத்தைத் தொடர்ந்தன. இவற்றில் 35 தொன் உணவுப் பொருட்கள் இருந்தன. இவற்றுக்குப் பாதுகாப்பாக இந்திய பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் 'விக்ரம்' என்ற கப்பலும் பயணம் செய்தது. அக் கப்பலில் இந்திய மற்றும் வெளிநாட்டு ஊடகவியலாளர்களும் பயணம் செய்தனர். ஆனால், இவை இந்திய - இலங்கை கடலெல்லையை அண்மித்ததும் இலங்கை அதிகாரிகளுக்கும் இந்திய அதிகாரிகளுக்குமிடையில் இரு மணித்தியாலங்கள் நீடித்த பேச்சுவார்த்தையையடுத்து இந்தியப் படகுகளை திருப்பிக் கொண்டு செல்வதற்கு இணக்கம் காணப்பட்டது. இந்தியா விமான மூலம் உணவுப் பொருட்கள் போட திட்டமிட்டிருந்ததை இலங்கை அதிகாரிகளால் புரிந்து கொள்ள முடியவில்லை.

சோவியத் யூனியனில் தயாரிக்கப்பட்ட AN-32 ரக போக்குவரத்து விமானங்களில் 25 தொன் உணவுப்பொருட்கள் ஏற்றப்பட்டன. அரிசி, பருப்பு, சீனி, மரக்கறி மற்றும் ஏனைய பொருட்களும் இதில் அடங்கும். இந்தியா மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த 35 ஊடகவியலாளர்களும் விமானத்தில் ஏற்றப்பட்டனர்.

மிராஜ்-2000 ரக யுத்த விமானங்கள் இரண்டும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன. இந்த விமானங்களில் ராக்கெட்டுகள் மற்றும் ஏனைய ஆயுதங்களும் பொருத்தப்பட்டிருந்தன. உணவுப் பொருட்கள் கொண்டு செல்லும் இந்திய விமானங்கள் மீது இலங்கை விமானப் படை தாக்குல் நடத்தினால், பதில் தாக்குதல் நடத்துவதற்கு வசதியாகவே இந்திய யுத்த விமானங்கள் பாதுகாப்பளிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

அப்போது புதுடில்லியில் இலங்கை உயர் ஸ்தானிகராக

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

பணியாற்றிக் கொண்டிருந்தவர் பேர்னாட் திலரட்ன. இந்திய வெளிவிவகார அமைச்சு அலுவலகத்திற்கு ஜூன் மாதம் 4ஆம் திகதி பிற்பகல் 2 மணியளவில் இவர் அழைக்கப்பட்டார். அப்போது இந்திய வெளிவிவகார அமைச்சராகப் பணியாற்றிய நட்வார் சிங், யாழ்ப்பாண மக்களுக்கு விமானங்கள் மூலம் உணவுப் பார்சல்கள் போடும் இந்தியாவின் திட்டம்பற்றி பேர்னாட் திலகரட்னவிடம் கூறினார். "கடவுளே! அப்படியானால் நீங்கள் எமது வான் பரப்பில் அத்துமீறிப் பறக்கப் போகின்றீர்களா" என்று அதிர்ச்சியுடன் கேட்டார் பேர்னாட் திலகரட்ன.

"ஆம் அப்படித்தான்" என்று பதிலளித்தார் நட்வார்சிங். அத்துடன், எதிர்ப்புத் தெரிவிக்க முனைந்தால் தாக்குதல் நடத்தப்படும் என்றார் நட்வார்சிங். நட்வார்சிங்கின் தொலைபேசியைப் பாவித்து கொழும்பிலுள்ள வெளிவிவகார அமைச்சர் ஹமீதுடன் தொடர்பு கொண்டார் பேர்னாட் திலகரட்ன.

யாழ்ப்பாணத்தில் உணவுப் பார்சல்களைப் போடுவது இலங்கையின் இறைமையை மீறும் செயலென்றும் ஐக்கிய நாடுகள் சபைக்கு இவ்விவகாரம் கொண்டு செல்லப்படுமென்றும் இந்திய வெளிவிவகார அமைச்சருக்குச் சொல்லுமாறு பேர்னாட் திலகரட்னவைப் பணித்தார் ஏ.சி.எஸ்.ஹமீத்.

சரியாக பிற்பகல் 3.55 மணிக்கு பெங்களூர் விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட விமானங்கள், பிற்பகல் 4.55 மணிக்கு யாழ்ப்பாணத்திற்கு மேலாக பறந்து கொண்டிருந்தன. 1500 அடி உயரத்திலிருந்து பாரிய பரசூட்டுகள் மூலம் ஜூன் மாதம் 4ஆம் திகதி உணவுப் பொட்டலங்கள் போடப்பட்டன. 20 நிமிடங்களில் பணியை முடித்துக்கொண்டு பெங்களூரிலுள்ள தமது தளத்திற்கு விமானங்கள் திரும்பின.

(தொடர்ந்து வடியும்....)




"என்னை இந்த அளவுக்கு சீரழிச்சவனை நான் பழிவாங்கியே தீரணும். ஆனா, அவன்கிட்ட இதுமாதிரியான ஆசிட்டுகள் இருக்கிறதால அவனை எப்படிச் சமாளிக்கிறதுன்னு தெரியலை" கோவிந்தன் ஆற்றாமையுடன் பேசினான். "ஓகோ... அந்த லெக்சரர் உங்க முகத்தில ஆசிட் ஊத்திட்டாரா?" சந்து நாயர் கேட்டார். "ஆமாம்... இப்படிப்பட்ட திரவப் பொருள்கள் ஆவி-பிசாசுகளையும் பாதிக்கவே செய்யும் இருந்தாலும் கோவிந்தனை நாம பயன்படுத்திக்க முடியும்னுதான் தோணுது! நீங்க சொன்னதை வச்சுப் பார்த்தா, எங்களோட எதிரிதான், உங்களையும் இப்படிச் சீரழிச்சிருக்கிறான்னு தெரியுது.



அப்படியானா நாம எல்லோரும் ஒண்ணு சேர்ந்தா அவன் தப்பிக்க முடியுமா என்ன?" ஜயந்தன் கேட்டார். "அதுக்கு வாய்ப்பே இருக்காது. உங்களோட சேர்ந்துக்கிறதுல எனக்கு எந்தவிதமான ஆட்சேபமும்

**எழுதுவது சிவன்**

கிடையாது!" மறுநாள் தேவதத்தன் கொடுத்து அனுப்பிய மந்திரித்த சரடுடன் குமார் காலேஜுக்கு வந்து சேர்ந்தார். யாருக்கும் தெரியக்கூடாது என்பதற்காக அந்தச் சரடை தனது மணிபர்ஸில் பத்திரப்படுத்தி வைத்திருந்தார். அன்று நிறையத் தடவை யார் யாரோ வந்து எலும்புக்கூட்டை வகுப்புகளுக்கு எடுத்துச் சென்று பாடம் நடத்தினர், பாகங்களை விளக்கினர். எனவே இரவில் அந்தச் சரடை எலும்புக்கூட்டின் மீது கட்டிவிடுவது என்று தீர்மானித்தார் குமார். மாலை நேரமானதும் பிரபாகரனுடன் சேர்ந்து வெளியே போய்விட்டு வந்தார். திரும்ப காலேஜுக்கு வந்தபோது இரவு ஒன்பது மணிக்கு மேல் ஆகியிருந்தது. தனது பழைய படுக்கையறையான லேபுக்குள் நுழைந்தபோது ஸ்ரீதேவி கட்டிலில் அமர்ந்திருந்தாள் அவளது பார்வை கண்ணாடிப் பெட்டியின் மீதே பதிந்திருந்தது. அறைக்குள் வந்த குமார், ஸ்ரீதேவியின் அருகே கட்டிலின்மீது அமர்ந்தார். "என்ன தேவி அப்படிப் பார்க்குறே?" "அந்தக் கண்ணாடிப் பெட்டியைத்தான் பார்த்துட்டிருக்கிறேன்..." "அப்படி பார்க்குற அளவுக்கு அதில என்ன தெரியுது?" "அதுக்குள் ஏற்கனவே இருந்த எலும்புக்கூடு என்ன ஆச்சு?" அதோட மண்டையோட்டை நான் கொண்டுவந்து கொடுத்தேனே, ஞாபகமிருக்கா! வேண்டாம்னு தூக்கிப் போட்டீங்களா, இல்லை ஸ்ரீதேவி வார்த்தைகளை முடிக்காமல் நிறுத்தினாள். அதுவரை நடந்த சம்பவங்களை குமார் அவளிடம் ஒன்றுவிடாமல் கூறினார். "ஓகோ... அப்படியா சேதி?" ஸ்ரீதேவி சந்தேகம் நிறைந்தவளாக குமாரைப் பார்த்தாள். "ஸ்ரீதேவி நான் எதிர்பாராத சம்பவங்களா தொடர்ந்து நடந்துட்டு வருது. உன்கிட்டேயிருந்துதான் இதெல்லாம் ஆரம்பமானது!" "உண்மைதான்! ஆனால், என்னைப் பொறுத்தவரை இந்த மாற்றம் தவிர்க்க முடியாத ஒரு விஷயமா இருந்திச்சு, என்னை இந்த நிலைமைக்கு ஆளாக்கினவங்களைப் பழிவாங்க இப்பத்தான் சந்தாப்பம் கிடைச்சிருக்கு!" -ஸ்ரீதேவி கூறினாள். இரவு வெகு நேரமாகிவிட்டிருந்தது நிலவு ஒளி இல்லாதிருந்தது. நட்சத்திரங்களிலிருந்து வெளிப்பட்ட கலவையான வெளிச்சம் தெளிவற்றதாக அறைக்குள் படர்ந்திருந்தது. அந்த அறைகுறை வெளிச்சத்தில் அமர்ந்துதான் இருவரும் பேசிக்கொண்டிருந்தனர். அத்துடன் சற்றுத் தொலைவில் எரிந்துகொண்டிருந்த தெருவிளக்கின் வெளிச்சமும் சன்னமாக கலந்திருந்தது. குமார் மேஜை மீது இருந்த பருமனான மெழுகு வத்தியை ஏற்றினார். அந்த வெளிச்சம் அறையின் இருட்டை ஓரளவு போக்கியது. அந்தக் கண்ணாடிப் பெட்டியில் புத்தம் புதிய எலும்புக்கூடு பழையபடி தொங்கிக் கொண்டிருந்தது. முன்னர் இருந்த எலும்புக்கூடு அப்போதும் ஒரு கேள்விக்குறியாகவே தென்பட்டது! "நீங்கள் சொல்வதைப் பார்த்தால் இரண்டாவதாகப் பொருத்திய எலும்புக் கூட்டுக்கும் உருவ மாற்றம் நேர்ந்திருக்கிறது. அப்படித்தானே?" தேவி கேட்டாள். "அப்படித்தான் நினைக்கிறேன்." "அந்த உருவத்தின் அசைவை வைத்து அதன் மீது ஆசிட்டையும் வீசியிருக்கிறீர்கள்?" "அறைக்குள் எதையெல்லாமோ போட்டு உடைக்கும் சத்தம் கேட்டுத்தான் நுழைந்தேன். வேறு எந்த வழியும் தெரியாததால் ஆசிட்டைப் பயன்படுத்தினேன்." "அப்படியானால் அந்த ஆவி வெளியேறிடுச்சுன்னு அர்த்தம். அதன் மூலம் உங்களுக்குத் தொல்லை ஏற்படவும் வாய்ப்பு இருக்கு!" "உருவமில்லாத ஓர் ஆவி என்னை ஏதாவது செய்ய முடியுமா என்ன? என்ன செய்ய முடியும்?" "ஆரம்ப கட்டத்துல அதுக்குச் சாத்தியமில்லைதான். ஆனால், சொந்தத் திறமையாலே, இல்லேன்னா தகுந்த மத்தவங்களோட உதவியால அப்படியொரு சக்தியை ஏற்படுத்திக்க முடியும் அதுக்கு வாய்ப்பு இருக்கு!" "அப்ப உனக்கும் அப்படித்தான் இந்தச் சக்தி கிடைச்சதா தேவி?"

(வாசனை வீசும்....)

# அவர்களுக்கு அது ஹாரர்ஸ்கோப்!

**நமது** வாழ்க்கை பல நேரம் பயத்தில்தான் கரைகிறது!

வீட்டிலிருக்கும் இருட்டை விரட்டுவதற்காக ஒருவன், வாளி வாளியாக இருட்டை மொண்டு கொண்டுவந்து வீதியில் கொட்டிக் கொண்டிருந்தானாம். எத்தனை ஆண்டுகள் இப்படிச் செய்தாலும், இருட்டைச் சுற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தால் இருட்டை வெளியேற்ற முடியாது! ஒளி இல்லாமை என்பதுதான் இருட்டு. அதனால் ஒரு சின்ன விளக்கை ஏற்றி வைத்தால், இருட்டு ஓடிவிடும்!

பயமும் இருட்டு மாதிரித்தான்! அன்பு இல்லாமைதான் பயம்! அன்பு என்ற விளக்கை ஏற்றி வைத்தால், பயம் மறைந்துவிடும்! புரியவில்லை என்றால், அன்பின் ஒருவகையான, காதலை எடுத்துக் கொள்ளுங்கள்! காதல் எப்படி மலர்கிறது...? ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒருவர்மீது இன்னொருவர் கொள்ளும் நம்பிக்கையில்தானே காதல் பிறக்கிறது!

ஒரு பெண்ணின்மீது ஆணுக்கோ அல்லது ஆணின் மீது பெண்ணுக்கோ நம்பிக்கை வராவிட்டால், அங்கே காதல் என்ற அன்பு கிடையாது!

ஃ.பி இலக்கியத்தில் வரும் முல்லா நஸ்ருதீனின் வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவத்தைச் சொன்னால், இந்தத் தத்துவம் உங்களுக்குச் சுலபமாக விளங்கக்கூடும்.


முல்லா நஸ்ருதீனுக்கு அன்று காலையில்தான் திருமணம் நடந்தது. அன்றிரவு நதியைக் கடந்து, மறுகரைக்கு முல்லா நஸ்ருதீனும் அவரது இளம் மனைவியும் உறவினர்களோடு படகில் போய்க் கொண்டிருந்தார்கள்.

அப்போது திடீரென்று புயல் அடித்தது. நதியிலே வெள்ளம் கரைபுரண்டது. இவர்கள் பயணித்துக் கொண்டிருந்த படகு பேயாட்டம் ஆடியது. மணப்பெண் உட்படப் படகில் இருந்த அத்தனை பேரையும் மரண பயம் தொற்றிக்கொண்டது! ஆனால், முல்லா மட்டும் பயமேதும் இல்லாமல் இருந்தார். இதைப் பார்த்த புது மணப்பெண், "உங்களுக்குப் பயமாக இல்லையா...?", என்று கணவரை ஆச்சரியத்தோடு கேட்டாள். அதற்கு முல்லா நஸ்ருதீன் பதில் சொல்லாமல் தன் இடுப்பிலே செருகியிருந்த கத்தியை எடுத்து மனைவியின் குரல்வளையைக் குத்துவது போல் ஓங்கினார். மனைவியின் முகத்தில் எந்தச் சலனமும் இல்லை! அப்போது முல்லா நஸ்ருதீன் தன் மனைவியைப் பார்த்து, "கத்தி என்றால் உனக்குப் பயமாக இல்லையா...?" என்று கேட்டார். அதற்கு அவரது மனைவி, "கத்தி வேண்டுமானால் அபாயகரமானதாக இருக்கலாம். ஆனால், அதைப் பிடித்துக் கொண்டிருப்பவர், என்மீது அளவுகடந்த அன்பு வைத்திருக்கும் என் கணவர். அதனால் நான் பயப்படவில்லை..." என்றாள்.

"அதேபோலத்தான் எனக்கும். இந்த அலைகள் வேண்டுமானால் ஆபத்தானதாக இருக்கலாம். ஆனால், இதை ஆட்டுவித்துக் கொண்டிருக்கும் அல்லாஹ் அன்புமயமானவர். அதனால் எனக்குப் பயம் இல்லை..." என்றாராம் முல்லா நஸ்ருதீன்.

முல்லா நஸ்ருதீனுக்கு அல்லாஹ் மீது நம்பிக்கை இருந்தது. அதனால் அன்பு இருந்தது. அல்லாஹ் மீது அவருக்கு நம்பிக்கை இல்லையென்றால் அன்பும் இருந்திருக்காது. அன்பு இல்லையென்றால், படகில் பயணித்த மற்றவர்களைப் போல முல்லா நஸ்ருதீனும் பயத்தில் நடுங்கிக் கொண்டிருப்பார்.

இதே உண்மையை நம் வாழ்க்கையிலும் பொருத்திப் பார்க்கலாம். நமக்குப் பயம் ஏற்படுகிறது என்றால், நம் மீதே நமக்கு நம்பிக்கை இல்லை என்றுதான் பொருள்!



'நான் கடவுளுக்குப் பயந்தவன்..' என்று பலர் சொல்வதை நாம் கேட்டிருக்கிறோம். இது அபத்தமானது. கடவுளிடம் நாம் செலுத்தவேண்டியது அன்புதானே தவிர, பயம் இல்லை!

"நமது உபநிஷத்துகள் சொல்லும் மிகப்பெரிய விஷயமே, 'பயம் இல்லாமல் இரு' என்பதுதான்..." என்று சுவாமி விவேகானந்தர் சொல்லியிருக்கிறார்.

சிலர் தங்களின் ஜாதகத்தைத் தூக்கிக் கொண்டு, 'எனக்கு மரணம் எப்போது வரும்...?' என்று தெரிந்துகொள்ள ஜோசியர் மாற்றி ஜோசியராகப் போய்க் கொண்டே இருப்பார்கள். அவர்களைப் பொறுத்தமட்டில் ஹாரர்ஸ்கோப் (ஜாதகம்) என்பது ஹாரர்ஸ்கோப்! இம்மாதிரி நபர்கள், வாழும்போது என்ன செய்யலாம் என்பதைவிட, எந்த நேரம் இறந்துவிடுவோமோ என்ற பீதியிலேயே உருகி உருக்குலைந்து கொண்டிருப்பார்கள்!

மரண பயம் பற்றி தாகூர் சொல்லும்போது -

"நீ இந்தப் பூமியிலே வந்து பிறப்பதற்கு முன்னதாகவே உனக்காக, உன் தாயின் இரண்டு தனங்களிலும் பாலைச் சுரக்க வைத்தவன் இறைவன்... நீ இறந்த பின்னும் உனக்காக இன்னொரு உலகத்தைக்கூட அவன் படைத்து வைத்திருக்கக்கூடும்! அதனால் நம்பிக்கையோடு இரு..." என்கிறார்.

பயப்படுபவர்களுக்கெல்லாம் ஒரே ஒரு விஷயம்தான் சொல்ல முடியும். எதிர்காலத்தைப் பற்றித் திட்டமிடுங்கள்... தவறில்லை. ஆனால், எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்ற கற்பனைகளில் பயப்படுவதால் உங்கள் மகிழ்ச்சிதான் பாழாகும்!

பணம் திருட்டுப்போகாமல் இருக்க, 'அதை எங்கே, எப்படி வைப்பது... மீறி திருட்டுப் போனால் இன்ஷுரன்ஸ் மூலம் எப்படிப் பாதுகாப்புப் பெறுவது' என்று திட்டமிடுங்கள். இதில் எதையும் செய்யாமல் சும்மா நின்று பயப்படுவதில் அர்த்தமில்லை!

'பரீட்சையில் ஃபெயிலானால்..' என்று விபரீதமாகக் கற்பனை செய்யாதீர்கள். உங்களை நீங்களே பலவீனமாக்கிக் கொள்கிற அந்த நேரத்தைப் பரீட்சையில் எப்படி பாஸாவது என்பது பற்றிச் சிந்திப்பதில் செலவிடுங்கள்.

**நன்றி : சுவாமி சுகபோதானந்தா.**

(தொடர்ந்து வரும்.........)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

## குறுக்கெழத்துப் போட்டி 158

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | |
| 19 | | | 22 | 23 | 24 |
| | 26 | | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | | 36 |

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 28.02.2006 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-158
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 156க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

ஏ.ஜே. பாத்திமா பஸ்னா, 61/1A, மகாபுத்கமுவ, கொடிகாவத்த.

### பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.

1. காமில் ஜாவித் - பாத்திமாஹனா, 33, காட்டுப்பள்ளி குறுக்கு வீதி. ஏறாவூர் - 03.
2. அனீஸா அல் - ஆஸாத், புன்னைக்குடா வீதி, ஏறாவூர் - 03.
3. ஏ. வாசவி, 620, நாவலர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.
4. லோ. பிரணவன், மன்/புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை, மன்னார்.
5. எஸ். பவானி, 48/15, பி. டவுன், ஹட்டன்.
6. வை. சாரங்கன், 32/5, குளோப் மில் வீதி, பண்டாரிக்குளம், வவுனியா.
7. இந்திரா தர்மதாஸ், புனித செபஸ்தியார் வீதி, மன்னார்.
8. எம். ஜே. பெர்ணாண்டோ, புனித லூசியாஸ் ஒழுங்கை, கொட்டாஞ்சேனை.
9. ஜோதிலக்ஷ்மி கனகசபை, 3, மொல்லிகொட ஒழுங்கை, கம்பளை.
10. மீராமுகைதீன் - ஹாலீத், 21, காட்டுப்பள்ளி வீதி, ஏறாவூர் - 03 ஏ.

### இடமிருந்து வலம்

1. தாழம் பூவிற்கு சாபம் கிடைத்ததிற்கும் இத்தினத்திற்கும் தொடர்புண்டு.
7. புனித நதிகளில் ஒன்று (குழம்பியுள்ளது).
11. துறவி அல்லது முனிவர் என்றும் பொருள்படும்.
13. சரஸ்வதிக்கு ஒத்த பொருள்படும் (குழம்பியுள்ளது).
22. இப்பிறவியை இவ்வாறு கூறலாம்.
28. தொழில் நிலையின் இடம் என்று கூறலாம் (குழம்பியுள்ளது).
31. இது தலைகாக்கும் என்பர்.

### குறுக்கெழுத்துப் போட்டி 156 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 க | 2 ட | 3 க | 4 ம் | | 6 ம |
| 7 டி | 8 இ | | 10 தெ | 11 ற் | 12 ரு |
| 13 த | 14 ர் | 15 வை | 16 ய் | | 18 ம் |
| 19 ம் | | 21 க | 22 ப | 23 ம் | 24 ட |
| | 26 ணை | 27 அ | | 29 ட | |
| 31 சி | 32 வி | 33 ய் | | 35 ல | 36 சை |

### மேலிருந்து கீழ்

1. இராசிகளில் ஒன்று
2. துக்கம் (குழம்பியுள்ளது).
3. ஜெமினி கணேசனும், சரோஜாதேவியும் நடித்து வெளியான திரைப்படமொன்று (குழம்பியுள்ளது).
5. திரைகடல் ஓடியும் இதைத் தேடு என்பார்கள். (குழம்பியுள்ளது)
6. மூன்று என்றும் பொருள்படும் (தலைகீழ்).
16. மனம் என்றும் கூறலாம்.
24. ஒன்றுக்கு மேற்பட்டதைக் குறிக்கும் சொல் (குழம்பியுள்ளது).
26. செல்வம் என்று பொருள்படும்.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

# புதிய நடையில் புதிய தத்துவங்கள்

- வழங்குவது றாஹில்

## வல்லமை மலை

**உன்னை** உன்னால் நீ யார் என்று தீர்மானிக்க முடியவில்லை.

சில வினாடிகளில் தீப்பற்றி எரிகிறாய். தீ வைக்கிறாய்.

சில வினாடிகளைத் தேனாக்குகிறாய். இனிப்புப் பங்கிடுகிறாய்.

இன்னும் சில வினாடிகளில் பூவாகிறாய். புன்னகை பரப்புகிறாய்.

இன்னும் சில வினாடிகளை முள்ளாக்குகிறாய். தைக்கிறாய்.

இப்படி நேரங்களால் நீ மாறிக் கொண்டே இருக்கிறாய்.

உன்னையும் மீறி நீ இயங்குகிறாய். இயக்கப்படுகிறாய்.

பல முகங்கள் ஒட்டிக் கொண்டாய் நீ.

உனது உண்மையான முகம் எதுவென்று உனக்கே தெரியவில்லை.

பலவற்றை இழக்கிறாய் ஒன்றையுமே பெறாமல்!

உன் மனம் இழக்கிறாய்.

உன் கனவு இழக்கிறாய்.

உன் வயது இழக்கிறாய்.

மொத்தத்தில் உன்னையே தொலைத்துவிட்டுத் தேடுகிறாய்.

மூளையின் கடமையை மனதுக்குக் கொடுக்காதே!

உன் அறிவின் தொழிலை உன் உணர்ச்சிகளுக்குப் பங்கு போடாதே!

உனது அறிவைக் காவலாளியாக வை உன் மனதுக்கு! உன் மனம் திருடப்படாது.

உன் மனதை உனக்கு நீ எஜமானாக நியமிக்கும் போது நீ அடிமையாகிவிடுகிறாய்.

நீ உனக்கு மன்னனாக வேண்டுமானால் அறிவிடம் ஆலோசனை பெறு! அனுபவத்திடம் உரையாடிப் பார்!

உன்னை நீ உயிருடன் மீட்க வேண்டுமானால் முதலில் உன் மனதை மீட்டெடு!

உன் மனதை மீட்பதற்கு அறிவு செய்!

உன் எண்ணங்களை வெறும் உணர்ச்சிகளிடம் நீ அடகு வைக்கும்போது

நீ குருதியோடு மட்டும் குடும்பம் நடத்துகிறாய்.

நீ சிறகில்லாமல் வந்தாய், சிறகு பெறுவதற்காக!

நீ படகு இல்லாமல் வந்தாய், படகு விடுவதற்காக!

நீ வெறுங்கையுடன் இங்கே அனுப்பப்பட்டாய், உன்னால் எதையும் ஆக்க முடியும் என்பதனால்!

ஆனால்; நீ உன்னையே அழித்துக் கொண்டிருக்கிறாய்.

உனது மூளை ஆழியை விட ஆழமானது. வானத்தை விட விரிந்தது.

நீ வல்லமை மலை என்பதை எப்பொழுது நீ ஏற்றுக்கொள்கின்றாயே அப்பொழுதுதான் நீ மூளையால் வாழ்கிறாய்.

உன் மனதைக் கைப்பற்றி அதிலுள்ள களைகள் பிடுங்கி அறிவு விளைச்சல் பெறு நீ! தெளிவு ஒளி அடைவாய்.

அப்பொழுது நான் யார், என்ற கேள்வி தோற்றுப் போகும் உன்னிடம்.

# கோலங்கள்

**கண்ணம்மா** அந்த முருகன் கோவிலுக்கு வேலைக்கு வந்து ஆறு வருஷமாகிறது. அவளுக்குக் கணவன் இல்லை. பிள்ளைகளும் இல்லை. பண்டாரவளைப் பகுதியில் ஒரு தோட்டத்தில் கணவன் வேலையாயிருந்தபோது அவனுடன் நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருந்தாள். ஒரு நாள் அவளது கணவனின் காலில் அட்டை கடித்துவிட்டது. அளவுக்குமீறிய இரத்தம் வெளியேறிய பின்பே அது அவனுக்குத் தெரிய வந்தது. அப்போது அவன் தற்காலிகமாக மருந்து போட்டுச் சுகப்படுத்தி வேலையிலீடுபட்டான். ஆனாலும் அது நாட்செல்ல, பெரிய புண்ணாகிப் புரையோடி விஷமாகி அவள் கணவன் வீரையா இறந்துவிட்டான். வீரையா அந்தத் தேயிலைத் தோட்டத்தில் கொழுந்து ஏற்றிச் செல்லும் லொறியில் சாரதியாகக் கடமையாற்றினான். சுமார் ஐந்து வருடம் வரை சேவையிலிருந்தான். அவன் இறந்தபின் அவனுடைய சேமலாப நிதியில் ஒரு சிறு தொகையே கண்ணம்மாவுக்குக் கிடைத்தது. அதை வைத்துத் தன் பழைய கடன்களைத் தீர்த்தாள். அதன்பின் அங்கு தொடர்ந்து வாழப்பிடிக்காமல் வெளியேறி, வேலைதேடித் திரிந்து கடைசியாக இந்தக் கோவிலில் வேலைக்கமர்ந்தாள். சொந்த வீடோ, காணியோ இல்லாத அவளுக்கு இரண்டு தங்கைகள் இருந்தார்கள். ஒரு சகோதரி கணவன் இறந்தபிறகு புடைவைகள், ரெடிமேட் ஆடைகள், நாகரீக உடைகள் என்று வீடுவீடாகப் போய் விற்றுப் பிழைத்துக் கொண்டிருந்தாள். மற்றவள் தன் கணவனுடன் எங்கோ வாழ்ந்து கொண்டிருந்தாள். அரசாங்கத்தால் காணி கொடுப்பதாக யாரோ கூறிய பேச்சை நம்பிய கண்ணம்மா, காணிக்கு விண்ணப்பம் போட்டு அலைந்துதிரிந்து ஏமாந்ததுதான் கண்ட பலன்.

மாதம் ஆயிரம் ரூபாவும் மூன்று வேளை சாப்பாடு, உடுபுடவை, தங்க இடவசதி என்று அந்தக் கோவில் பூசாரி வேலையா சொல்லவும் அதற்குக் கண்ணம்மா சம்மதித்தே இந்த இடத்தில் வேலைக்கமர்ந்தாள். கண்ணம்மாவின் இரு தங்கைகளும் தங்களுடன் வந்து இருக்கும்படி பலமுறை கேட்டும் அவள் பிடிவாதத்துடன் மறுத்துவிட்டாள். தன்னால் மற்றவர்களுக்குக் கஷ்டம் இருக்கப்படாது என்ற நோக்கமும் சுயகௌரவமும் கொண்ட பெண் அவள்.

நாட்கள் பறந்தன. அந்தக் கோவிலுக்குச் சொந்தக்காரரும் பூசாரியுமான வேலையா, தான் பேசியபடி மாதச் சம்பளத்தை ஒழுங்காகக் கொடுத்து



-ச. இரா. பாலகிருஷ்ண ஐயர், கிராண்ட்பாஸ்.

வந்தான். கண்ணம்மாவுக்கும் அவன்மீது திடமான நம்பிக்கையும் மரியாதையும் ஏற்பட்டன. அதன்பின் படிப்படியாக நான்கு மாதம் கழிந்ததும் கண்ணம்மாவின் கைக்குச் சம்பளம் முன்போல் வராது இழுபறிப்பட்டதுடன் வேலைப் பளுவும் அதிகரித்தது.

காலை ஐந்து மணிக்கு எழும்பி வேலையாவின் பிள்ளைகளைக் குளிப்பாட்டிச் சீருடை அணிவித்து, புத்தகப் பைகளையும் எடுத்தபடி அவர்களை ஸ்கூலுக்கு அனுப்புவதற்காக பெரும் குளிர்வாடையில் நெடுஞ்சாலையில் போய் பள்ளிக்கூட வேன் வரும்வரை காத்து நின்று ஏற்றிவிடவேண்டும். வீடு திரும்பியதும் கட்டிப் போன புடவையை மாற்றி மாற்றுடை போட்டுவிட்டு பாத்திரம் கழுவி வீடுகூட்டிப் பிறகு காப்பிபோட்டு வேலையாவுக்கும் மனைவி நளினிக்கும் கொண்டுபோய் கொடுத்துவிட்டு, கோவில் கூட்டிப் பூக்கள் பறித்து பூசைக்கு ஆயத்தம் செய்ய வேண்டும். இப்படிச் சங்கிலித் தொடர் போலத் தொடங்கிய அவளுடைய வேலைகள் முடிந்து இரவு படுக்க மணி பத்தைத் தாண்டிவிடும். இப்படியே ஏழு வருடங்கள் கடந்தன. சம்பளம் வந்த பாடில்லை. இதற்கிடையில் வேலையா அவ்விடத்தில் ஒரு நல்ல வீட்டையும் வாங்கிக் குடியேறினான். அது வசதியான மாளிகை போல் இருந்தது.

வேலையா ஒரு கோவில் பூசாரியாக இருந்தாலும், அவனுடைய பிள்ளைகள் கோவிலுக்கு வருவதில்லை. இக்காலத்திய நாகரீக வாடை அவர்களையும் விட்டபாடில்லை. கோவிலுக்குப் போவது அவ்வளவு அவசியமாகப் படவில்லை. நாள் போகப் போக வேலையாவுக்கு, குறி சொல்வது, கைரேகை, ஜாதகம், பொருத்தம் பார்ப்பது என்று சகல வழிகளிலும் வருமானம் கூடியது. இதனால் வேலையா தன் நண்பர்களிடம் கடனாகப் பணம் நிறைய வாங்கத் தொடங்கினான். அது மட்டுமல்லாமல் பஜார்களிலும் கணக்கு வைத்துப் பொருட்கள் வாங்கினான். பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்துக்குக் கொண்டுபோய் விடவும் வரவும் ஒரு காரும் வாங்கினான். இத்தனைக்கும் கண்ணம்மாவின் வருடக்கணக்காகக் கொடுபடாத சம்பளத்தைப் பற்றி எண்ணிப் பார்க்கவுமில்லை. ஆனால் வேலையாவின் மனைவி நளினி, ஒருநாள் கண்ணம்மாவின் சம்பளம் பற்றி நினைவூட்டி, இவ்வளவு பணம் ஆடம்பரமாகச் செலவழிக்கிறீர்களே! என்றாவது ஒருநாள் கண்ணம்மாவின் சம்பளத்தைப் பற்றி நினைத்தீர்களா? ஐந்து வருடமாகிறது. சகோதரிகள் வந்தால் என்ன நினைப்பார்கள் என்று அவனை ஏசவும், சரி, சரி. இந்த முறை எல்லாம் கொடுத்து விடுகிறேன் என்று அவளைச் சமாளித்தனுப்பினான்.

அன்றொருநாள் ரவுணுக்குப்போன வேலையா வீட்டுக்கு வந்ததும், கோவில் மண்டபத்தில் பகல் இரண்டு மணி போல் சற்று ஓய்வடைந்து உட்கார்ந்திருந்த கண்ணம்மாவைக் கூப்பிட்டான். அவசரமாக எழும்பிய கண்ணம்மாவிடம், "நான் வெகுகாலமாக உனக்குச் சம்பளம் தரவில்லை. கோபிக்காதே. உன் சம்பளத்தைக் கணக்கிட்டபின் இதை உனக்கு வாங்கினேன். நளினியம்மாதான் உன் காதைப் பார்த்துவிட்டு சம்பளப் பணத்தில் அவளுக்கு ஒரு தோடாவது வாங்கிக் கொடுங்கள் என்றா. இந்தா" என்று சிறுபெட்டியைத் திறந்து காட்டியபடி அவளிடம் கொடுத்தான். கண்ணம்மாவுக்கு அதைப் பார்த்ததும் நம்பவே முடியவில்லை. மின்னல் போல் அது ஒளிவீசியது. வேலையாவை கும்பிட்டபடி அடக்கமாக வாங்கினாள். வரப் போகும் வருஷ திருவிழாவுக்குப் போடக்கிடைத்து விட்டதே என்ற சந்தோஷம் கண்ணம்மாவுக்கு உள்மனதில் துளிர்விட்டது.

அந்தக் கோவிலில் ஒருவாரம் கழித்து வருஷ விழா தொடங்கியது. பல தேயிலைத் தோட்டங்களிலிருந்து மக்கள் தங்கள் குடும்பத்துடன் வந்து குவியத் தொடங்கினர். கடைகள் பல நிரம்பி ரோட்டையும் கோவில் வீதிகளையும் அடைத்துக் கொண்டன. கண்ணம்மாவின் இரு தங்கைகளும் விழாவிற்கு வந்தார்கள். கண்ணம்மாவுக்கு இதுவரை பட்ட கஷ்டங்கள் - துயரங்கள் அவர்களைக் கண்டதும் மறைந்தது. சகோதர பாசம் பொல்லாததல்லவா? அவள் காதில் மின்னிய தோட்டைப் பார்த்து அசந்து போனார்கள். அவள் எப்படியோ நல்லாயிருக்கிறாள் என்று திருப்தியடைந்தார்கள். இரண்டு நாள் தங்கி நின்ற அவர்களை விழா முடிந்ததும் கவலையோடு வழியனுப்பிவைத்தாள்.

இதுவரை பொறுமைகாத்த கடை முதலாளியொருவர் விழா முடிந்ததும் ஒரு நாள் காலை தன் சிப்பந்தியையனுப்பாமல் தானே வேலையா இருக்கும் நேரம் பார்த்து வந்துவிட்டார். பலமுறை தான் வீட்டிலிருந்தும் தான் வெளியே போய்விட்டதாக மனைவியிடமும் பிள்ளைகளிடம் கூறும்படி சொல்லி மறைந்திருந்ததால் கோயிலில் பூசை நடக்கும் போதே வந்துவிட்டார். பூசை முடியும்வரை காத்திருந்த முதலாளி, அதன்பிறகு பலர்முன் பலவாறாகப் பேசிக் கோபத்துடன் "இன்று மாலைக்குள் என் பணம் முழுவதும் என் கைக்கு வந்துவிடவேண்டும்; தவறினால் உன் மரியாதை போய்விடும். அதற்கான நடவடிக்கையும் எடுப்பேன். பிறகு நடப்பதற்கு வருத்தப்படக் கூடாது" என்று கூறிவிட்டு வெளியேறினார். பலர் முன் அவர் பேசியதால் வேலையா குறுகிப் போனான். அவன் மனைவி திகைத்துப் போய் நின்றாள்.

அன்று மதிய வேலைகளை முடித்துவிட்டுச் சாப்பிட்டபின் கண்ணம்மா பகல் இரண்டு மணி போல் வழமையாக அந்தக் கோவில்மண்டபத்தின் சுவரில் சாய்ந்தபடி சற்று ஓய்வெடுத்துக் கொண்டிருந்தாள். அப்போது கண்ணம்மா என்ற குரல் கேட்டுத் திரும்பினாள். வேலையாதான் கூப்பிட்டான். புடைவையைச் சரிசெய்தபடி அவசரமாக அவள் எழும்பி வேலையாவைச் சமீபித்தாள். ஒருநாளாவது இந்த நேரத்தில் அவன் அந்த இடத்திற்கு வருவதில்லை. அதனால் அவள் குழப்பமடைந்து கொண்டிருந்தபோது "கண்ணம்மா ஒரு முக்கிய விசயமாக உன்னிடம் பேச வந்தேன். யோசிக்காதே. காலையில் ஒரு முதலாளி பணவிஷயமாகப் பலர் முன்பாக கோவிலில் என்னைக் கேவலமாகப் பேசினாரல்லவா? அவருக்கு இன்று மாலைக்குள் பணம் கொடுத்தாக வேண்டும். நான் இப்போ பண நெருக்கடியில் இருக்கிறேன். இன்று அந்த முதலாளி வந்து விடுவார். அவருக்குப் பணம் நான் கொடாவிடில் அவமானத்தால் நஞ்சு குடித்துத்தான் சாகவேண்டும். வேறு வழி தெரியவில்லை. அதனால் நான் உனக்கு வாங்கித்தந்த அந்தத் தோடுகளை இப்போதைக்கு எனக்குத் தா. இந்தப் பிரச்சினை முடிந்ததும் உனக்குத் தோடு கட்டாயம் வாங்கித் தருவேன்" என்று அழாக்குறையாகக் கெஞ்சினான். கண்ணம்மா இப்படி ஒரு சூழ்நிலையை எதிர்பார்க்கவில்லை. அவள் கண் முன்னே நளினியும் அவள் பிள்ளைகளும் தெரிந்தனர். செய்வதறியாமல் நின்று சற்று யோசித்த கண்ணம்மா "கொஞ்சம் இருங்கையா" என்றபடி தன் அறைக்குள் போய்ப் பெட்டியைத் திறந்து ஒளிவீசும் அந்த ஜோடித் தோடுகளைக் கொண்டுவந்து வேலையாவின் கைகளில் கொடுத்தாள். அதே சமயம் இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த வேலையாவின் மனைவி நளினி ஆச்சரியமும் திகைப்பும் அடைந்தாள். அவள் கண்களில் வேலைக்கார கண்ணம்மா கணவனின் மானம்காத்த தெய்வமாயும், இதுவரை தெய்வமாகத் தெரிந்த கணவன் வேலையா ஒரு ஏமாற்றிப்பறிக்கும் திருடனின் கோலத்திலும் தெரிந்தனர்.

# காகித ஓடம்

**அன்று** காலைப் பொழுதினிலே மரங்களின் இலை, செடி, கொடிகளில் புகைமண்டலம் போல் பனித் துளியானது மூடியிருந்தது. மெல்லிய இதமான காற்றுடன் குளிரானது உடலை சில்லிடவைத்தது. கல்யாணியின் விண்மீன் போன்ற கண்ணின் இமைகளில் பனித் துளியானது தங்கியிருந்து இமைமூடித் திறக்கும்போது மழைத்துளிபோல் சிதறியது...! அவள் ஏதோ பரபரப்புடன் மும்முரமாக தேடிக் கொண்டு இருந்தாள்...! அம்மா, அம்மா... "என்னடி ஆச்சு உனக்கு காலங் காத்தால இப்படி கத்திக்கிட்டு இருக்கா" "அது இல்லம்மா, இங்க வைத்த பேப்பர் எங்க..? பென் மட்டும்தான் இருக்கின்றது." அப்படியா...? உனக்கு என்ன வேலை...! எப்போ பார்த்தாலும் எழுத்துத்தானா? "ஒழுங்காக குடும்பப் பெண்ணா எப்போ இருக்கப் போகிறாய். வார மாதம் கல்யாணம் என்பதை மறந்துவிட்டயா?" "ஐயோ இனிமேல் விடிஞ்சு போச்சு, அம்மா புராணத்தை கேட்டுக் கேட்டு காது புளித்துப் போச்சு" எப்படி இவகிட்ட இருந்து தப்பிப் போறது என்று காத்திருந்தாள். அம்மா அதோபார் தேநீர் கோப்பை என்று சொல்லிவிட்டு மாறிவிட்டாள் கல்யாணி. 'சரிடீ' உனக்கு என்ன தெரியும்? அவரைப் பார்த்தால்தான் எனக்கு ஒரே கவலை. கல்யாணத்துக்கு ஒரு லெட்சம் கிட்ட வேணுமாம் "மனுசன் பைத்தியம் பிடித்தமாதிரி திரிகிறார். சீதனம் கொடுக்கா விட்டாலும், கல் யாணத்துக்கு காசு வேணுமே...? நீ இன்னும் சின்ன பிள்ளை மாதிரி ஆடித்திரிகிறாய்" என்று கூறிக்கொண்டு காலியாகிக் கிடந்த தேநீர் கோப்பையை எடுத்துக் கொண்டு குசினிப்பக்கம் சென்றாள் மரகதம். கல்யாணி கனவு காண ஆரம்பித்துவிட்டாள். நான் சிவாவை கல்யாணம் பண்ணிக்கப் போறனா! என்னாலயே நம்ப முடியல்லயே. சிவா கூட இன்றைக்கோ நேற்றைக்கோ வந்த காதல் இல்லை. எனக்கு நினைவு தெரிந்ததில் இருந்து எனக்கு அவன்தான்...! என்று என் மனதில் கோட்டை ஒன்று கட்டி வைத்திருக்கிறேன். சிறுவயதில் அவன்கூட விளையாடிய அம்மா, அப்பா விளையாட்டு, பாசிக்குடா கடற்கரைமுனை முருகன் கோவில் இப்படி பழைய நினைவுகளை எண்ணிப் பார்த்து தன் மனதில் ஒரு பட்டாம் பூச்சி சிறகு விரித்து பறப்பது போல் இருந்தது. அப்போது இடையில் கனவு கலைந்ததுபோல் "கல்யாணி...! கல்யாணி...!" என்று அப்பாவின் குரல். "என்னப்பா" என்றாள் கல்யாணி. "அம்மா எங்கம்மா...?" "உள்ளதான் இருக்காங்க" என்று கூறிக்கொண்டு எழுந்து வெளியே சென்றாள். ஐயோ காலையில அம்மாவால ப்ரண்டுக்கு லெட்டர் கூட எழுதவில்லை. அதை விடு பிறகு எழுதிக்கலாம். இப்போ சிவா எங்க இருப்பான். வீட்டஇருப்பானா? இல்ல வேலைக்குப் போய் இருப்பானா...? சரி எதுக்கும் வீட்ட போய்ப் பார்ப்போமே. அத்தை கூட கொஞ்ச நேரம் அரட்டை அடிக்கலாம் என்று கூறிக்கொண்டு "ஐயே" என்று தன் தலையில் தட்டியவாறு அம்மா கிட்ட சொல்ல மறந்துவிட்டேனே.? அம்மா நான் அத்தை வீட்டுக்குப் போயிட்டு வர்றேன்...! என்று சொல்லியவாறே சென்றாள் கல்யாணி. அங்கு போனதும் சிவா அங்கு இல்லை. "ச்சே" சிவா எங்க போயிருப்பான்? "அத்த சிவா எங்க?" என்றாள் கல்யாணி. "வேலைக்குப் போய்விட்டான். வர நேரம் ஆகும்" என்றாள். ச்சே நான் வர்ற நேரம் பார்த்து சிவாகூட வீட்டில் இல்லை. "சரி அத்த அப்போ நான் போயிட்டு வர்றேன்" என்றாள். என்னம்மா வந்தவுடனே பறக்கிற "இல்ல அத்த நான் பிறகு வர்றேனே..?" என்று சொல்லிக் கொண்டு சிட்டுக் குருவி போல் பறந்து சென்றாள் கல்யாணி. அப்போது அவளது வீட்டில் ஒரு ஆச்சரியம் காத்திருந்தது. அவள் ப்ரண்டு மூவரும் வீட்டுக்கு வந்திருந்தார்கள். "என்னடி கல்யாணி," உனக்கு கல்யாணமாமே? எங்கிட்ட ஒரு வார்த்தை கூட சொல்லல்லயே... அது ஒண்ணுமில்ல, நான் லெட்டர் எழுதத்தான் இருந்தேன் அதற்கிடையில் நீங்களே வந்திட்டீங்களே! நான் என்ன செய்வது? "யாரு உன் சிவாதானே" "திடீரென்று எப்படி கண்டு பிடிச்சீங்க".



-ரு. அனிதா, கல்குடா.

அதான் உன் முகத்தைப் பார்த்தா தெரியாதா, சந்தோஷம் வழிந்தோடுகிறதே. "படிக்கும் போது சிவா, சிவா என்று ஒவ்வொருநாளும் அவனைப் பற்றிய பேச்சுத்தான். இனிமேல்தான் ஓயும்". "போங்கடி" புன்முறுவலுடன் தலை குனிந்தாள். அட வெட்கம்..! என்றனர். "இனிமேல் உனக்கு என்ன", உங்க அப்பாதான் முரண்டுபிடித்தார். இப்போ அவரே சம்மதம் தெரிவித்து விட்டார். ஆசைப்பட்டவன் அவ்வளவு சீக்கிரம் கிடைக்க மாட்டான். அந்தவகையில் நீ அதிஷ்டக்காரி என்றார்கள். "அது இல்ல கல்யாணத்துக்கு பின்னாடி கடல் தொழில்தானா" "அது எல்லாம் கிடையாது. கல்யாணத்திற்குப் பின்னாடி கடலுக்கெல்லாம் போக முடியாது. இப்போ கூட என்ன? மாமாவுக்கு உதவி இல்லையே என்றுதான் பார்த்திட்டு சும்மா இருக்கிறேன். கல்யாணம் மட்டும் ஆகட்டும் பிறகு பாருங்களேன்" என்றாள் கல்யாணி. "சரியான ஆளுடி.. அவனை காதலிக்கும்போது அப்படி அவனைப் பற்றி பரிந்து பேசுவா. இப்ப என்ன கல்யாணம் ஆகப்போகுது என்றவுடனே மிரட்டலா...?" "இது மிரட்டல் இல்லை. அன்புத் தொல்லை" என்றாள் கல்யாணி. இப்படியாக கல்யாணியுடனே அரட்டை அடித்து குதூகலித்து விட்டு நண்பிகள் பிரிந்து விட்டனர். தை மாதம் எப்போவரும் என்று காத்திருந்தாள் கல்யாணி. தைமாதம் தான் சிவா எனக்கு முழுமையாகக் கிடைக்கப் போகிறான் என்று நினைத்துச் சந்தோசப்பட்டாள்.

அன்று திருவாதிரை கடைசி நாள். பட்டியடிச் சேனைப் பதியினிலே பள்ளிகொண்டிருக்கும் பேப்பச்சோலை காளியம்மன் கோவிலுக்கு கல்யாணி சென்றிருந்தாள். அன்று ஞாயிற்றுக்கிழமையானபடியால் அவளுக்கு வீட்டில் பெரிதாக வேலையில்லை. அதனால்தான் கோயிலுக்கு வந்துவிட்டாள். தனது கல்யாணம் நிச்சயம் ஆனபடியினால் காளியம்மாளுக்கு பட்டுப்புடவையும் தாலியும் வாங்கித்தருவதாக நேர்த்திக் கடன் வைத்திருந்தாள். அதைக் கொடுப்பதற்காகத்தான் கோயிலுக்கு வந்திருந்தாள் கல்யாணி. அப்போ ஏதோ பரபரப்பு. சனமெல்லாம் வீதிவழியே அல்லோலப்பட்டுக் கொண்டு ஓடுகின்றனர். கல்யாணி "என்ன? என்ன?" என்று கேட்டாள். கடல் வருகிறதாம் என்று கூறிக்கொண்டு தலையில்அடித்துக் கொண்டு அம்மா, என்ட பிள்ளை, என்புருசன் இப்படியாக கத்திக் கொண்டு ஓடுகின்றனர். கல்யாணி ஒரே ஓட்டமாக வீட்டுக்கு வந்தாள் வரும் வழியிலே அம்மா, அப்பா, அத்த, மாமா எல்லோரும் இருந்தனர். கல்யாணி சிவாவைத் தேடினாள். சிவா எங்கம்மா என்று தாயிடம் கேட்டாள். தாய் திகைத்து விட்டாள். எதுவுமே சொல்லவில்லை. தன் அத்தையிடம் சிவா எங்கத்த..? என்று கேட்டாள் கல்யாணி.. அத்த ஓ வென்று அழுதுகொண்டு கல்யாணியை கட்டி யணைத்து "மாமாவோட கடலுக்குப் போன சிவா, மாமா வீட்டுக்கு நேரத்தோட வந்துவிட்டார் சிவாவை காணோம் கல்யாணி" என்று கதறி அழுதாள். சிவாவை தேடிப்போக.. பொலிஸார் விட முடியாது என்று சொல்லிவிட்டார்கள் "என்னம்மா என் சிவா இல்லையா..?" என்று கேட்டபடி. கல்யாணி இடி விழுந்ததைப் போல் உட்கார்ந்து கொண்டிருந்தாள்.

பெப்ரவரி 14 - 2006 பாசிக்குடா கடற்கரையில் சர்வதேச காதலர் தினத்தை நினைவு கூர்ந்து ஏராளமான ஜோடிகள் திரண்டு தமது நட்பினை உறுதி செய்தவண்ணமிருந்தனர். ஒரேயொரு ஜீவன் மட்டும் "கடலம்மா என் சிவாவைத் திருப்பித்தா" என்று கண்களில் நீர் தாரையாக வழிந்தோட பித்துப்பிடித்தது போல கடலைப்பார்த்தபடி அமர்ந்திருந்தது... அது கல்யாணியேதான்.

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்

## சிந்தித்துப் பார்க்க...

## குறள் சொல்லும் வாழ்க்கைத் தத்துவம்

மனிதப்பிறவி எடுத்தவர்கள் எல்லோரும் மனிதத்தின் உயர்ந்த பண்புகளை அறிந்து கொண்டு இறுதிவரை வாழ்ந்து மடிகிறார்களா? என்பது இறுதிவரை கேள்விக்குறிதான். இருந்தபோதிலும் இதற்குப் புறம்பான அறிவிற் குறைந்தனவாகிய பறவைகளிடமிருந்தாவது மனிதன் கற்றுக் கொள்ள வேண்டியதையாவது கற்றுக் கொள்கிறானா என்றால் அதுவும் குறைபாடாகவேயுள்ளது. உதாரணத்துக்குக் காக்கையிடமிருந்து பகுந் துண்ணும் பண்பையாவது மனிதன் கற்றுக் கொள்ளலாமே!

*"பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை*
*வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்"*

பழிக்கு அஞ்சி நடக்கும் பண்பானதும், பகுந்துண்ணும் பரோபகார சிந்தனையும் உள்ளவனின் வாழ்க்கை இடையிலேயே முறிந்து போகாது முழுமை பெறும் என்பதில் எவ்வித ஐயமும் வேண்டியதில்லை.

## கலங்காதே தோழி

**தருவது கற்பகன்**

"**என்ன** காரியம் செய்யத்துணிந்தாய் செண் பகவல்லி. உனக்கென்ன பயித்தியமா பிடித்து விட்டது?" என்ற கேள்வியோடு செண்பக வல்லியின் கையைப் பற்றி இழுத்தவாறு அதட்டினாள் பூங்கொடி. அவள் சொல்வதைக் காதில் வாங்கிக் கொள்ளாத செண்பகவல்லி, திமிறிக் கொண்டே "போதும், இதுவரை நான்பட்ட துன்பம். இனியும் நான் அவரை நம்பியிருந்து, அணுவணுவாகச் சாவதைவிட ஒரே முறையில் உயிரை விட்டுவிட்டால்,



நான்படும் துன்பங்களுக்கெல்லாம் ஒரு முடிவு கிடைத்துவிடும். என்னைத் தடுக்காதே பூங்கொடி" என்று மூச்சிரைக்கப் பேசி முடித்தாள் செண்பகவல்லி.

இதைக் கேட்டதும் அதிர்ந்து போனாள் பூங்கொடி. என்ன இப்படிச் சொல்கிறாளே, இந்தச் செண்பகவல்லி! இவளும் நானும் இள வயதிலிருந்தே தோழிகளாயிருந்த காலம் விளை யாட்டுப் பருவம். அன்றெல்லாம் நாங்கள் இருவரும் அடிக்கடி சின்னஞ் சிறிய விடயத்தில் எல்லாம் சண்டைபிடித்துக் கொண்டு, மாதக் கணக்கில் ஆளுக்காள் பேசாமலிருந்து, ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் நேசமாகிவிடுவோம். பருவ மடைந்த காலந்தொட்டு எனக்கும் அவளுக்கும் உள்ள தோழமையோ பாசமும், பற்றும் நிறைந்ததொரு உயிர்ப் பிணைப்பாகியிருந்தது. அவளுக்குத் தலையிடியென்றால், எனக்கு தலையிடிக்கும். அவள் நிலையும் அப்படிப்பட்டது தான்.

நிலாக் காலங்களில் நள்ளிரவுவரைகூட தங்கள் எதிர்காலம் பற்றித் திட்டமிடுவதிலும், ஒருவரை ஒருவர் கேலி செய்து மகிழ்வதிலும் இன்பமடைந்த நாட்கள்தான் எத்தனை.

செண்பகவல்லியும், பூங்கொடியும் ஆற்றில் நீராடச் சென்றிருந்தவேளை 'பூங்கொடிக்கு' நன் றாகவே நீச்சல் தெரிந்திருந்தும் வேகமாகப் பாய்ந்த ஆற்று நீரில் அடித்துச் செல்லப்பட்டாள். அதைக்கண்ட செண்பகவல்லி பதைபதைத்துப் போய், சில நிமிடங்கள் நின்றுவிட்டாள். இருந்தும் நிலைமை மோசமாகுமுன் செயற்பட எண்ணிய வள் ஆற்றின் கீழ்க்கரையை நோக்கி ஓடினாள் பூங்கொடி தான் நின்று கொண்டிருக்கும் பக்கமே வருவதைக் கண்டபோதும் அவளை நெருங்கு மளவு தூரத்திலிருக்க வில்லை என்பதால், அவளைக் காப்பாற்றவேண்டுமாயின் எதையாவது அவள் கையில் கொடுத்தாகவேண்டும், அதனு தவியுடன் மெள்ளக் கரைக்கு இழுத்துவிடலாம். எதைக் கொடுப்பது? என்று யோசிக்குமளவுக்கு நேரம்போதாத நிலையில் தான் மார்புகளுக்கு மேல் கட்டியிருந்த சேலையை அவிழ்த்து, சேலையின் ஒரு தொங்கலைப் பிடித்துக் கொண்டு மறு தொங்கலை பூங்கொடிக்கு வீசியெறிந்தாள். தண்ணீரில் தத்தளித்துக் கொண்டிருந்த பூங் கொடிக்கு களைப்பு மேலிட்ட போதிலும் செண்பக வல்லி எறிந்த சேலையைப் பற்றத் தவறவில்லை. பெரும் போராட்டத்துக்குப்பின் பூங்கொடியை கரைக்கு இழுத்து எடுத்து, அவள் கையைப் பற்றிக் கரை சேர்த்த செண்பகவல்லி தன்னை அறியாமலேயே அவளைப் பற்றியவாறு மணற்பரப்பில் சாய்ந்தாள்.

நீரினால் அடித்துச் செல்லப்பட்ட பூங் கொடிக்கு ஏற்பட்ட களைப்பைவிட அவளை காப் பாற்ற செண்பகவல்லி எடுத்த முயற்சி அதிக மில்லாவிட்டாலும் மனதளவில் பயத்தினால் ஏற்பட்ட சோர்வு அவளை அறியாமலே மயக்க நிலையில் ஆழ்த்தியதும் பூங்கொடியே முதலில் கண்விழித்தாள். குளிர்ந்த நீரில் விறைத்துப் போயிருந்த உடலில், ஒரு கதகதப்பான ஸ்பரிசம் தழுவிக்கொண்டிருந்தது அவளைத் திடுக்கிட வைத்தது. சற்று விலகியவள், பக்கத்தில் செண்பகவல்லியின் பொற்சிலை போன்ற உடல்தான் தனக்கு அந்த இதமான சுகத்தைத் தந்தது என்பதைப் புரிந்து கொண்டாள் பூங்கொடி இப்படியும் ஒரு கட்டுடல் உள்ள பெண்ணிருக் கிறாளா? என்று அவள் மனதுக்குள்ளேயே கேட்டுக்கொண்டவளுக்குப் பொறாமை ஒருபக்கம் ஏற்பட்டாலும், அவளுக்காக தன் மானத்தை மறைக்கின்ற சேலையைக் களைந்து தன் உயிரைக் காப்பாற்றிய அந்த உத்தமியை - உயர்ந்தவளைப் பிறந்த மேனியோடு பார்த்தபோது அவள் உள்ளமே பூரித்துப்போனாள். எங்கோ கனவுலகத்திலிருந்து விடுபட்டவள்போல் செண்பகவல்லியின் மேனியை வியப்போடு பார்த்தாள். இதற்கு முன்பெல்லாம் செண்பகவல்லி நீராடும் போதும், ஆடை மாற்றும் போது ஓர்சில கணப்பொழுதில் மேகத்தில் முகிற் கூட்டங்களுக் கிடையில் தோன்றி மறையும் வெள்ளி நிலவைப்போல மின்னி மறைகின்ற அவள் மேனி யின் சில பகுதிகளைத்தான் அவள் கண்டிருக் கிறாள். இன்றோ அவளை முழுமையாகப் பார்த்த போதுதான் அவள் மனதில் எழுந்த உணர்வு ஆசையா, அல்லது அற்புதக் காட்சியைக் கண்டதொரு ஆனந்தமா என்று அவளால் கூட முடிவெடுக்க முடியாததொரு சூழ்நிலையில், என்றுமே இல்லாத வகையில் அன்பொழுக அவளின் கன்னத்தை வருடியவாறு "எழுந்திரு செண்பகவல்லி!" என மெள்ளக் குரல் கொடுத்தாள். குரல் கேட்டதும் நித்திரை விட்டெ ழுந்தது போல் மெல்ல கண்விழித்த செண்பகவல்லி, துணுக்குற்று எழுந்தாள்; சுற்றும் முற்றும் பார்த்து விழித்தாள். அவள் வெட்கத்தால் துடித்துப் போவாள் என்று எண்ணியிருந்தாள் பூங்கொடி. ஆனால் செண்பகவல்லி விழித்துக் கொண்டதும், "கரையேறி விட்டாயா பூங்கொடி" என்றதும் பூங்கொடியின் கண்களில் தெரிந்த பூரிப்புக்கு அளவேயில்லை. தன் கையிலிருந்த செண்பகவல்லியின் சேலையைக் கண்ணிமைக்கும் நேரத்தில் அவளின் இடையில் சுற்றியபோதுதான் தன் நிலையை உணர்ந்த செண்பகவல்லி, தன் மார்பகங் களுக்கு மேல் தன் இரு கைகளாலும் மறைத் துக் கொண்டாள். அவளை அறியாமலே வெட்கம் அவளை ஆட்கொண்டது. இதை யெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த பூங்கொடி, செண்பகவல்லியின் தியாக உணர்வைப் பாராட்ட வகை தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தாள். செண்பகவல்லி அவசர அவசரமாக தன் சேலையை சுற்றிக்கொண்டு ஆற்றில் இறங்கினாள்.

"செண்பகவல்லி! என்னடி பிரமன் உலகத்திலுள்ள பெண்களுக்கெல்லாம் அழகை அளவாகக் கொடுத்துவிட்டு, எஞ்சியதையெல்லாம் சேர்த்து உன்னைப் படைத்துவிட்டான் போலிருக்கிறதே! உன்னை அந்தக் கோலத்தில் பார்த்தபோது எனக்கே உன்னை"!!! என்றவளை இடைமறித்து, "போதும், நீ பெரிய மோசக்காரி. திருட்டுத் தனமாக என்னை ரசித்தாயாக்கும்" என்றவள் கண்ணைச் சிமிட்டினாள். இதைக்கேட்டதும் "அப்பப்பா! என்ன வனப்பு" எத்தனை மென்மை எனக்கே இப்படியென்றால், ஒரு ஆண்மகன் உன்னைக் கண்டால், என்ன நடக்குமோ நினைத்துப் பார்க்கவே தலை சுற்றுகிறது என்றாள் பூங்கொடி.

"சும்மா புலம்பாதேடி. எந்த மன்மதனையும் செண்பகவல்லி திரும்பியும் பார்க்கமாட்டாள். சுயநலக்காரர்கள். அவர்களின் வாடை பட்டாலே, அது விசக் காற்றாகத் தானிருக்கும். என்றவள் "ஆண்களைப் பற்றி பேசிக் கொண்டி ருக்கிறாயே" உனக்கு வேலை இல்லை, என்றபடி, ஆற்றிலிருந்து வெளியேறினாள்.

அன்று இப்படிப் பேசிய செண்பகவல்லியா இவள் என்று நினைக்கும்போது பூங்கொடிக்கு ஆச்சரியமாகவும், அவள் மேல் அனுதாபமாக வுமிருந்தது. "செண்பகவல்லி! காதலென்பது கண்களில் தேன்றுவதல்ல; இதயத்திலிருந்து எழுவது. அதை முழுமையாக வர்ணிப்பது கவிஞர்களாலும் முடியாத காரியம். அதில் பிரிவும் ஊடலும் இயற்கைதான் என்பதற்கு நிலவைக் கண்டு மலரும் அல்லி அமாவாசை யில் கூம்புவதில்லை. மழையாக நிலத்தில் விழும் நீர்த்திவலைகள் மீண்டும் முகிலை சேர்வதை நீ கவனிக்கவில்லையா? நிச்சயம்! அதுபோல் உன்தலைவன் இன்று பிரிந்தாலும் நிச்சயம் உன்னைத் தேடி வருவார். உறுதியாயிரு என்று முடித்தாள் பூங்கொடி.

*"அரிதாள்ளி அல்லல்நோய் நீங்கிப் பிறவாற்றிப் பின்னிருந்து வாழ்பவர் பலர்"*

## சிந்தியா பதில்கள்

✉ **அதிகாரப் பரவலாக்கலா, அதிகாரப் பகிர்வா இலங்கையினுடைய இனப் பிரச்சினையைத் தீர்க்கத் தேவை யென்று நினைக்கிறீர்கள்?**

-பொன்னம்பலம், நாவிதன்வெளி.

அதிகாரம் உயர்ந்த பட்சமாகப் பகிரப் பட வேண்டும். பரவலாக்கம் என்பது வெறும் பூச்சாண்டி வார்த்தையாகும்.

✉ **புதுக்குடியிருப்புப் பிரதேச சபை போட்டியில்லாமலே ஈ.பி.டி.பி.யினரின் வசம் போயுள்ளதே, இதை புலிகள் எப்படி ஏற்றுக்கொள்வார்கள்?**

-மா.கிஷோக்குமார், செட்டிகுளம்.

இலங்கை அரசாங்கம் ஏற்றுக் கொண்டு தானே உறுப்பினர்களை நியமிக்குமாறு அறிவித்துள்ளது. இதற்குப் பிறகாவது பெயருக்கு ஏற்றாற்போல் புதுக்குடியிருப்பு இருக்கிறதா பார்ப்போம்.

✉ **ஜெனீவா பேச்சுக்களில் விட்டுக் கொடுப்புக்கே இடமில்லை என்று தமிழ்ச் செல்வன் தெரிவித்துவிட்டுத் தானே பேச்சு மேசைக்குப் போயுள்ளார்?**

-காளிமுத்து, பஞ்சிகாவத்தை.

இதய சுத்தியோடு போகவில்லை என் பதை இதை விடவும் சூசகமாகச் சொல் வார் என்று நீங்கள் எதிர்பார்ப்பது வீண் நேர விரயம்தான்.

✉ **பங்களாதேஷ் அணிக்கு முதல் போட்டியிலேயே இலங்கை அணி வழங் கிய அதிரடி அடி எப்படி?**

-ப.நிசாந்தன், கொட்டாஞ்சேனை.

நான் படிக்கின்ற காலத்தில் எங்களது கணக்கு வாத்தியார் எங்களுக்கு அடி அடியென்று அடிப்பார். அதுபற்றி இந்நாளில் எனது நண்பர்களான வாத்தி யார்களிடம் கேட்டபோதுதான் ஒரு உண்மை தெரிந்தது. அதாவது, எங்களது வாத்திமார் அவர்கள் மாணவர்களாக இருந்தபோது, அவர்களது வாத்திமார் அடி பின்னி யெடுத்தார்களாம். அப்படி வாங்கியதை திருப்பிக் கொடுக்கத்தான் எங்களைப் போட்டுப் பின்னி எடுப்பார் களாம். சில சமயங்களில் எனது நண்பர் களும் அப்படி நடந்தது உண்டாமென்று சிரிப்பார்கள். யாரிடமோ வாங்கிய அடியை மாணவர்களிடம் திருப்பிக் கொடுப்பது சரியில்லை என்று தான் உணர்ந்து விட்டதாக எனது வாத்தி நண்பன் சொல்லுகிறான். நான் வீ.பி. கிண்ணக் கதையைச் சொல்வதாக தப்பாக நினைத்து விடாதீர்கள்.

✉ **அஜித்தை தொற்றியிருந்த அட்ட மத்துச்சனி இப்போது நீங்கி விட்டது போல் இருக்கிறதே?**

-சிஹ்னாஸ், ஹுஸைனியாபுரம்.

அப்படித்தான் தெரிகிறது. அதனால் தான் பரமசிவன், கோட் பாதர், கடவுள் என்று அடுத்தடுத்து சாமிப் பெயர்களிலே நடித்து வருகிறாராக்கும். அப்படியே மற்ற மற்ற நடிகர்களுக்கு என்னென்ன சனி பிடித்துள்ளது என்று கூறிவிடுங்களேன்.

✉ **ஈரான் விவகாரம் இன்னொரு ஈராக் விவகாரமா?**

-எம்.எச்.தௌபீக், குறிஞ்சாக்கேணி.


ஆடின காலும், பாடின வாயும் சும்மா இருக்காது என்பார்கள். அமெரிக்கா வுக்கும் அப்படித்தான்.

✉ **அண்மையில் மொரட்டுவ பகுதியில் எனது பறங்கிய நண்பர் ஒருவரின் வீட்டிற்குச் சென்றிருந்தேன். என்ன ஆச்சரியம்! வீட்டில் சிறு பிள் ளைகள் கூட ஆங்கிலம் பேசுகின் றார்களே?**

-அ.சீலன், வெள்ளவத்தை.

இதென்ன ஆச்சரியம்? நான் லண்டன் சென்றிருந்தபோது அங்கு பிச்சைக் காரர்கள் கூட இங்கிலீஸ் பேசுவதைப் பார்த்திருக்கிறேன்.

✉ **கொழும்பில் ஒரு காணித் துண்டைக்கூட விட்டுவைக்காமல் அடுக்கு மாடி எழுப்புகின்றார்களே, எதிர்வரும்**



**சந்ததி எங்கே வசிப்பது?**

-ஆர்.ராதிகா, கலஹா.

சிங்கப்பூர், ஜப்பான், டுபாய் நாடுகள் ஏற்கனவே கடலினுள் குடியிருப்புக்கள், ஹோட்டல்கள் கட்டிவிட்டார்கள். போகிற போக்கில் இங்கும் அப்படி நடந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

✉ **மட்டக்களப்பு இடியப்பம் சொதி, யாழ்ப்பாணம் குழல்புட்டு வெந்தயக் குழம்பு கொழும்பு பிறைட் றைஸ். சிந்தியாவின் பேவரிட் எது?**

-எஸ்.சித்திரா, பாண்டிருப்பு.

அம்மாவின் கைப் பக்குவம்.

✉ **நாட்டின் ஏனைய பகுதிகளில் விற்கும் அதே கட்டுப் பாட்டு விலையில் யாழ்ப் பாணத்திலும் பொருட்களை வாங்கும் நிலை எப்போது வரும்?**

-ஜேந்தினி, புலோலி.

நீங்கள் புகையிரதத்தில் யாழ். சென்று இறங்கும் போது.

✉ **சீட்டாட்டம் - கரம் (போட்) ஆடுதல் ஒப்பிடுக?**

-தினேஷ், திருகோணமலை.

இரண்டுமே வீட்டிற்குள் - அறைக்குள் விளையாடக் கூடியவைதான். கரம் - நீங்கள் விளையாடு வீர்கள்; சீட்டாட்டம் - உங்களை விளையாடும்.

✉ **உலகின் அதிபாரக் குத்துச் சண்டை சாம்பியன் முகமது அலியை அண்மையில் ஊடகங்களில் காட்டினார் களே! அது என்ன புது நோய் பார்சிசன்ஸ்?**

-பர்சானா இஸ்மைல், மருதமுனை.

அது புது நோய் அல்ல. வெகு காலமாகவே இருந்து வருகின்றது. பாப்பரசர் ஜோன் போல் II கூட அந்நோ யினால் தான் இறந்தார். உடல் இயக்கம் சீராக இருக்க மூளை செயலிழக்கும் நோயே அது. நீங்கள் பேசுவது, கேட்பது எல்லாம் நோயாளிக்குத் தெரியும். ஆனால் பிரதிபலிப்பைக் காட்ட முடியாது.

✉ **ஒரு படியாக நுரைச்சோலை பிரச்சினை தீர்ந்து விட்டது. மகிழ்ச்சிதானே?**

-நிஷாந்தி, கற்பிட்டி.

லக்ஷபான, கொத்மலை, விக்டோறியா அணைகள் கட்டப்பட்டபோது கூட பாரிய எதிர்ப்புக்கள் கிளம்பின. பல்லாயிரக் கணக்கான குடும்பங்கள் இடம் பெயர்ந்தன. ஆனால் நுரைச்சோலையில் இடம்பெயரவிருப்பது 80 குடும்பங்கள் மட்டுமே என்பது ஆறுதல். எதிர்ப்புக் களெல்லாம் வெறும் அரசியலுக்குத் தானாக்கும்.

✉ **கொழும்பில் இருந்து வெளி யாகும் ஆங்கிலப் பத்திரிகை விளம்பரம் ஒன்றில் துப்பாக்கிகள் (றைபிள்) விற்பனை செய்யப்படுவதாக கடையின் பெயருடன் போடப்பட்டுள்ளதே! உண்மையா?**

-பிரணவன், யாழ்ப்பாணம்.

உண்மைதான். ஆனால் நீங்கள் பாதுகாப்பு அமைச்சிடம் பெற்ற அனுமதிப் பத்திரத்தை காட்டித்தான் துப்பாக்கி வாங்க முடியும்.

✉ **யானை விலை, குதிரை விலை என்கிறார்களே? உண்மையில் குதிரை, யானையின் விலை என்ன?**

-தேன்மொழி, ஹட்டன்.

கார்கள் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன் உபயோகப்படுத்தப்பட்ட சொற் றொடர் நீங்கள் கூறியது. இப்போது எல்லாம் பென்ஸ், வொல்வோ விலை தான்.

# ஸ்போர்ட்ஸ்

ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ்

## ரிக்கி பொண்டிங் தொடர்ந்தும் முன்னிலையில்




**எப்பொழுதும்** கிரிக்கெட் உலகில் முதலாம் இடத்தில் இருக்க விரும்பும் அவுஸ்திரேலியா அணியின் நிலை இன்று இந்தியர்களினால் இல்லாமல் போய்விடுமோ என்ற கேள்வி தற்போது எழுந்துள்ளது. இந்திய அணி வீரர்கள் தற்போது கிரிக்கெட் போட்டிகளில் காட்டி வரும் ஆர்வமும் தங்கள் திறமைகளை தங்களால் முடிந்த மட்டும் வெளிக் கொண்டு வரும் ஆற்றலும் தான் அவர்களின் வெற்றிக்கு காரணமாக அமைந்துள்ளது. இந்திய அணிக்கு நல்ல ஒரு தலைமைத்துவம் மற்றம் முறையான பயிற்றுவிப்பாளர்கள் அமைந்துள்ளதால் இந்தியர்கள் முன்னேறிவருகிறார்கள். ஆயினும் சர்வதேச தரவரிசையில் அவுஸ்திரேலிய அணியின் ரிக்கி பொண்டிங்கே தொடர்ந்தும் இதனது நிலையை முதலாம் இடத்திலேயே வைத்திருக்கிறார்.

| வீரர்கள் | அணி | புள்ளிகள் | கூடியளவு ஓட்டங்களைப் பெற்றுக் கொண்ட வருடம் |
|---|---|---|---|
| ரிக்கி பொண்டிங் | அவு. | 922 | சிட்னியில் 2006 தெ. ஆ. எதிரான போட்டிகளில் |
| ஜக் கலீஸ் | தெ.ஆ. | 888 | கேப் டவுனில் 2005 இங். எரிரான போட்டிகளில் |
| பிராயன் லாரா | மே.இ. | 874 | கேப் டவுனில் 2004 தெ.ஆ. எதிரான போட்டிகளில் |
| மத்யூஹைடன் | அவு. | 858 | பிரிஸ்பேர்னில் 2002 இங். எதிரான போட்டிகளில் |
| இன்ஸமாம் உல் ஹக் | பாக். | 856 | லாகூரில் 2005 இங். எதிரான போட்டிகளில் |
| ராகுல் ட்ராவிட் | இந். | 825 | கொல்கத்தாவில் 2005 பாக். எதிரான போட்டிகளில் |
| யூனுஸ் கான் | பாக். | 807 | இஸ்லாமாபாத்தில் 2006 இந். எதிரான போட்டிகளில் |
| மொஹமட் யூசுப் | பாக். | 793 | இஸ்லாமாபாத்தில் 2006 இந். எதிரான போட்டிகளில் |
| வீரேந்திர ஷேவாக் | இந். | 777 | கொல்கத்தாவில் 2004 தெ.ஆ. எதிரான போட்டிகளில் |
| மாகஸ் திரஸ்கோதிக் | நியூ. | 768 | முல்தானில் 2005 பாக். எதிரான போட்டிகளில் |

பாகிஸ்தான் அணிக்கு இடையிலான ஹட்ச் கிண்ண ஒரு நாள் போட்டித் தொடரை இந்திய அணி பாகிஸ்தான் மண்ணிலேயே வென்று வந்துள்ளமையால் இந்திய அணி சர்வதேச ICC தரவரிசையில் 5ஆம் இடத்திலிருந்து 4ஆம் இடத்திற்கு முன்னேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இப்படி இருக்கையில் ICC சர்வதேச கிரிக்கெட் தரவரிசை பட்டியலை அறிவித்துள்ளது.

**டெஸ்ட் தொடர்களில்**


1. அவுஸ்திரேலியா - 129
2. இங்கிலாந்து - 113
3. இந்தியா - 111
4. பாகிஸ்தான் - 108
5. நியூசிலாந்து - 100
6. தென்ஆபிரிக்கா - 99
7. இலங்கை - 96
8. மேற்கிந்திய தீவுகள் - 73
9. சிம்பாப்பே - 27
10. பங்களாதேஷ் - 5

என்று இடங்களைப் பிடித்துள்ளது. இதில் நம்முடைய அணி 7ஆவது இடத்தில் இருப்பது கவலைதான்.

**ஒருநாள் சர்வதேச போட்டிகளில்**

1. அவுஸ்திரேலியா - 135
2. தென்.ஆபிரிக்கா - 116
3. நியூசிலாந்து - 113
4. இந்தியா - 113
5. பாகிஸ்தான் - 112
6. இங்கிலாந்து - 108
7. இலங்கை - 108
8. மேற்கிந்திய தீவுகள் - 89
9. சிம்பாப்பே - 44
10. பங்களாதேஷ் - 14

என்றுள்ள நிலையில் உள்ளது. இலங்கை அணி நடைபெறவுள்ள மினி உலகக் கிண்ண போட்டிகளில் பங்குபற்ற வேண்டுமாயின் 6ஆவது இடத்திற்கு எப்படியாவது முன்னேறியாக வேண்டும் என்பது மற்றொரு தகவலாகும்.



# நாட்டுக்கோட்டை நகரத்தார்
# புதிய கதிரேசன் கோவில் பம்பலப்பிட்டி

# மஹா சிவராத்திரி

சிவ விரதங்களில் முக்கியமானதான சிவராத்திரி விரதங்கள் யோக சிவராத்திரி, நிதிதிய சிவராத்திலி, பக்க சிவராத்திரி, மாத சிவராத்திரி, மகா சிவராத்திரி எனப் பல வகைப்படும். இவற்றுள் மாசிமாத அபரபக்கச் சதுர்த்தசித் திருநாளில் வரும் மகாசிவராத்தரி விரதம் மிக விசேஷமானது. மகா சிவராத்திரி விரதத்தை முன்னிட்டு எமது ஆலயத்தில் வீற்றிருக்கும் காசி லிங்கேஸ்வரருக்கு கீழ்க்கண்டவாறு அபிஷேக பூஜைகள் நடைபெறத் திருவருள் கூடியுள்ளது.

**மாலை 4.15** மணிக்கு சிவனுக்கு சாயரட்சை அபிஷேகம் 5.00 மணிக்கு பூஜை
**இரவு 7.15** மணிக்கு 1ஆம் ஜாம அபிஷேகம் 8.00 மணிக்கு பூஜை
**இரவு 10.00** மணிக்கு 2ஆம் ஜாம அபிஷேகம் 11.00 மணிக்கு பூஜை
**இரவு 11.45** மணிக்கு லிங்கோற்பவர் அபிஷேகம் 12.30 மணிக்கு பூஜை
**பின்னிரவு 1.15** மணிக்கு 3ஆம் ஜாம அபிஷேகம் 2.00 மணிக்கு பூஜை
**பின்னிரவு 3.30** மணிக்கு 4ஆம் ஜாம அபிஷேகம் 4.30 மணிக்கு பூஜை
**அதிகாலை 5.00** மணிக்கு அர்த்தஜாம பூஜை

1ஆம் ஜாமப்பூஜையைத் தொடர்ந்து லிங்கோற்பவக்கு விஷேட 'வில்வாஷ்டகம்' நடைபெறும் கலந்து கொள்ளும் அடியார்கள் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**மஹா சிவராத்திரியை முன்னிட்டு**
**இடம் பெறும் கலை நிகழ்ச்சிகள் - 26.02.2006**


இரவு 7.00 மணி - பண்ணிசை - இந்து சமய கலை கலாசார வளர்ச்சிப் பணிமன்றத்தினர், வெள்ளவத்தை

இரவு 9.00 மணி - இசைநிகழ்ச்சி - பாடுவோர் T.L. மகாராஜன், டாக்டர் சாண்டில்யள்.
இசை சிதாரா இசைக் குழுவினர்

பின்னிரவு 1.00 மணி - பக்திப் படக்காட்சிகள் நடைபெறும்.

இங்ஙனம்
நாட்டுக்கோட்டை
நகரத்தார்.


## மீண்டும் சானியா



**அண்மைக்காலமாக** சானியா மிர்சா டென்னிஸ் போட்டிகளில் அவ்வளவாக பிரகாசித்ததாக தெரியவில்லை. எங்கே இவர் பிரகாசிக்காமல் போய்விடுவாரோ என்று ஏங்கிய ரசிகர்களுக்கு கொடுத்துள்ளார் ஒரு பரிசை -

பெங்களூர் ஓபன் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டிகளில் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சானியா மிர்சா - தென் ஆபிரிக்காவின் லைசல் ஹூபர் இணை சாம்பியன் பட்டத்தை வென்றது!

கர்நாடக மாநிலத்தை லான் டென்னிஸ் சங்க மைதானத்தில் நேற்று இரவு நடந்த இறுதிப் போட்டியில் ரஷ்யாவின் எலீனா வெஸ்னீனா - அன்ஸ்டாசியா ரோடியோநோவா இணையை 6 - 3, 6 - 3 என்ற நேர் செட் கணக்கில் சானியா ஹூபர் இணை வென்றது.

மகளிர் ஒற்றையர் போட்டியில் இத்தாலியின் மாரா சென்டர்கெலோ 3 - 6, 7 - 6, 6 - 3 என்ற செட் கணக்கில் குரோஷியாவின் ஜெலீனா கோஸ்டானிக்கை தோற்கடித்து சாம்பியன் பட்டம் வென்றார்.

## எண்களின் பலன்கள் எப்படி?

| எழுத்துக்கள் | எண்கள் | கிரகம் |
|---|---|---|
| A,J,I,Y,Q | - 1 எண் | சூரியன் |
| B,K,R | - 2 எண் | சந்திரன் |
| C,G,L,S | - 3 எண் | குரு |
| D,M,T | - 4 எண் | ராகு |
| E,H,N,X | - 5 எண் | புதன் |
| U,V,W | - 6 எண் | சுக்கிரன் |
| O,Z | - 7 எண் | கேது |
| F,P | - 8 எண் | சனி |

உதாரணம்: D.VISAGAN
4 6 1 3 1 3 1 5 = 24

## பிறப்பெண் - 4, கூட்டெண் - 1

4, 13, 22, 31 போன்ற திகதிகளில் பிறந்து, பிறந்த திகதி, மாதம், வருடம் ஆகிய மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 1 வந்தால் ராகு, சூரியன் போன்ற ஆதிக்கத்தில் பிறந்தவராவர். பார்ப்பதற்கு ஓரளவு உயரமாகவும், அலை போன்ற முடியுடையவராகவும், எடுப்பான தோற்றமுடையவராகவும் இருப்பர். உஷ்ணமான உடல் அமைப்பு கொண்டவர்களாதலால், சிலருக்கு தலைமுடி உதிரும். சிற்றின்பத்தில் அதிக ஆர்வம் இருக்கும்; ஆனால் முறைகேடான விசயங்களை வெறுப்பர்.

இவர்களுக்குப் பேசுவதாலும், எழுதுவதாலும், உயர்வு உண்டாகும். இவர்களில் பலருக்கு நல்ல குடும்ப வாழ்க்கை அமைந்துவிடுகிறது. தன் மனதில் தோன்றுகின்ற கருத்துக்களை மறைக்காமல் வெளியிடுவர். பிறர் பேசுவதைப் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருக்காது குறுக்காகப் பேசுவர்.

இதை உணர்ந்து திருத்திக் கொள்வது நலம்.

எல்லோருக்கும் உதவும் மனப்பான்மை கொண்ட இவர்களை மற்றவர்கள் மதிப்பர். பலரிடம் நல்ல மனிதன் என்ற பெயரையும், ஒரு சிலரிடம் பொறாமையால் கெட்ட பெயரையும் எடுப்பர். யார் எதைக் கூறினாலும் நம்பாது தீர விசாரித்து ஒரு பிரச்சினையை முடிவெடுக்கும் தன்மை கொண்டவராதலால், இவர்களைக் கண்ட அனைவரும் மரியாதை கொடுப்பர். தான் ஒரு தவறு செய்தாலும் உணர்ந்து திருந்திவிடுவர்.

பிறருக்குத் தீங்கு செய்யாத மனப்பான்மை கொண்ட இவர்கள், நேர்மையைத் தவிர போலிகளை வெறுப்பவராவர். இவர்களின் நட்பைப் பெறப் பலர் முன்வருவர். ஆனால், இவர்களுக்கு ஒருவரைப் பிடிக்கவில்லை என்றால் எவ்வித தீங்கும் செய்ய முற்பட்டால், எதிரி தப்பவே முடியாது. நல்ல புத்திக்கூர்மை உடையவராதலால் எங்க சென்றாலும் பல விசயங்களைச் சேகரித்துக் கொண்டே இருப்பர்.

ஒருவன் கேட்கும் கேள்விகளுக்கு மின்னல் வேகத்தில் பதில் கூறுவர். சாதாரண உத்தியோகத்தில் இருந்தாலும், தன் தனித்திறமையால், உயர்ந்த இடத்தைப் பிடிப்பர். அப்படி உயர முடியவில்லை என்றால் இவர்களுக்குப் பெயர் பொருத்தமானதாக அமையவில்லை என்றுதான் கருதவேண்டும். சிலர் உத்தியோகமும் பலர் சொந்தத் தொழிலும் செய்து வருகின்றனர். உத்தியோகத்தில் இருக்கும் சிலர் சொந்தமாகத் தொழில் செய்ய முயல்வர். இன்னும் சிலர் பேச்சாளராகவும் எழுத்தாளராகவும் புகழை அடைவர். நண்பர்கள் புடைசூழ வாழும் இவர்கள் பிறருக்கு உதவ முன்வந்து சில விசயங்களில் மாட்டிக் கொள்ளுவார்கள். ஆனால் பெயர் பொருத்தமானதாக அமைந்திருக்குமேயானால் எவ்விதத் துன்பம் வந்தாலும் இறுதியில் நன்மையாகவே முடியும். சாதாரண மனிதனாக இருந்து, படிப்படியாக வாழ்க்கையின் உச்சநிலையை அடைவர்.

எவ்வளவு பணம் வந்தாலும், செலவு காத்துக் கொண்டிருக்கிறதே என்று வேதனைப்படுவர். நாணயமாகவும், நம்பிக்கையாகவும் நடந்து கொள்வதால் இவர்களைப் பலர் ஏற்றுக் கொள்ளுவர். புகழ்ச்சியில் மயங்குவதால், இவரைப் புகழ்ந்து பேசி நண்பர்கள் இவர்களிடம் காரியம் சாதித்துக் கொண்டு விடுவர்.

சாப்பாட்டுப் பிரியரான இவர்களுக்கு நல்ல ருசியான சாப்பாடு எப்பொழுதும் தேவை. ஆனால் ஒரு காரியத்தில் இறங்கிவிட்டால் எதையும் லட்சியம் செய்யாமல் உழைப்பர்.

இந்த எண்ணிக்கையில் பிறந்த பலர் உத்தியோகத்திலும் தொழிலிலும் உயர்ந்த நிலையில் இருப்பதை நான் அறிவேன். ஆனால் பெயர் பொருத்தமானதாக அமையாதவர்கள் திறமை இருந்தும் கஷ்டத்திற்குள்ளாகின்றனர். இதனால் பெயரை நன்கு மாற்றி அமைத்துக் கொண்டு நல்ல மனைவி, நல்ல குழந்தை, நல்ல ஆரோக்கியம், நிறைந்த செல்வம் பெற்றுச் சிறப்பாக வாழலாம். நண்பர்களது ஆதரவு என்றும் உண்டு.

தொழில்:

பேச்சாலும், எழுத்தாலும் பொருள் சேர்க்கும் வாய்ப்பு உண்டு. கமிசன், வாகனம், நெருப்பு, இரும்பு சம்பந்தமான தொழிலாலும், நான்கு கால் சாமான்களாலும், பொருள் சேர்க்கும் யோகம் உண்டு.

நோய்:

இவர்களுக்கு அதிக உஷ்ணமான நோய்கள் அனைத்தும் வரும். பைல்சு, ரத்த அழுத்தம், வாயு கோளாறு சம்பந்தப்பட்ட நோய்கள் வருவதால், முன்கூட்டியே தவிர்க்க முயல வேண்டும். பொருத்தமான எண்களில் பெயரை அமைத்துக் கொண்டால் நோயிலிருந்து விடுபடலாம்.

பெயர் அமைக்கும் முறை:

ராகு, சூரியன் போன்ற ஆதிக்கம் கொண்ட இவர்களுக்கு, சூரியன், சுக்கிரன் ஆதிக்கம் வருமாறு பெயரை 10, 19, 37, 46, 64, 73, 15, 24, 33, 42, 51, 60, 69 போன்ற எண்களில் அமைத்துக் கொள்ளுவது சிறப்பாகும். தான் செய்கின்ற வியாபார விலாசத்தையும் இந்த எண்ணிக்கையில் அமைத்துக் கொண்டால் லாபம் அடையலாம்.

பின்பற்ற வேண்டியவை:

யோகமான எண் - 1, 6.
யோகமான திகதிகள் - 1, 10, 19, 28; 6, 15, 24.
யோகமான மோதிரக்கல்
- கோமேதகம், வெளிர் நீலக்கல்(ஆறு நூல் ஓடுகின்ற கல் மிகச் சிறப்பானது).
யோகமான நிறம்
- மஞ்சள், நீலம்.
ஆகாத திகதிகள்
- 8, 17, 26, ஆனால் எதிர்பாராத நன்மை அளிக்கும்.
ஆகாத நிறம் - கறுப்பு, சிவப்பு.

அடுத்த வாரம் பிறப்பெண் 4, கூட்டெண் 2 பற்றிப் பார்ப்போம்

# வெற்றி வீரர் வில்லியம் (1027 - 1087- நூற்றாண்டு)

## உலகை வியக்க வைத்தவர்கள்

சென்றவாரத் தொடர்ச்சி

**நார்மானியர்கள்** திறமைமிக்க ஆட்சியாளராக இருந்தனர். ஆகவே ஆங்கிலேய அரசாங்கம் ஐரோப்பாவிலே ஆற்றல்மிகு திறமையுள்ள அரசாங்கமாக மாறியது.

புதிய ஆங்கில மொழி வளர்ச்சியடைந்தது நார்மானிய வெற்றியின் மற்றொரு முக்கிய விளைவாகும். நார்மானிய வெற்றியின் பயனாக ஆங்கிலத்தில் ஏராளமான புதிய சொற்கள் இணைந்தன. அவை எவ்வளவு ஏராளமானவையென்றால் தற்கால ஆங்கில அகராதிகளில் ஆங்கிலோ-சாக்ஸானிய மூலச் சொற்களைவிட பிரெஞ்சு அல்லது லத்தீன் மூலச் சொற்களே மிகுதியாக உள்ளன. மேலும், நார்மானிய வெற்றிக்குப் பின் மூன்று அல்லது நான்கு நூற்றாண்டுகளாக



ஆங்கில இலக்கணம் விரைவாக மாறியது. பெரும்பாலும் எளிதானது. நார்மானியர் வெற்றி பெறவில்லையெனில், இன்றைய ஆங்கிலம் இடைக்கால ஜெர்மனிய அல்லது டச்சு மொழியிலிருந்து சற்று வேறுபட்டதாகவே இருக்கும். ஒரு தனிமனிதனின் வாழ்க்கையினால் ஒரு முக்கிய மொழி இன்றைய நிலையை அடைந்திருப்பதற்கு இது ஒன்று தான் எடுத்துகாட்டாகும். (இன்று ஆங்கிலம் உலகில் மிக முக்கியமான மொழியாக இருப்பது இங்குக் குறிப்பிடத்தக்கது).

நார்மானிய வெற்றியினால் பிரான்ஸில் ஏற்பட்ட விளைவையும் இங்கு குறிப்பிடலாம். அதன் பிறகு ஏறக்குறைய நான்கு நூற்றாண்டுகளாக ஆங்கிலேய மன்னர்களுக்கும் (அவர்கள் நார்மானியர் வழி வந்தோராக இருந்தனர்) பிரெஞ்சு மன்னர்களுக்குமிடையே நீண்ட போர்கள் நடைபெற்று வந்தன. இப்போர்கள் நார்மானிய வெற்றியினால் விளைந்தவை. 1066க்கு முன் இங்கிலாந்துக்கும் பிரான்ஸுக்குமிடையே போர்கள் நிகழ்ந்ததில்லை.

பல வகைகளில் இங்கிலாந்து பிற ஐரோப்பியக் கண்டத்தின் நாடுகளிலிருந்து பெரிதும் வேறுபட்டுள்ளது. இங்கிலாந்து ஒரு பெரிய பேரரசை நிறுவியதாலும், மக்களாட்சி நிறுவனங்களை அமைத்ததாலும் உலகின் பிற பகுதிகளில் பெரும் விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. இது அதன் அளவின் விகிதத்திற்கு விஞ்சியதாக இருக்கிறது. பிரிட்டிஷ் அரசியல் வரலாற்றில் இவ்வியல்புகள் எந்த அளவிற்கு வில்லியத்தின் நடவடிக்கைகளின் விளைவாக இருக்கின்றன?

தற்கால மக்களாட்சியானது, எடுத்துக்காட்டாக, ஜெர்மனியில்லாமல், ஏன் இங்கிலாந்தில் மட்டும் வளர்ச்சியுற்றது என்பதைப் பற்றி வரலாற்றறிஞரிடையே கருத்து வேறுபாடுகள் உள்ளன. ஆனால், ஆங்கிலேயப் பண்பாடும் நிறுவனங்களும் ஆங்கிலோ-சாக்ஸானிய, நார்மானியப் பண்பாடுகள் நிறுவனங்கள் ஆகியவற்றின் கலப்பாகும். இக்கலப்பு நார்மானிய வெற்றியின் விளைவேயாகும். ஆயினும், பிற்காலத்தில் வளர்ந்த ஆங்கிலேய மக்களாட்சி வல்லாட்சியாளரான வில்லியமே காரணமெனக் கூறுவது பொருந்தாதென நினைக்கிறேன். நார்மானிய வெற்றிக்குப் பிந்திய அடுத்த நூற்றாண்டில் இங்கிலாந்தில் மக்களாட்சியின் இயல்புகள் தோன்றவில்லை என்பது உண்மை.

பிரிட்டிஷ் பேரரசு உருவானதைப் பொறுத்தவரையில், வில்லியத்தின் வெற்றியின் விளைவுகள் தெளிவாகத் தெரிகின்றன. 1066க்கு முன்னால், இங்கிலாந்து படையெடுப்புக்களுக்குள்ளாகியிருந்தது. 1066க்கு பிறகு நிலைமை மாறியது. வில்லியம் நிறுவி, அவரது வழி வந்தோர் பேணி வந்த வலிமை மத்திய அரசாங்கத்தின் காரணமாகவும், அந்த அரசாங்கம் நிறுவிய படை பலத்தின் காரணமாகவும் இங்கிலாந்தின் மீது எந்நாடும் படையெடுக்கவில்லை. அதற்கு மாறாக, இங்கிலாந்து கடல் கடந்து படையெடுப்பதில் தொடர்ந்து ஈடுபட்டு வந்தது. ஆகவே ஐரோப்பாவின் அதிகாரம் கடல் கடந்து பரவியபோது, வேறு எந்த ஐரோப்பிய நாட்டையும்விட இங்கிலாந்து மிக அதிகமான குடியேற்ற நாடுகளைப் பெற்றிருந்ததில் வியப்பில்லை.

இங்கிலாந்தின் வரலாற்றில் பிறகு நடைபெற்ற எல்லாவற்றிற்கும் வெற்றி வீரர் வில்லியமே காரணமெனக் கூற முடியாது என்பது உண்மை. ஆயினும், பிறகு நிகழ்ந்தவற்றிற்கு நார்மானிய வெற்றி மறைமுகக் காரணமாக இருந்தது. ஆகவே வில்லியத்தின் வெற்றியினால் ஏற்பட்ட நீண்டகால விளைவுகள் மிகப் பெரியவை எனலாம்.

**அடுத்த வாரம்**
**அரிஸ்டாட்டில்**
**வியக்க வைப்பார்....**

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை
*-காதில பூ கந்தசாமி-*

வணக்கமுங்கோ,

**கா**லத்துக்குக்காலம் வாயில அகப்படுறதை வைச்சுக் கொண்டு வள்ளம் ஓட்டிறதே கொஞ்சப்பேரின்ர வாடிக்கையாப் போட்டுதுங்கோ. மாவீரர் தின உரையில ரெண்டில ஒண்டை எங்கட தலைவர் சொல்லப் போறார் எண்டு கொஞ்சப்பேர் கூறு போட்டு வியாபாரம் பண்ணிக் கொண்டிருந்திச்சினம். பிறகு என்ன நடந்தது? உருப்படியா ஒண்டையும் சொல்லாத தாலை கப்சிப்பெண்டு வாயைப் பொத்திக் கொண்டு இருந்திச்சினம். பிறகு கண்டபடி கிளைமோர் வெடிக் கவும் அந்தா யுத்தம் வரப்போகுது; இந்தா வரப்போகுதெண்டு வாயா லையே வரிஞ்சு கட்டிச்சினம். சனமும் நம்பி ஓட்டமும் நடையுமா இருந்த இடத்தை விட்டுப் போட்டு அலைக் கழிஞ்சு திரிஞ்சுதுகள். இப்பவும் ஓடின சனம் வீடு வந்து சேரயில்லை. பிறகு எரிக் சொல்ஹெய்ம் வருவார். அவ ரிட்ட தனிநாட்டுப் பிரகடனத்தை அறிவிக் கப்போகினம். அதோடை ரெண்டில ஒரு முடிவு வந்துடும் எண்டிச்சினம். எரிக்கும் வந்தார்; வன்னிக்கும் போனார். கூடவே பரபரப்பை அதிகப் படுத்துவதற்காக பாவம், பிரஸர் வருத்தக்காரர் மதுபாலாவையும் பாரியார் சகிதமா வன்னிக்கு வரவழைச்சிச்சினம். என் னமோ ஏதோ வெண்டு வாயைப் பிளந்து கொண்டு பார்த்துக் கொண்டிருந்தவைக்கு, 'நாங்கள் பேச்சுக்குத்தயார்; அதுவும் ஜெனீவாவில பேசப்போறம். இன்ன இன்னார்தான் பேசப்போகினம். இவைக்குச் செயலாளரா அடேல் அம்மையாரும் போவா' எண்டு உப்புச்சப்பில்லாம அறிவிச்சிச்சினம். அதுவரைக்கும் தேசிய உணர்ச் சியைப் பூசிக்கொண்டு அரிக்குது அரிக்குதெண்டு சொறிஞ்சு கொண்டிருந்தவையின்ர அரிப்பு அடங்கிப்போயிட்டுது.

ஓடின சனமெல்லாம் 'ஏண்டாப்பா வீட்டு வாசலை விட்டுப்போட்டு உவை யின்ர விரட்டுக்கு எடுபட்டு ஓடி னாங்கள்' எண்டு இப்ப காடு கரை யில நிண்டு தலையில அடிச்சுக் கொள்ளினம். வரச் சொன்னதுக்கு வந்த சனம் மரங்களுக்குக் கீழயும் கிடுக ளுக்குக் கீழயும் வாடிக் கொண் டிருக்கேக்க 'வந்தா மலை போனா' அதெண்ட கணக்கா ஜெனீவாவுக்கு ஆக்கள் போயிட்டினம்.

போகேக்க என்ன சும்மாவே போயிருக் கினம். போரா, சமாதானமா எண்டது ஜெனீவாவில தெரியும் எண்டு சொல்லிப் போட்டுப் போயிருக் கினம். வெறும் வாயிக்கு அவல் கிடைச்சமாதிரி ஊருக்க உசுப்பேத்திக் கொண்டு திரியிறவைக்கு உந்த ஒரு சொல் போதுமெல்லோ! அவை அதைக் காவிக்கொண்டு திரியின முங்கோ. பெடியள் போயிருக்கினம். சண்டையோ சமாதானமோ எண்டது வார இருபத் திரெண்டு இருபத்தி மூண்டில தெரிஞ்சு போடும். அனே கமா பெடியள் சண்டை யெண்ட வெற்றியோடைதான் வன்னி வந்து சேருவினம் எண்டு கதைக்கத் தொடங் கிட்டினம். இனி ஜெனீவாவில என்ன நடக்கப்போகுதெண்டு கொஞ்சப்பேர் தலையைச் சுரண்டிக் கொட்டப் போகினம். எனக்கென்னவோ ஜெனீ வாவில பேசப் போனவை பெரிசா ஒண்டையும் செய்யப் போறதில்லை. தங்களுக்கு சாதகமா ஏதாவது சரிவந்திட்டுதெண்டால் சொப்பிங்கை முடிச்சுக் கொண்டு வன்னி திரும்பு வினம்.

இவைக்கு செயலாளராப் போயிருக்கிற அடேல் என்ன செய்யப் போறா எண்டு யாரும் யோசிச் சியளோ? போன தட வையும் தாய்லாந்துக்குப் போயிருக்கேக்க உற்சாகப் பானம் அருந்தியே கடன் வச்சவை. ஜெனீவாவிலையும் ஒரு கணக்குக்கு பில் வப்பினம். மதுபா லாவுக்கு உபசரிப்புச் செய்யப் போற வையின்ர பதவிக்குப் பேர் தானுங்கோ செயலாளர் பதவி. சும்மா சொல்லக் கூடாது. உலகம் சுற்றுற துக்குக் கிடைச்ச சந்தர்ப்பத்தை தம்பதி சகிதமாக நல்லா அனுபவிக்கினம். தமிழ் மக்களின்ர பெயரா லையும் விடுதலையின்ர பெயரா லையும் இன்னும் என்னென்ன நடக்கப் போகுதோ? பொறுத்திருந்து பாப்பம். அதுவரைக்கும் ஊருக்குள்ள யாரும் உசுப்பேத்திறான் எண்டு பப் பாவில ஏறிப்போடோதேங்கோ புரியுதோ.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

(23.02.2006 தொடங்கி 01.03.2006 வரை)

**சோதிட மாமணி**
**தில்லை**

## இந்த வாரக் கிரக நிலை

கும்பம் - சூரியன். மீனம் - புதன், இராகு. இடபம் - செவ்வாய். கர்க்கடகம் - சனி. கன்னி - கேது. துலாம் - வியாழன். மகரம் - வெள்ளி.
சந்திரன் தனு, மகரம், கும்பம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம் :**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.) தொழில் மேன்மை, உயர்ந்த நிலை, பெரியோர் சகாயம், வெளியிட வாழ்க்கை, அந்நியர் நட்பு, கௌரவக் குறைவு, குடும்பப் பொறுப்பு, உத்தியோக மேன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**மிதுனம் :**
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.)
தொழில் மாற்றம், மனக்குறை நீங்கும், பெரியோர் நட்பு, வெளியிட வாழ்க்கை, பயனுள்ள செயல், குடும்ப மகிழ்ச்சி, உத்தியோக பயம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06.**

**சிங்கம் :**
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்.)
தொழில் அலைச்சல், கடன் பயம், மனக்கலக்கம், பெரியோர் சகாயம், வெளியிட வாழ்க்கை, அந்நியர் நட்பு, குடும்பக் கவலை, உத்தியோக நன்மை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07.**

**துலாம் :**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.)
தொழில் பலிதம், பணவரவு, பிரயாணக் கஷ்டம், துயர் நீங்கும், உயர்ந்தோர் நட்பு, குடும்பப் பொறுப்பு, உத்தியோகச் சிக்கல், மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் கடின உழைப்பு.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

**தனு :**
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்.)
தொழில் முயற்சி, மனப்பயம், வீண்பிரயாசம், வெளியிட வாழ்க்கை, தேகசுகக் கஷ்டம், குடும்ப நன்மை, தூர இடப்பயணம், உத்தியோக கவலை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02.**

**கும்பம் :**
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.)
தொழில் நன்மை, பெரியோர் உதவி, மனக்குறை நீங்கும், காரியானுகூலம், உறவினர் உபத்திரம், குடும்பக் கலகம், உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் அனுகூலம், மாணவர் கல்வி உயர்வு, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02.**

**இடபம் :**
(கார்த்திகைப் பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.)
தொழில் இலாபம், பொருள் வரவு, மனக்குறை நீங்கும், உயர்ந்த நிலை, குடும்பப் பொறுப்பு, பிள்ளைகளால் கவலை, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**கர்க்கடகம் :**
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.)
தொழில் பயம், கடன் தொல்லை, புதிய முயற்சி, உறவினர் உதவி, தூர இடப் பயணம், இனசன மகிழ்ச்சி, உத்தியோக கவலை, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**கன்னி :**
(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.)
தொழில் நன்மை, காரியானுகூலம், பெரியோர் உதவி, மனக்குறை நீங்கும், பிரயாண மிகுதி, குடும்பத் தொல்லை, உத்தியோகக் கஷ்டம், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**விருச்சிகம் :**
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை.)
தொழிற் பற்று, மனமகிழ்ச்சி, பணவரவு தடை, மனக்கலக்கம், உறவினர் உபத்திரம்; புதிய முயற்சி, குடும்பப் பாரம், உத்தியோக மகிழ்ச்சி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 03.**

**மகரம் :**
(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.)
தொழில் நன்மை, பணவரவு, புதிய முயற்சி, பிரயாண மிகுதி, மனக்குறையதிகம், உத்தியோகப் பேறு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மந்தம், சோம்பல் தன்மை, விவசாயிகள், வியாபாரிகள் கடின உழைப்பு.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**மீனம் :**
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி.)
தொழில் நன்மை, காரியானுகூலம், தேகசுகக் கஷ்டம், பெரியோர் உதவி, வெளியிட வாழ்க்கை, உயர்ந்தோர் நட்பு, உத்தியோக சிக்கல், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் கடின உழைப்பு.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

Regd. as a News Paper at the G.P.O.(QD/06/NEWS/2006)


# இதய வீணை

தினமும்

மாலை 6.30 தொடக்கம்
இரவு 8.30 மணி வரை

அடக்கப்பட்ட மக்களின் உணர்வுகள் கருத்துக்களாய் கதைகளாய்... செய்திகளாய்... நமது காதுகளில்

கிழக்கு மாகாணம் 107.9, 104.5
வட மாகாணம் 92.2
கொழும்பு 105.6

நாடு முழுவதும் தென்றல் FM அலைவரிசையில்....

இதய வீணையின் பொதுத் தொடர்புகளுக்கு
இதய வீணை
த.பெ. இல - 1665
கொழும்பு.
தொலை பேசி :- 0773114208
Web - www. tirradio.com
E-Mail : idayaveenai@hotmail.com
info@tirradio.com

இலங்கையில் ஒலிபரப்பாகும்
இதயவீணை நிகழ்ச்சிகள் இப்பொழுது
ஐரோப்பிய நாடுகளில் வாழும்
எமது தாயக உறவுகளுக்காக
செய்மதி ஊடாகவும் ஒலிபரப்பப்படுகிறது

| | |
|---|---|
| Satellite : | HotBird - 6 |
| Location : | 13° East |
| Frequency : | 10971MHz |
| Polarity : | Horizontal |
| Symbol rate : | 27.500 Msb |
| FEC : | 3/4 |
| Transponder : | 133 |


## சிலைகள்


**இது** ஒரு ரஷ்ய நாட்டுச் சாதனை. யூலியா பிரசிக்கா எனும் இவர் சிலைகள் செய்வதில் பெரும் ஆர்வமுடையவர், தனது பொழுது போக்கிற்காக சிலைகள் செய்து அதனை வர்ணம் தீட்டவும் செய்வார். இவர் 51 சிலைகள் செய்து அதனை வர்ணமும் தீட்டி முடித்துள்ளார். இதில் என்ன விசேஷம் என்றால் சிலைகளின் அதிகூடிய உயரம் 54 செ.மீ. ஆகக் குறைந்த உயரம் 0.31செ.மீ. என சிலைகளை செய்து சாதனையும் படைத்துள்ளார் அம்மணி.






## ச்சித் தா! ச்சித் தா!


**ஐயோ** என்ன பழக்கம் இது என்று யோசிக்கிறீர்களா? இவர்கள் ஒருவருக்கொருவர் மீது இருக்கும் அன்பு அதிகமானதாலேயே இப்படி கட்டிக் கொண்டு உம்மா கொடுத்துக்கொள்கிறார்கள் என்றால் இல்லவே இல்லை. உலக சாதனை செய்வதற்காக இவர்கள் இருவரும் உம்மா கொடுத்துக் கொள்கிறார்கள். இவர்கள் தொடர்ந்து 30 மணித்தியாலங்கள் 59 நிமிடங்கள் 29 செக்கன்கள் முத்தம் கொடுத்து உலகை அசத்தியிருக்கிறார்கள். இடையிடையே சிறிய இடைவெளி கொடுத்தாலும் மொத்தம் 30 மணித்தியாலம் என்பது கொஞ்சம் ஓவர் தானுங்கோ....



## மிகச் சிறிய இரட்டையர்

**உயரம்** குறைந்தவர்களைப் பற்றி இப் பகுதியில் நாம் கூறிவந்துள்ளோம். ஆனால், இங்குள்ளவர்களோ குட்டையர்களில் விசேடமான குட்டையர்கள் தான். அதுவும் இன்று வரை வாழும் இரட்டையர்கள் என்ற பெருமையைப் பெற்றவர்கள். இவர்கள் 3ஆம் திகதி டிசம்பர் 1951 இல் பிறந்தவர்கள். இவர்களின் உயரம் ஆக 86.3செ.மீ (2அடி 10 அங்குலம்) அமெரிக்காவைச் சேர்ந்த ஜோன், ஜேர்க் ரைஸ் எனப்படும் இவர்கள் செல்லக் குள்ளர்கள் என்றும் அழைக்கப்படுகிறார்கள்.





## பாய்ச்சல்

**மலைப்பாங்கான** பிரதேசங்களின் மோட்டார் சைக்கிள்களைப் பாய்ந்து பாய்ந்து செலுத்துவது ஒரு சாதனை விளையாட்டுதான். இதன்போது மோட்டார் சைக்கிள் உயரத்திற்கு பாய்ந்து விழும். அந்தவகையில் இங்குள்ளவரும் அதிகூடிய உயரத்தைப் பாய்ந்தவர் என்ற பெருமையைக் கொண்டவர். இவர் பாய்ந்த உயரம் 10.67 மீட்டர் (35அடி) ஆகும்.

## ஒலிம்பிக்

**ஒலிம்பிக்** போட்டி என்றாலே வீர வீராங்கனைகளுக்கு ஜாலிதான். அந்த வகையில் அதி கூடிய நாடுகள் பங்கு பற்றிய ஒலிம்பிக் போட்டியாக 2004 ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டி கருதப்படுகிறது. இதில் மொத்தம் 201 நாடுகளைச் சேர்ந்த வீர வீராங்கனைகள் பங்கு பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. முன்னெப்போதும் இல்லாமல் 2004 ஒலிம்பிக்கில் நாடுகளின் அதிகரிப்பானது விளையாட்டுத்துறையில் நாடுகள் முன்னேறி வருவதையே காட்டுகிறது.



## ஐயோ! கரப்பான்

கரப்பான் பூச்சிகளைக் கண்டால் சிலருக்கு பயம், சிலருக்கு ஒரு வித வெறுப்பு. அதுவும் பெண்களுக்கு அதனைக் கண்டால் பெரிதும் பயம் தான். கரப்பான் பூச்சிகள் மூலம் சில வகை நோய்களும் பல வகையான தொற்றுக்களும் பரவிவருவதை விஞ்ஞானிகள் உறுதிப்படுத்தியிருக்கிறார்கள். அதனால் தான் என்னவோ சிலருக்கு அதனைப் பிடிப்பதில்லையாம். ஆனால் சீனா, ஜப்பான் போன்ற நாடுகளில் கரப்பான் பூச்சிகளைப் பொரித்து கடலைப் பொரியல் போல் பாதையோரங்களில் வைத்து விற்பதை நாம் அதிகம் தொலைக்காட்சிகளில் கண்டிருப்போம். சரி இனி விஷயத்திற்கு வருவோம். இங்குள்ள கரப்பான் உலக சாதனைக்குரிய கரப்பான் என்வொன்று பார்க்கிறீர்களா? ஆம் இதன் நீளம் 7.6 செ.மீ (3 அங்குலம்) ஆகும். அத்துடன் இதன் அகலம் 97 மில்லிமீற்றராகும் (3.8அங்குலம்). எங்கு இவ்வளவு பெரிய கரப்பான் உள்ளது என்று யோசிக்கறீர்களா? இது ஜப்பான் நாட்டில் தான் இருக்கிறதாம். ஜப்பானில் உள்ள கரப்பான்கள் நம் நாட்டு கரப்பான்களை விட சந்து பெரியதாம்.



இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை நெல்சன் பிளேஸ், 16 A ஆம் இலக்கத்தில் டிடி என்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தால் நாவலையில் உள்ள சமனல கிராபிக்ஸ் அச்சகத்தில் பெப். 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.